# University of Jaffna



## Siva Yogarswami Memorial Lecture-2024

**"The Socio-Religious and Philosophical perspective in the Spiritual Realm of SivaYogarswamikal"**

by

**Dr.R.Lambotharan**

Director of International Medical Health Organization, Canada.

Founder, Saiva Siddhantha Peedam, Canada.

on

**Thursday, 19th December 2024**

**at 3.00 p.m**

at

**Kailasapathy Auditorium,**

**University of Jaffna.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Siva Yogarswami Memorial Lecture-2024



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணைவேந்தரின் வாழ்த்துச்செய்தி

ஈழத்துச் சித்தர் மரபில் சிவதொண்டராகத் திகழ்பவர் சிவயோகசுவாமிகள் ஆவார். இவரது சிந்தனைகளைத் தாங்கிய ஆறாவது நினைவுப்பேருரைக்கு வாழ்த்துத் தெரிவிப்பதையிட்டு பெருமிதம் அடைகின்றேன்.

யாழ்ப்பாணத்து மாவிட்டபுரத்தில் அம்பலவாணன் செல்லாச்சிஅம்மை தம்பதியர்களுக்கு 1872.05.29 திகதி அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்தவரே சிவயோகசுவாமிகள் ஆவார். இவர் தன்னைத்தானே உணரும் பக்குவமுடையவர். யோக நிஷ்டையில் ஆழ்ந்து தியானிப்பவர். நல்லூர் தேரடியை நிட்டைகூடும் இடமாகக் கொண்டவர். நல்லூர் செல்லப்பா சுவாமியை குருவாகக் கொண்டவர்.

சிவயோகசுவாமிகளது சிந்தனைகள் "நற்சிந்தனைகள்" எனப் போற்றப்படுகின்றன. முக்காலத்தையும் உணரும் பாங்கும், ஆன்மிக ஈர்ப்பினாலும் இவரை நாடி வந்த சீடர்கள் பலர். அச்சீடர்களது செயற்பாடுகளும் தன்னலம் கருதாச் செயல்பாடுகளாய் அமைந்தன. அவ்வுயர்ந்த சிந்தனைக்கு "சிவதொண்டன் நிலையம்" தக்க எடுத்துக்காட்டாகும். சிவயோகசுவாமிகள் தான் பெற்ற ஞானவித்தையை நாடெங்கும் பரப்புவதற்குச் சீடர்களைப் பெற்றிருந்தார். மார்க்கண்டு சுவாமிகள், செல்லத்துரைசுவாமிகள், சந்தசுவாமிகள் (சோல்பரிபிரபுவின் மகன்), சுப்ரமணியசுவாமிகள் (ஹாவாய் ஆதீனம்), ஜேர்மன்சுவாமிகள் (கௌரிபாலா), பரிநரிக்குட்டி சுவாமிகள் (அவுஸ்ரேலியா), விநாயகமூர்த்தி ஆசிரியர் என்போர் அவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் முன்னெடுக்கப்படும் ஆறாவது நினைவுப்பேருரையை சைவசித்தாந்த சிந்தனையும் சைவவாழ்வும் வாழ்ந்து வரும் வைத்திய கலாநிதி இராமநாதன் லம்போதரன் அவர்களால் நிகழ்த்தப்படுகின்றமை மிகுந்த முக்கியத்துவமுடையது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழா ஆண்டில் இந்துக் கற்கைகள் பீடத்தினால் ஒழுங்கமைக்கப்படும் இந்நினைவுப் பேருரையினை ஆற்றுபவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட வைத்தியப் பட்டதாரி ஆவார். இவர் யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையில் சைவமரபு வழுவாது வாழ்ந்து தற்போது கனடா நாட்டில் வசித்து வருகின்றார். இவர் சைவமரபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தழைக்கக் கனடாவில் சைவசித்தாந்த பீடத்தை உருவாக்கிச் செயலாற்றி வருபவர். யோகர்சுவாமிகளின் நற்சிந்தனைகள், திருமுறைகள் பற்றி தமது ஆன்மிக நாட்டம் கொண்டு பாராயணம் நிகழ்த்தி வருபவர். சமூக வலைத்தளங்களில் சமூக நலன் கருதி வினா விடையாக சைவசித்தாந்த உண்மைகளையும் உட்பொருளையும் விளக்கியுரையாற்றும் துடிப்புள்ள செயல் வீரர் ஆவார். இவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மரபை அடியொற்றி வாழ்பவர். கனடா நாட்டில் சைவமும் தமிழும் மிளிரவேண்டும் எனத் தமது பணிகளைப் பயன் கருதாது ஆற்றி வருபவர் ஆவார். இவர் சமய, சமூக, தத்துவ நோக்கில் சிவயோக சுவாமிகளின் ஆன்மீகத்தளம் (The Socio-Religious and Philosophical Perspective in the Spiritual Realm of Sivayogar Swamikal) எனும் கருப்பொருளில் உரையாற்றுகின்றார்.

சிவயோக சுவாமிகளின் மகாசமாதி தினத்தையொட்டி நிகழவிருந்த இந்நிகழ்வு நினைவுப்பேருரை மார்கழி மாதத்து ஆயிலிய நட்சத்திரத்தில் நிகழ இருப்பது சுட்டிக்காட்டத்தக்கது.

பேராசிரியர் கலாநிதி சி. சிறிசற்குணராஜா

துணைவேந்தர்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய, சமூக, தத்துவ நோக்கில் சிவயோகர் சுவாமிகளின் ஆன்மீகத்தளம்

## The Socio-Religious and Philosophical Perspective in the Spiritual Realm of Sivayogar Swamikal

**ஓசை பெற்று உயர் பாற்கடல் உற்று ஒரு**
**பூசை முற்றவும் நக்குபு புக்கென**
**ஆசை பற்றி அறையலுற்றேன் மற்று இக்**
**காசுஇல் கொற்றத்து இராமன் கதை அரோ.**

**எல்லார்க்குந் தம்பிரான் என்னை வந்து ஆண்டுகொண்டான்**
**கொல்லேன் பொய் சொல்லேன் யான் குருமொழியை மறக்கிலேன்**
**நில்லாத காயத்தை நிலையெனவே எண்ணுகிலேன்**
**செல்லாரும் பொழில்சூழும் இலங்கை என் திருநாடே**

அறிமுகம்:

சிவயோகர் சுவாமிகள் நினைவுப்பேருரை நிகழ்வுக்கு வருகை தந்திருக்கும் அறிஞர் பெருமக்களே, ஆன்மீக சீலர்களே, மாணவச் செல்வங்களே உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம். நினைவுப்பேருரை என்பது வெறுமனே இறந்த ஒருவரை நினைவு கூர்ந்து அவரை மரியாதை செய்யும் நிகழ்வு அல்ல. நினைவுப்பேருரை என்பது நம்மிடையே வாழ்ந்து மறைந்துபோன ஒருவரை அவரின் வாழ்க்கை, செயல்கள், வாக்கு, எடுத்துக்காட்டுகள், முன்னுதாரணங்கள் மூலமாக மீளக் கட்டமைத்து, உயிரூட்டம் கொடுத்து, அவரை அறிந்தும் அறியாமலும் மறந்தும் மறவாமலும் இருக்கின்ற இன்றுள்ள மக்கள் முன்னிலையில் நிறுத்தி நாம் அவரை இந்த உரையினூடாக அணுகவும், அறியவும், புரியவும் வைத்து, அவரை எம்முடன் உறவாட வைத்து, எம்மை அவருடன் ஐக்கியப்படுத்தி அவரை எம்முடன் அகமயப்படுத்தும் முயற்சி எனக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையிலே இந்த வருடம் இந்த சிவயோகர் சுவாமிகள் நினைவுப் பேருரையை வழங்கும்படி என்னை அழைத்தமை எனக்குப் பலவகையிலும் உவகையும் பெருமையும் தருகின்றது என்றால் அது மிகையாகாது. இது தனிப்பட்ட முறையில் எனக்கு இரண்டு வகைகளில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைகின்றது. முதலாவதாக சிவயோகர் சுவாமிகளுடன் அணுக்கத் தொடர்பும் ஆசியும் உடைய எனது குடும்ப பாரம்பரியம். இரண்டாவது நினைவுப்பேருரையை ஒழுங்குபடுத்தி நிகழ்த்தும் இந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாணவப் பாரம்பரியம். 1984 இல் இருந்து 1991 வரையான காலப்பகுதியில் மருத்துவபீடத்தில் கல்விகற்று உருவான மருத்துவன் நான். இந்த இரண்டு பகுதியினருக்கும் எனது ஆத்மார்த்தமான நன்றிக் கடனைச் சமர்ப்பிக்கும் கிடைத்தற்கரிய பெரும்பேறாக நான் இந்த வாய்ப்பைக் கருதி இறும்பூதடைகின்றேன்.

என்னைக் கருவாக்கி உருவாக்கிய குடும்ப பாரம்பரியத்துடன் கலந்த சிவயோகர் சுவாமிகளின் பாரம்பரியத்தையும், என்னைத் திருவாக்கி மெருகூட்டிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விப் பாரம்பரியத்தையும் இவற்றின் பின்னால் உள்ள பெருமக்களையும் ஒருசேர வணங்கி இந்த நினைவுப் பேருரையை அவர்களுக்கு ஆரமாகச் சாத்தி அழகு பார்த்து அவர்களின் நல்லாசியுடன் **சமய, சமூக, தத்துவ நோக்கில் சிவயோகர் சுவாமிகளின் ஆன்மீகத்தளம்** /The Socio-Religious and Philosophical Perspective in the Spiritual Realm of Sivayogar Swamikal என்னும் இந்த நினைவுப் பேருரையைத் தொடங்குகின்றேன்.

இத்தலைப்பில் எனது உரை இருந்தாலும் நான் சமயத்திலோ, சமூகவியலிலோ, தத்துவத் துறையிலோ தகைசார் கல்வியைக் கற்றவனோ, பட்டங்கள் சான்றிதழ்கள் பெற்றவனோ அல்ல என்பதையும் வெளிப்படுத்திக் கொள்கின்றேன். ஆகவே எனது உரையில் சில பகுதிகள், அவற்றின் அறிமுகம், வரைவிலக்கணம், கட்டமைப்பு போன்றவை இத்துறைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகைசார் அறிஞர்களின் கருத்துக்களோடு பொருந்தாமலும் இருக்கலாம். ஆகவே உரையின்போது அவ்வவ்விடங்களில் அச் சொற்பிரயோகங்களுக்கு முதற்கண் இவ்வுரையில் நாம் என்ன பொருள் கொள்கின்றோம்? எத்தளத்தில் இருந்து பொருள் கொள்கின்றோம் என்று வரையறை செய்துகொண்டு எனது உரையை நகர்த்திச் செல்கின்றேன்.

**யாம் ஓதிய கல்வியும் எம் அறிவும்**
**தாமே பெற வேலவர் தந்ததனால்**
**பூமேல் மயல் போய் அறம் மெய்ப் புணர்வீர்**
**நாமேல் நடவீர் நடவீர் இனியே!**

என்னும் **கந்தரனுபூதிப்** பாடலை மனதிலே நினைந்து பேசு பொருளுக்குள் நுழைவோம்.

## ஆன்மா என்றால் என்ன? ஆன்மீகம் என்றால் என்ன?

ஆன்மீகத்தளத்தை வரையறுப்பதற்கு முன்னர் நாம் **ஆன்மா என்றால் என்ன? ஆன்மீகம் என்றால் என்ன?** என்பதை வரையறுக்க வேண்டும்.

ஆன்மா என்றால் உயிர் (spirit soul). உயிர் வேறு, உயிரினங்கள் வேறு. உயிர்வாழிகள் அதாவது உயிரினங்கள் யாவற்றுக்கும் உயிர் (spirit soul) உண்டு. இந்த உயிர்வாழிகளைப் பற்றிய படிப்பு உயிரியல் (Biology) எனப்படும். உயிரியல் குறிப்பிடும் அடிப்படை அலகான ஒவ்வொரு கலங்களுக்கும் உயிர்ப்பு உள்ளது. ஆனால் அந்த உயிர்ப்பு உயிர் அல்ல. உடலில் இருந்து உயிர் நீங்கிய பின்னரும் கலங்களின் உயிர்ப்பு சிறிது காலத்துக்குத் தொடரும். இதனாலேயே இறந்த பின்னரும் சில நாட்களுக்கு உடலில் உரோமம், நகம் என்பவை வளர்கின்றன. உயிரியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் மருத்துவத்துறைகள் கூறும் உயிர்ப்பு (life) ஆன்மா இல்லை.

ஆன்மாவை இரு வகைகளில் வரையறை செய்கின்றன தர்க்க சாஸ்திர நூல்கள்.

1. **ஸர்வம் ஆப்னோதி இதி ஆத்மா - எங்கும் வியாபித்தது ஆத்மா:**

இந்த வரைவிலக்கணம் பரமாத்மாவாகிய இறைக்குப் பொருந்தும். இறைவன் என்ற சொல்லே எங்கும் எதிலும் நீக்கமற செறிந்து நிறைந்து இருப்பவன் என்று பொருள். கடவுள் என்றாலே எல்லாவற்றையும் கடந்து அதற்கும் அப்பாலாயும் எல்லாவற்றின் உள்ளும் இருப்பது என்று பொருள். இந்த கடவுள் என்கின்ற தூய தமிழ்ச் சொல்லுக்கு இணையான சொல் எந்த மொழியிலும் இல்லை என்பது பன்மொழிப் புலவர் தனிநாயகம் அடிகளாரின் கூற்று.

பரமாத்மாவாகிய இறை எங்கும் வியாபித்து உள்ளது என்பது சரி. இதனைச் சிவயோகர் சுவாமிகளும்,

**"அங்கிங்கெ னாதபடி யெங்குஞ்சிவ மென்று**
**அறிந்தடங்கி யகிலத்திலே வாழ்வதுவே நன்று"**
என்று பாடியருளினார்.

சீவாத்மாவாகிய உயிரும் எங்கும் வியாபித்துள்ளது என்பது எவ்வாறு பொருந்தும்? இவை இரண்டிற்கும் உள்ள தொடர்பு என்ன? இந்த விசாரம் ஆன்மீகம் எனலாம்.

பகவத்கீதையில் கிருஷ்ணர் அர்ச்சுனனுக்கு ஆத்மாவைப் பற்றிச் சொல்லும்போது

- **ஆத்மாவை ஆயுதத்தால் வெட்ட முடியாது;**
  **தீயினால் எரிக்க முடியாது;**
  **நீரினால் நனைக்க முடியாது;**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றினால் அலைக்க முடியாது.

- பகவத் கீதை 2.23

- **ஆத்மா சிதையாது; கரையாது; எரியாது; காயாது; அது நிலையானது; எங்கும் வியாபகமானது; மாறாதது; அசையாதது; அநாதியானது.**

  - பகவத் கீதை 2.24

என்று சொல்கின்றார்.

இதனையே அருணகிரிநாதரும் பின்வருமாறு பாடுகின்றார்.

- **பருதி காயில் வாடாது; வடவை மூளில் வேகாது; பவனம் வீசில் வீழாது; சலியாது; பரவை சூழில் ஆழாது; படைகள் மோதில் மாயாது**

  - **சுருதியூடு என்று தொடங்கும் திருப்புகழ்**

  பருதி என்பது சூரியனின் வெயில்
  வடவை என்பது ஊழிக்காலத்தில் பிரளய நீரிலிருந்து தோன்றும் வடமுகாக்கினி என்னும் ஊழித்தீ
  பவனம் - காற்று
  பரவை - சமுத்திரம்.

இங்கு பகவத்கீதையில் **ஸர்வ-கத - எங்கும் வியாபகமானது** என்று ஆன்மாவைப் பற்றிச் சொல்வதைக் கவனிக்க வேண்டும்.

இதற்கு சித்தாந்த சைவம் கூறும் விளக்கம் வருமாறு:கடவுள் எங்கும் வியாபகமானவர். உயிரும் கடவுளைப் போல் எங்கும் வியாபித்து, ஆனால் கடவுளின் வியாபகத்துள் அடங்கி உள்ளது. இதை வியாப்பியம் என்பர். உயிரைப் பீடித்திருக்கும் ஆணவமலமும் அவ்வாறே எங்கும் வியாபித்திருந்தாலும் உயிரின் வியாப்பியத்துள்ளேயே உள்ளது. கடவுள், உயிர், **மலம்** மூன்றும் எங்கும் நிறைந்தாலும் இவ்வாறு ஒன்றினுள் ஒன்று அடக்கமாக உள்ள நிலையை **“தண்கடல் நீர் உப்பு போல”** என்று உவமை கூறுவர். கடலில் வியாபித்துள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உப்பானது அதன் நீரையே பந்தித்து உள்ளது. கடல் நீர் அடங்கியுள்ள வெளியைப் பந்திக்காது. இதுபோலவே கடவுளும், உயிரும், உயிரின் அழுக்காகிய பாசமுமாம்.

- **மெய்யோடு இயையினும் உயிர் இயல் திரியா**
  மெய் - உடல்
  இயையினும் - சேர்ந்தாலும்
  இயல் - தன்மை
  திரியாது - மாறாது
  **- தொல்காப்பியம், சூத்திரம் 10**
- **உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே**
  **- நன்னூல் சூத்திரம் 204**

- **பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்**
  **பதியினைப் போல் பசு பாசம் அநாதி**
  **பதியினைச் சென்றணுகாப் பசு பாசம்**
  **பதி அணுகிற் பசு பாசம் நிலாவே**
  **- 10ம் திருமுறை - திருமந்திரம்115'**

**2. ஸர்வம் ஆதி இதி ஆத்மா - எல்லாவற்றையும் அனுபவிப்பது ஆத்மா.**

என்பது ஆத்மாவின் இரண்டாவது வரைவிலக்கணம். இது எமது உயிராகிய சீவாத்மாவுக்குப் பொருந்தும். அது எல்லாவற்றையும் அறிந்து அனுபவிக்கின்றது. ஆனால் எதையும் அறிய வேண்டிய தேவையோ, அனுபவிக்க வேண்டிய தேவையோ இல்லாத இறையாகிய பரமாத்மாவுக்கு இது எங்ஙனம் பொருந்தும்? இவை இரண்டிற்கும் உள்ள தொடர்பு என்ன? இந்த விசாரம் ஆன்மீகம் எனலாம்.

இதற்கு சித்தாந்த சைவம் பின்வருமாறு விளக்கம் அளிக்கின்றது. எல்லா உயிர்களிடத்தும் என்றும் பிரியாது அவற்றுடன் ஒன்றாய், உடனாய், வேறாய் இருப்பவன். **"எண்பத்துநான்கு நூறாயிரம் யோனி பேதம் நிரை சேரப் படைத்து அவற்றின் உயிர்க்கு உயிராய் நின்றானை"** என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தர் பாடுகின்றார். எம் உயிர் உடலை விட்டுப் பிரியும் ஆனால் இறை உயிரை விட்டுப் பிரிவதில்லை. இவ்வாறு எமது உயிருடன் என்றும் பிரியாமல் இருப்பதால் அவன் பிரான் எனப்படுகின்றான்.

எங்கும் நிறைந்து, எல்லாவற்றையும் இயல்பாகவே உணர்ந்தவனாகவும், முற்றறிவு உடையவனாகவும் உள்ள இந்த இறைக்கு எவற்றையும் அறிய வேண்டிய தேவையோ அனுபவிக்க வேண்டிய தேவையோ இல்லை. ஆயினும் இறையின் உயிர்ப்பாகிய சித்சக்தியானது நாம் கட்டுண்டிருக்கும் இந்த பெத்த நிலையிலும் தனது இச்சா, கிரியா, ஞானா சக்திகளினூடாக எமது ஆன்ம சித்சக்தியின் இச்சா, கிரியா, ஞானா சக்திகளில் நமது ஆணவ மறைப்பு விடுமளவுக்குப் பொருந்தி நின்று எமது இச்சை, செயல், அறிவைத் தொழிற்படுத்துகின்றது. இவ்வாறு எம்முடன் இருந்து நமது நூல்கள், அனுமானங்கள், காட்சிகள் ஆகிய மூவகையிலும் எமக்கு கண்டு, காட்டி, அறிந்து அறிவிக்கும் இறையின் செயலைக் **காணும் உபகாரம்** என்றும், **காட்டும் உபகாரம்** என்றும் சித்தாந்த சைவம் கூறும்.

**"சீவனும் இச்சா ஞானக் கிரியையால் சிவனை ஒப்பன்"**

என்கின்றது சிவஞானசித்தியார்.

இவ்வாறு நாம் இப்போது இருக்கும் கட்டுண்ட பெத்த நிலையில் நம்முடனிருந்து கண்டு, காட்டி, அறிவித்து, அனுபவித்து பிறவிதோறும் படிப்பறிவினூடாகவும், பட்டறிவினூடாகவும் படிப்படியாக நமது ஆன்ம அறிவு முதிர்ச்சியடைந்து பக்குவ நிலை வரும் போது எஞ்சியிருக்கும் ஆணவ மலத்தையும் நீக்க, இந்த முதிர்நிலையில் இறையின் சித்சக்தியினது இச்சா, கிரியா, ஞான சக்திகள் எமது ஆன்ம சித்சக்தியினது இச்சா, கிரியா, ஞானா சக்திகளுடன் தடையின்றிப் பொருந்தி எமது இச்சை, செயல், அறிவைத் தொழிற்படுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பு இறப்பில் உழலும் பெத்த நிலையில் இறையாகிய சிவத்தின் இச்சா, கிரியா, ஞானா சக்திகள் ஆன்மாவின் ஆணவமல மறைப்புக்கு ஏற்ப அதன் இச்சா, கிரியா, ஞானா சக்திகளுடன் பொருந்தி அவற்றைச் செலுத்துகின்றது. ஆனால் ஆன்மா இதை அறியாது. அது தானே எல்லாவற்றையும் செய்பவனாகவும் – **(கர்த்திருத்துவம்)**-, தானே எல்லாவற்றையும் அனுபவிப்பவனாகவும் – **(போத்திருத்துவம்)** – கருதுகின்றது. இந் நிலையில் அதன் செயல்கள் கர்மவினைகளாகத் தொடருகின்றன.

முத்தி நிலையில் ஆணவ மறைப்பு முற்றாக விலக, சிவத்தின் இச்சா, கிரியா, ஞானா சக்திகள் தடையின்றிப் பாய்ந்து ஆன்மாவின் இச்சா, கிரியா, ஞான சக்திகளுடன் பொருந்தி அவற்றைச் செலுத்துகின்றன. ஆன்மா இதை அறிந்து நான் செய்கிறேன் என்னும் கர்த்திருத்துவத்தையும், நான் அனுபவிக்கின்றேன் என்ற போத்திருத்துவத்தையும் நீங்கி எல்லாம் சிவன் செயலாக உணர்ந்து அறிந்து **சீவபோதம்** (தன்முனைப்பு) நீங்கிச் **சிவபோதத்துடன்** (இறை உணர்வு) எல்லாம் செயலாற்றுகின்றது. சிவன் தருவதாகவே அனுபவிக்கின்றது. இந் நிலையில் அதன் செயல்கள் கர்மவினைகளாக அதனைத் தொடர்வதில்லை.

இதனை சிவயோகர் சுவாமிகள்,

**"அனைத்துஞ் சிவன்செயலென் றறிந்த பெரியோர்க்கு**
**மனத்துயர் வந்திடுமோ - குதம்பாய்**
**மனத்துயர் வந்திடுமோ?"**

**ஏதும் சிவன்செயலென் றெண்ணும் பெரியோர்க்குத்**
**தீதுதான் ஆவதுண்டோ – குதம்பாய்**
**தீதுதான் ஆவதுண்டோ?**
என்று பாடியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பெத்த நிலையில் தனது சர்வ வியாபகத்தை அறியாமல் உடலினால், பிறப்பினால் வருகின்ற அடையாளங்களுக்குள் சிக்குண்டு மாயா இயந்திர தனுவினுள் தன்னுடன் என்றும் பிரியாதிருந்து தனக்குக் கண்டு, காட்டி, அறிவிக்கும் இறையை உணராமல் நானே செய்கின்றேன் என்ற கர்த்திருத்துவத்துடனும், நானே அனுபவிக்கின்றேன் என்ற போத்திருத்துவத்துடனும் செயற்பட்டுக் கொண்டிருக்கும் எமது ஆன்மா இக் கட்டில் இருந்து விடுபட்டு தன்னுடன் இருந்து கண்டு, காட்டி, அறிவிக்கும் இறையின் செயலாகவே தன் செயலையும் அனுபவங்களையும் கண்டு சீவ போதம் என்னும் தன்னுணர்வு கெட்டு சிவபோதம் என்னும் இறையுணர்வு பெற்று கட்டறுத்து தனது சர்வ வியாபகத் தன்மையில் மீளாப் பேரின்பம் பெறும் நிலைக்குச் செல்லுதல் ஆன்மீகம் என வரையறுக்கலாம். இதுவே நாம் எமது வாழ்க்கையில் அடைய வேண்டிய பூரண நிலையாகும். இதை நோக்கியே ஒவ்வொரு உயிரும் பயணித்துக் கொண்டிருக்கின்றது. இதனையே **முக்தி, மோட்சம், வீடு, விடுதலை, வீடுபேறு** என்று பலவாறாகச் சொல்வர்.

இதனையே,

**இந்தனத்தின்எரி, பாலின்நெய், பழத்தின்இரதம்**
**எள்ளின்கண் எண்ணெயும்போல்எங்கும் உளன்இறைவன் ;**
**வந்தனைசெய்து எவ்விடத்தும்வழிபடவேஅருளும்**
**மலம் அறுப்போர் ஆன்மாவின்மலரடிஞானத்தால்**
**சிந்தனைசெய்து அர்ச்சிக்க, சிவன்உளத்தேதோன்றித்**
**தீஇரும்பைச்செய்வதுபோல் சீவன்தன்னைப்**
**பந்தனையைஅறுத்துத்தானாக்கித்தன் உருவப்**
**பரப்பெல்லாங்கொடுபோந்துபதிப்பன் இவன்பாலே.**

என்கின்றது சிவஞான சித்தியார்.

**“கள்ளப் புலக்குரம்பைக் கட்டறுக்க வல்லானே”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும்,

**"பொய் கெட்டு மெய்யானார் மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே"**

என்றும்

**"சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்"**

என்றும் மாணிக்கவாசகர் கூறுகின்றார்.

**"எழுத்தறியத் தீரும் இழிதகைமை, தீர்ந்தால்,**
**மொழித்திறத்தின் முட்டறுப்பான் ஆகும்,**
**மொழித்திறத்தின், முட்டறுத்த நல்லோன்**
**முதல் நூல் பொருள் உணர்ந்து, கட்டறுத்து வீடு பெறும்."**

என்கின்றார் காக்கைபாடினியார்.

இதுவே நாம் சொல்லும் ஆன்மீகம் என ஆன்மீகத்தை இவ்வளவில் சுருக்கமாக வரையறுத்துக்கொண்டு ஆன்மீகத் தளம் என்றால் என்ன என்பதைச் சற்று பார்ப்போம்.

## ஆன்மீகத்தளம் என்றால் என்ன?

ஆன்மீகத்தளம் என்பது தூல உடலையும், உலகையும் உள்ளடக்கிய ஆனால் அவற்றையும் தாண்டிய ஒரு அனுபவப் பரப்பாகும். இது உள்ளம், உயிர், இறை என்பவற்றை உள்ளடக்கியது. அன்பு, அறம், மெய், ஞானம் ஆகிய பண்புகளையும் உள்வாங்கியது. வழிபாடுகள், தியானம், கோயில், கிரியை, வேதம் ஆகிய புறக் கூறுகளையும் தெய்வீக அனுபவங்கள், காட்சிகள், வெளிப்பாடுகள், ஆனந்தம், அனுபூதி ஆகிய அகக் கூறுகளையும் கொண்ட வியாபகம் ஆகும். இது மெய் அல்லது உண்மை பற்றிய எமது தேடல் பரப்பு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தேடலை **ஆத்மவிசாரம்** என்றும் சொல்லுவர். இதையே திருவள்ளுவர் **மெய்யுணர்தல்** என்றார்.

இத்தேடலில் எமது நம்பிக்கைகளும், கண்டடைவுகளும், கருதுகோள்களும், அனுபவங்களும் எமக்கும் எமது சக மனிதர்களுக்குமிடையிலான உறவாடலையும், எமக்கும் இந்த இயற்கை உலகுக்கும் இடையிலான உறவாடலையும், எமக்கும் இந்த உலகின் ஏனைய உயிர்வாழிகளுக்கும் இடையிலான உறவாடலையும் இவற்றின் மூலமாக எமது வாழ்வியலையும் தீர்மானிக்கின்ற தளமாகவும் அமைகின்றது. இந்த ஆன்மீகத்தளமானது எம் ஒவ்வொருவரிலும் பல்வேறு விதமாக பல்வேறு வடிவங்களில், பரிணாமங்களில் உள்ளது. இதிலே எமது கல்வி, சமூக, பண்பாட்டுச் சூழல் காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனாலேயே சத்சங்கம் அல்லது அடியார் கூட்டம் எமது தனிப்பட்ட ஆன்ம ஈடேற்றத்துக்கு அவசியம் என எமது சமய மரபுகள் கூறி நிற்கின்றன.

**சத் சங்கத்வே நிஸ் சங்கத்தவம்**
**நிஸ் சங்கத்வே நிர் மோஹத்வம்**
**நிர் மோஹத்வே நிச்சல தத்வம்**
**நிச்சல தத்வே ஜீவன் முக்தி**

சத்சங்கம் என்னும் நல்லோர் கூட்டுறவினால் தேவையில்லாத தீய கூட்டம் விலகும் விலக, ஆசைகள் விலகி அடங்கும் அடங்க மனம் ஊசல் படாத நிலை கைகூடும் ஊசல் படும் மனம் அடங்க ஜீவன் முத்தி நிலை கிட்டும்.

- **ஆதிசங்கரர் அருளியதாகச் சொல்லப்படும்** பஜகோவிந்தம் பாடல்

**செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா**
**அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ**
**மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்**
**ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையின் செம்மையான திருவடிகளைச் சென்றணையாமல் தடுக்கும் ஆணவ மலத்தை விட்டு நீங்கிய சீவன் முத்தர்களும் அம்மல வாசனை தொடராதிருக்க, தொடர்ந்தும் மெய்யன்பர்களோடு கூடி, அவர்களுடைய திருநீறு, உருத்திராட்சம் அணிந்த தவக்கோலத்தையும், அவர்கள் வழிபடும் அரனுடைய ஆலயங்களையும் அரன் வடிவாகவே கண்டு வழிபட்டு நிற்பர்.

- **மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம், 12ம் சூத்திரம்**

இதனையே சிவயோகர் சுவாமிகள்,

**"நல்லோர் இணக்கமே வேண்டும் – வேல் வேல்"**

என்று பாடியுள்ளார்.

## சிவயோகர் சுவாமிகளின் ஆன்மீகத்தளம்:

சிவயோகர் சுவாமிகளின் ஆன்மீகத்தளத்தை நாம் ஒரு கட்டுக்குள் கொண்டு வந்து பார்த்துவிட முடியாது. சிவயோகர் சுவாமிகள் மட்டுமல்ல எவருடைய ஆன்மீகத்தளத்தையுமே நாம் ஒரு கட்டுக்குள் கொண்டு வந்து, மதிப்பிட்டு, அளவிட்டு, ஆய்வு செய்ய முடியாது. ஆன்மீகம் என்பதே அளவைகளுக்கு அப்பாற்பட்டது. எது எதையெல்லாம் நாம் கணித்து,அளந்து, அறிந்து, மதிப்பிட முடியுமோ அவையெல்லாம் அறிவியல் பரப்பினுள் அடங்கும். Whichever is subject to measurement in terms of its dimension, expansion, radiation etc etc are the subject of science. இவ்வாறு அணுகி, அளந்து, மதிப்பீடு செய்து அறிய முடியாதெதுவோ அது ஆன்மீகம் அது இக்காலத்தில் மட்டுமல்ல எக்காலத்தும் அறிவியலுள் அடங்காது. ஆன்மா, இறை, இவை இரண்டையும் பிரிக்கின்ற தளை ஆகிய மூன்றுமே ஆன்மீகத்தின் பொருள் அல்லது பொருள்கள் என்று வரையறுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்**
**மருளானம் மாணாப் பிறப்பு"**
என்பது திருக்குறள்.

**"மெய்ப்பொருள் காண்பது அறிவு"**

என்பதும் அதன் வாசகமே. அதுவே எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இலச்சினை வாசகமும் கூட.

அறிவியலும் உண்மையைத்தான் தேடுகின்றது ஆன்மீகமும் உண்மையைத்தான் தேடுகின்றது. எங்கு அறிவியல் மேலும் செல்ல முடியாமல் நிற்கின்றதோ அங்கு ஆன்மீகம் தொடங்குகின்றது. இந்த அடித்தளத்தை நன்கு புரிந்து கொண்டு நாம் சிவயோகர் சுவாமிகளின் ஆன்மீகத்தளத்தை ஒரு சில கோணங்களினூடாக அணுகி அறிய முயற்சிக்கின்றோம். இந்த உரையிலே நாம் சிவயோகர் சுவாமிகளின் ஆன்மீகத் தளத்தை பின்வரும் பார்வைகளில் ஆராய்வோம்.

1. **அனைத்திந்திய ரீதியிலான அவைதிக, வைதிக ஆன்மீக தரிசனங்களின் பார்வையில் சிவயோகர் சுவாமிகளின் ஆன்மீகத்தளம்.**
2. **வேத, ஆகம, புனித நூல்களின் பார்வையில் சிவயோகர் சுவாமிகளின் ஆன்மீகத்தளம்.**
3. **அறுவகைச் சமயங்களின் பார்வையில் சிவயோகர் சுவாமிகளின் ஆன்மீகத்தளம்.**
4. **சமய அனுட்டானங்கள், சைவ நாற்பாதங்களின் பார்வையில் சிவயோகர் சுவாமிகளின் ஆன்மீகத் தளம்.**
5. **ஈழத்துச் சைவ மரபின் பார்வையில் சிவயோகர் சுவாமிகளின் ஆன்மீகத்தளம்.**
6. **ஆன்மீக ஆளுமைப் பார்வையில் சிவயோகர் சுவாமிகளின் ஆன்மீகத்தளம்.**

இவற்றை நாம் இப்போது ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனைத்திந்திய ரீதியிலான அவைதிக, வைதிக ஆன்மீக தரிசனங்களின் பார்வையில் சிவயோகர் சுவாமிகளின் ஆன்மீகத்தளம்**

ஆன்மீகத்தளத்தை இந்திய துணைக்கண்டத்தின் தத்துவஞான நோக்கில் அணுகும் தத்துவ அறிஞர்கள் இவற்றைத் தரிசனங்கள் என்று அழைப்பர். அவ்வவர்களுடைய மெய் பற்றி அவ்வவர்களின் மெய்யான தேடலில், அவ்வவர் கண்டறிந்த மெய், **தரிசனம்** எனப்படும். இந்திய துணைக்கண்டத்திலே மெய்யை நோக்கிய தேடலில் காலங்காலமாக பல்வேறு ஆளுமைகளினால் கட்டமைத்து வடிவமைக்கப்பட்ட பல்வேறு கோட்பாடுகள், நம்பிக்கைகள், அவை சார்ந்த சடங்குகள், சம்பிரதாயங்கள் என மிகமிகப் பரந்த ஆழமான பரப்பைக் கொண்டவை இத்தரிசனங்கள் ஆகும். இவற்றில் வேத நூல்களின் மேலாண்மையுடன் முரணுறாது அவற்றை மறுதலிக்காது ஏற்றுகொண்ட தரிசனங்கள் ஆறையும் **ஷட்தரிசனங்கள்** என்று கூறுவர். இவை வேத நூல்களுடன் ஒத்துப் போவதால் வைதிக **தரிசனங்கள்** என்றும் அழைக்கப்படுகின்றன. வேதம் என்றால் என்ன என்பதைப் பின்னால் பார்ப்போம். **சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், மீமாம்சை, வேதாந்தம்** ஆகிய ஆறு தத்துவஞானக் கொள்கைகளும் **'ஷட் தரிசனங்கள்'** ஆகும்.

இவை ஒவ்வொன்றையும் பற்றிச் சுருக்கமாகப் பார்ப்போம்.

1. **சாங்கியம்**: தொடர்ந்து மாறிக் கொண்டிருக்கும் நாம் காணும் இந்த உலகிற்குப் பின்னால் உயிர்ப்பும் உணர்வும் உள்ள மாறாத ஏதோ ஒன்று உள்ளது என்று சொல்வது சாங்கியம். இந்த அறிவை **புருடன்** என்று சாங்கியம் சொல்லும். புருடன் – அறிவுடைப் பொருள் – ஆகவே இதற்கு நிலைமாற்றம் இல்லை. **பிரகிருதி** – அறிவில் பொருள் – ஆகவே இதற்கு நிலைமாற்றம் உண்டு இரஜோ, தமோ, சத்துவ குணங்களின் முக்குண தோஷம் பிரகிருதிக்கு உண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றின் ஓயாத போராட்டமும் உண்டு; சடமாகிய இந்த உடலுடன் புருடன் சேரும் போது அது உயிர் எனப்படும். புருடன் சன்னிதியில், முன்னிலையில் பிரகிருதி இயங்கும் இதற்கு இறை தேவை இல்லை என்கின்றது சாங்கியம். இந்த ஞானமே விடுதலைக்கு வழி. சாங்கியத்துக்கு நூல் செய்தவர் **கபிலர்.** சாங்கியம் நாம் முன் சொன்ன பிரமாணங்களாகிய காண்டல், கருதல், உரை மூன்றையும் ஏற்றுக்கொண்டாலும் இறை ஒன்று உள்ளது என்பதை ஏற்காது.

2. **யோகம்:** சாங்கியம் சொல்லும் அவ்வளவையும் ஏற்றுக்கொண்டு ஆனால் இந்த உலகிற்குப் பின்னால் இவற்றை இயக்கும் கர்த்தா அல்லது இறை உண்டு என்று கூறுவது யோகம். இதற்கு நூல் செய்தவர் **பதஞ்சலி**. இது தியானம் ஒன்றே விடுதலைக்கு வழி என்று கூறும்.

3. **நியாயம்:** காண்டல். கருதல், உரை எனும் மூவகைப் பிரமாணங்களையும் ஏற்றுக் கொண்டாலும் அவற்றின் உண்மையை தர்க்கித்து அலசி ஆராய்ந்து அறிதல் நியாயம் ஆகும்.. இது கண்டடையப்படும் மெய்யை விட அதை அடைகின்ற முறைக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றது. இன்றைய விஞ்ஞான ஆய்வுகளின் அடிப்படை இது எனலாம். இதற்கு நூல் செய்தவர் பலர். **அன்னம்பட்டீயர்** செய்த **தருக்க சங்கிரகம்** வழக்கில் உள்ள நூல்களில் ஒன்று.

4. **வைசேடிகம்:** நியாயத்துடன் பெருமளவில் ஒத்துப்போவது. பஞ்ச பூதங்கள் ஐந்துடன் காலம், இடம், ஆன்மா, மனம் ஆகிய நான்கும் சேர்ந்து ஒன்பது திரவியங்களின் விளைவே இந்த உலகம் என்பர். பஞ்ச பூதங்களில் ஆகாசம் தவிர ஏனைய நான்கும் அணுக்களால் ஆனவை என்று வைசேடிகம் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைசேடிகமானது காண்டல், கருதல், உரை என்னும் மூன்று பிரமாணங்களையும் ஏற்றுக் கொள்வதோடு உலகிற்கு கர்த்தாவாக இறையையும் ஏற்கும். வைசேடிகத்துக்கு நூல் செய்தவர் **கணாதர்**.

5. **மீமாம்சை:** இங்கு மீமாம்சை என்பது பூர்வ மீமாம்சை என்னும் கர்ம மீமாம்சையாகும். இது காண்டல், கருதல், உரை ஆகிய மூன்று பிரமாணங்களையும் ஏற்றாலும் அவற்றுள் நூல் பிரமாணமாகிய உரைக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கும். அதிலும் வேதங்களில் கர்ம காண்டத்திற்கும் அதில் கூறப்பட்ட யாகம் முதலான கர்மங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கும். நையாயிகர் அறிய முயலும் மெய்யைவிட மெய்யை அடையும் வழியாகிய தர்க்கத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது போல மீமாம்சகரும் இறையை விட யாகம் முதலான கருமங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பர். இவர்கள் தெய்வங்களை ஏற்றுக் கொண்டாலும் இவை எல்லாவற்றுக்கும் பின்னால் இவற்றின் காரண கர்த்தாவாக இறை உள்ளது என்பதை ஏற்கார். இதற்கு நூல் செய்தது **ஜைமினி**.

6. **வேதாந்தம்:** காண்டல், கருதல், உரை என்னும் மூன்று பிரமாணங்களை ஏற்றுக் கொண்டாலும் உரையாகிய வேத நூல்களின் ஞான காண்டமாகிய உபநிடதங்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பது வேதாந்தம். இதனை **உத்தர மீமாம்சம்** என்றும் அழைப்பர். அதிலும் இறைக்கு அதிகூடிய முக்கியத்துவம் கொடுப்பர். உபநிடதங்களுடன், வேதங்களின் ஞான காண்ட சாரமாக வியாசர் செய்த **பிரம்ம சூத்திரம்**, மகாபாரதத்திலுள்ள **பகவத்கீதை** ஆகிய மூன்றையும் **பிரஸ்தானஸ்திரயம்** என்று தமது முக்கிய பிரமாண நூல்களாகக் கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை ஆகிய **பிரஸ்தானஸ்திரய நூல்கள்** மூன்றுக்கும் **ஆதிசங்கரர்** விளக்க உரைகள் எழுதி நிறுவியது **அத்வைத வேதாந்தம்**. இதை **ஏகான்மவாதம், மாயாவாதம்** எனப் பல பெயர்களால் கூறுவர். இவர்கள் எல்லாக் கடவுளும் ஒரே இறையாகிய நிர்க்குணப் பிரம்மத்தின் சகுண வடிவங்களே என்று கூறி அன்று வழக்கில் இருந்த **சிவன், சக்தி, திருமால், கணபதி, குமரன், சூரியன்** ஆகிய ஆறு தெய்வங்களையும் முன்னிலைப் படுத்தியதனால் ஆதிசங்கரரை **சண்மதஸ்தாபகர்** என்றும் கூறுவர்.
- **உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை** ஆகிய **பிரஸ்தானஸ்திரய நூல்கள்** மூன்றுக்கும் மத்துவர் விளக்க உரைகள் செய்து நிறுவியது திருமாலைப் பரம்பொருளாகக் கொண்ட **துவைத வேதாந்தம்**. இன்று உலகெங்கும் பரவலாக உள்ள **ஹரேகிருஷ்ணா இயக்கம்** இந்த தத்துவ மரபைச் சார்ந்ததே.
- **உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை** ஆகிய **பிரஸ்தானஸ்திரய நூல்கள்** மூன்றுக்கும் **இராமானுஜர்** விளக்க உரைகள் செய்து நிறுவியது திருமாலைப் பரம்பொருளாகக் கொண்ட **விசிட்டாதுவித வேதாந்தம்**. இவர் அழகாக தமது தத்துவ மரபில் பிரஸ்தானத் திரய நூல்கள் மூன்றையும், கிரியை மரபில் **வைகானம், பாஞ்சராத்திரம்** ஆகிய வைணவ ஆகமங்களையும் உள்வாங்கியதோடு வழிபாடு மரபில் கருவறை வரை வடமொழி வேதங்களுடன் அவற்றுக்குச் சமமாக தமிழில் உள்ள **ஆழ்வார்** பாசுரங்களாகிய **நாலாயிரத் திவ்விய பிரபந்தப்** பாடல்களையும் உள்வாங்கியதால் இன்று சைவத்தில் நாம் காணும் தமிழ் – வடமொழி அக்கப்போர் இங்கு இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமணம், பௌத்தம்** ஆகிய தரிசனங்கள் வேதங்களை மறுதலித்து அவற்றை ஏற்றுக்கொள்ளாத இந்திய தத்துவ தரிசங்களாகும். **சமணம், பௌத்தம்** ஆகிய தரிசனங்கள் காண்டல், கருதல் ஆகிய இரண்டு வகைப் பிரமாணங்களையும் கருத்தில் கொண்டாலும் வேத நூல்களாகிய உரைப் பிரமாணத்தை ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிக்கின்றன. ஆகவே இவை **அவைதீக தரிசனங்கள்** எனப்படுகின்றன. இவை இரண்டும் கர்மா, மறுபிறவி ஆகியவற்றையும் சிறு தெய்வங்கள், தேவதைகளின் இருப்பையும் ஏற்றுகொண்டாலும் இவற்றுக்குப் பின்னால் காரண கர்த்தாவாக ஒரு முழுமுதற்கடவுள் உள்ளார் என்பதனை ஏற்றுக்கொள்வதில்லை. ஆகவே இவை இரண்டும் **நாத்திக தரிசனங்கள்** எனப்படுகின்றன. இவை இரண்டுமே துறவு ஒன்றே ஞானத்தை விடுதலையைத் தரவல்லது என வலியுறுத்தும் தரிசனங்களாகும். உலகியல் வாழ்வையும், அதன் இருப்புக்கு ஆதாரமான பொருளாதார நடவடிக்கைகளான தொழில் விவசாயம் உற்பத்தி நடவடிக்கைகளையும், வாழ்வின் அழகியற் கலைகளான இசை, ஆடல், பாடல் போன்றவற்றையும் இவை தத்துவ ரீதியாகப் புறந்தள்ளுகின்றன.

**உலகாயதம்:** வேதங்களை மறுதலித்து அவற்றையும் இறையையும் ஏற்றுக்கொள்ளாத இன்னொரு **அவைதிக நாத்திக இந்திய தத்துவ தரிசனம்** உலகாயதம் ஆகும். இதற்கு நூல் செய்தவர் **சார்வீகர்**. இவர் பெயரால் உலகாயதத்தை **சார்வீகம்** என்றும் அழைப்பர். இவர்கள் காண்டல், கருதல், உரை எனும் மூன்று வகையான பிரமாணங்களில் தாம் கண்டவற்றை மட்டுமே ஏற்றுக்கொள்ளும் காட்சி பிரமாணத்தை மட்டுமே கொள்வர். ஆன்மா என்று ஒன்று இல்லை இந்த உடலே ஆன்மா என்று இவர்கள் கூறுவதால் இவர்களைத் தேகான்மவாதியர் என்றும் அழைப்பர். **"கண்டதே காட்சி, கொண்டதே கோலம்"** என்பதும் **"வாழ்க்கை குறுகியது அதற்குள் அதை நன்றாய் அனுபவித்துக் களிக்க வேண்டும்"** என்பதும் இவர்கள் வாதம். இந்தக் கொள்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானசித்தியார் பரபக்கப் பாடல்கள் பின்வருமாறு விளக்குகின்றன.

**தையலார் ஊட லாடத் தாமவ ரோடுங் கூடிச்**
**செய்யதா மரையை வென்ற சீறடி செம்பஞ் சூட்டி**
**மெய்யெலாம் பாதஞ் சூடும் வேடத்தார் மெய்யிற் கூடா**
**மையல்மா னுடர்பொய் மார்க்கவேடத்தே மாய்கின் றாரே.**

**வாசமார் குழலி னார்கள் மணிஅல்குல் தடத்தே ழுழ்கி**
**நேசமார் குமுதச் செவ்வாய் அமுதினை நிறைய உண்டு**
**தேசுலா மணிமென் தோள்மேற் சேர்ந்துவீற் றிருந்திடாதே**
**மாசுலா மனத்தோரெல்லாம் மறுமைகொண் டழிவர் மன்னோ.**

**மதிநிலா நுதலா ரோடு மணிநிலா முன்றி லேறி**
**முதிர்நிலா வெறிப்பச் செவ்வாய் இளநிலாமுகிழ்ப்பமொய்த்த**
**கதிர்நிலா வடங்கொள் கொங்கைக் கண்கள்மார் பகலமுழ்கும்**
**புதுநிலா வியநன் போகம் விடுவர்புன் சமயத் தோரே.**

**ஊடுவ துணர்வ துற்ற கலவிமங் கையரை யுள்கி**
**வாடுவ தடியில் வீழ்ந்து வருந்துவ தருந்த வம்பின்**
**கூடுவ துணர்வு கெட்டுக் குணமெலாம் வேட்கை யேயாய்**
**நீடுவ தின்ப முத்தி யித்தில்நின் றார்கள் முத்தர்.**

**- சிவஞானசித்தியார் பரபக்கம் பாடல்கள்**

வேதங்களை மறுதலித்து நிராகரிக்கும் இந்த உலகாயதம், பௌத்தம், சமணம் என்னும் **அவைதிக தரிசனங்கள்**, வேதங்களை ஏற்றுகொண்ட **ஷட் தரிசனங்கள்** என்னும் **வைதிக தரிசனங்கள்** யாவும் இந்திய துணைக்கண்டத்தின் சமயங்கள், தத்துவங்கள், தேடல்கள் யாவற்றுக்கும் அடிப்படையான ஆன்மீகத்தளம் ஆகும்.

**சைவசித்தாந்தம்:** சைவசித்தாந்தம் இந்த வைதிக, அவைதிக தரிசனங்களின் ஆன்மீகத்தளத்திலிருந்து அவை யாவற்றையும் உள்வாங்கி, அவற்றுடன் நெருங்கிய தொடர்புடையதாய், ஆனால் அவற்றுக்குள் அடங்காமல் அப்பாலான ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவமான தளமாகக் காணப்படுகின்றது. **சர்வபள்ளி இராதாகிருஷ்ணன்** உள்ளிட்ட இந்திய தத்துவஞான அறிஞர்களோ, நூல்களோ பெருமளவில் கண்டுகொள்ளாத ஒரு தனிப்பெரும் பரப்பாகச் சைவசிதாந்தம் விளங்கின்றது. இதனை **வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்** என்பர். இது இந்த காண்டல், கருதல், உரை என்னும் மூன்றுடன் எம்மோடு ஒன்றாய் உடனாய் வேறாய் நின்று கண்டு, காட்டி, அறிந்து, அறிவிக்கும் இறையின் **சித்சக்தி**யையும் பிரமாணமாகக் கொள்ளுகின்றது. இதற்கு வேதங்கள் பொது நூல், சிவாகமங்கள் சிறப்பு நூல் ஆகும். "**சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும்**" என்கின்றது சிவஞானசித்தியார். இதனை **ஆகமாந்தம்**, அதாவது ஆகமங்களின் முடிந்த முடிபு என்றும் கூறுவர். இந்த வேதங்கள், சிவாகமங்கள் யாவுமே வடமொழியில் உள்ளன. ஆனாலும்

**"சைவசித்தாந்தம் என்பது திராவிட சிந்தனை மரபின் அதி உன்னத படைப்பு"**

என்பது **ஜி.யு. போப், மறைமலையடிகள்** போன்ற இருபதாம் நூற்றாண்டு அறிஞர்களின் கருத்தாகும்.

வடமொழி வேத ஆகம நூல்களின் துணையின்றி தமிழில் உள்ள **பன்னிரு திருமுறைகள், பதினான்கு மெய்கண்ட சாத்திரங்கள்** ஆகிய அடிப்படை நூல்களை வைத்து தனித்து இயங்கக்கூடிய ஆன்மீகத்தளம் சித்தாந்த சைவத்துக்கு உண்டு. ஒரு காலத்தில் அனைத்திந்திய சமயக்கொள்கை, தத்துவங்களில் ஒன்றாக காசி, காஷ்மீரம், நேபாளம் முதலான இடங்களிலும் தளம் கொண்டு விளங்கிய சித்தாந்த சைவம் தமிழ் பேசும் மக்களின் தமிழகத்திலும், ஈழத்திலும், இவர்களின் புலம்பெயர் தேசங்களிலும் குறுகி நிற்கும் இன்றைய காலகட்டத்தில் இதற்கு வடமொழி வேதங்கள், ஆகமங்களின் இருப்பும், தேவையும் பயனற்றுப்போனது உண்மைதான் என்றாலும் கிரியை முறையில் தமிழ்மொழியில் நூல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமையால் தனித்தியங்க முடியாத நிலை இன்றளவும் காணப்படுகின்றது.

ஆன்மீக, சடங்கு, சம்பிரதாயத் தளங்களுக்கு அப்பால் மிகப்பெரிய பொருளாதாரத் தளத்தையும் கொண்டியங்கும் சித்தாந்த சைவத்தின் கிரியை மரபு பஞ்சகோத்திர சிவாச்சாரிய மரபினரிடமே உள்ளது. ஆலயங்களின் கும்பாபிஷேகம், திருவிழாக்கள், கிரியைகள் என்பன இவர்களின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

ஆகம வழியிலான இக்கிரியைகளின் வழிகாட்டி நூல்களான பத்ததிகளும் வடமொழியில் இவர்களிடமே உள்ளன. இந்த கிரியை மரபை பஞ்சகோத்திர சிவாச்சாரிய மரபுக்கு அப்பால் எடுத்து அதை எல்லாப் பிராமணருக்கும் பொதுவாக்கும் முயற்சிகளும், சித்தாந்த சைவத்தின் பெரும்பான்மைச் சமூகமாகவும், பொருளாதார அடிப்படையாகவும் விளங்கும் வேளாளர் வசமாக்கும் முயற்சிகளும், சாதி மரபு கடந்து அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்னும் சமூக மயமாக்கும் முயற்சிகளும் இவற்றுக்கு இடையிலான முறுகல்களும், அக்கப்போர் மோதல்களும் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக மெதுவாக நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

**சேர்.ஜோன்மார்ஷல்** போன்ற அகழ்வாராய்ச்சியாளர்களால் வெளிப்படுத்தப்பட்ட சிந்துவெளி நாகரிகத்தின் திராவிட நாகரிக மரபும், **கோல்ட்வெல்** போன்ற மொழியியல் ஆய்வாளார்களால் வெளிப்படுத்தப்பட்ட ஆரிய மொழிகளில் இருந்து வேறுப்பட்ட தனித்துவமான திராவிட மொழிக் குடும்ப மரபும், **மறைமலையடிகள்** போன்றோரால் முன்னெடுக்கப்பட்ட தனித்தமிழ் இயக்கமும், **ஈ.வே.ரா. பெரியார்** போன்றோரினால் முன்னெடுக்கப்பட்ட சுயமரியாதை இயக்கமும், இன்றைய தனித்தமிழ்ச் சித்தாந்த சைவ மரபின் தோற்றத்துக்கும், வளர்ச்சிக்கும் வழி கோலுகின்றன எனலாம். இதிலே தோத்திர, சாத்திர ரீதியாக தமிழில் தனித்தியங்கும் சித்தாந்தசைவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று கிரியை நெறியிலும் தனித்தியங்க இப்போது எத்தனித்து வருகின்றது.

## வேத, ஆகம, புனித நூல்களின் பார்வையில் சிவயோகர் சுவாமிகளின் ஆன்மீகத்தளம்

மேற்சொன்ன ஆன்மீகத்தளங்கள் யாவும் வேதங்களை அடிப்படையாகக் கொண்டவை, வைதிக தரிசனங்கள் ஆறும் வேதங்களை ஏற்றுக்கொண்டவை. அவைதிக தரிசனங்கள் மூன்றும் வேதங்களை நிராகரித்து எழுந்தவை. ஆகவே நாம் மேற்கொண்டு செல்வதற்கு வேதம் என்றால் என்ன என்னும் புரிதல் அவசியம்.

## வேதம் என்றால் என்ன?

வேதம் என்றால் புனிதநூல். எமது கிறித்துவ, இஸ்லாமிய சகோதரர்களும் தமது மத நூல்களை வேதம் என்றே சொல்கின்றார்கள். இதனால் வேதம் என்பது இந்து சமயச் சொல்லாயினும் இன்று எல்லா சமய நூல்களையும் குறிக்கும் பொதுச் சொல்லாகவும் பயன்படுத்தப்படுகின்றது. எமது மரபில் வேதம் என்றால் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என வடமொழியில் உள்ள நான்கு நூற்தொகுதிகளே .

இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் கலியுகம் தொடங்க முன்னர் துவாபர யுகத்தின் இறுதியில் மகாபாரத காலத்தில் வாழ்ந்த வியாச முனிவர் வேத நூல்களை இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு தொகுதிகளாக வகுத்தார் என்பது பொதுவான இந்துப் பாரம்பரிய மரபு கூறுகின்றது. வேதங்களை வகுத்ததனால் இவர் **வேத வியாசர்** எனப் பெயர் பெற்றார். இந்த வியாசரே மகாபாரதத்தை யாத்தவர் என்றும், இவரே சிவனிடம் இருந்து வழி வழியாக வந்த புராணங்களையும் பதினெட்டாக வகுத்து எழுத்துரு தந்தவர் என்றும் மரபு ரீதியாகச் சொல்லுவர்.எமது இந்து சமயத்தின் அடிப்படை நூலான வேதம் உண்மையில் இது ஒரு தனி நூல் அல்ல பல நூல்களின் தொகுப்பாகும். மனித வரலாற்றில் எழுத்துருவாக்கம் தோன்ற முன்னரே வேதம் வாய் வழியாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறை தலைமுறையாகக் கற்பிக்கப்பட்டு வந்தது. இதனால் இதை எழுதாக்கிழவி என்றும் கூறுவர்.

**வேதங்களின் சாகைகளும், காண்டங்களும்:** இருக்கு வேதம் இருபத்தொரு சாகைகளையும், யசுர்வேதம் நூறு சாகைகளையும், சாமவேதம் ஆயிரம் சாகைகளையும், அதர்வவேதம் ஒன்பது சாகைகளையும் உடையன. சாகை என்றால் கிளை என்று பொருள். வேதங்களில் கரும காண்டம், ஞான காண்டம் என இரு பகுதிகள் உள்ளன என்று பார்த்தோம். கரும காண்டம் யாகக் கிரியைகளையும் தோத்திரங்களையும் கொண்ட பகுதி ஞான காண்டம் உபநிடதங்களைக் கொண்ட பகுதியாகும். உபநிடதங்களையே **வேதாந்தம்** என்னும் சொற்பிரயோகத்தால் சித்தாந்த சைவம் சுட்டுகின்றது. சங்கர வேதாந்தத்தை அல்ல என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். வேதங்களின் ஞானகாண்டமாகிய உபநிடதங்களின் உட்பொருளை ஆகமங்கள் மிகத் தெளிவாக விளக்கி, அதை அடையும் உத்திகளைச் **சரியை, கிரியை, யோகம், ஞானம்** என்று வகுத்துக் கூறுவதால் ஆகமாந்தமாகிய சித்தாந்த சைவ மரபை **“வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்”** என்று சிறப்பித்துக் கூறுவர்.

**வேத ஆகமங்களின் மூலம்:** சதாசிவ மூர்த்தியுடைய தற்புருட முகத்தில் இருந்து இருக்கு வேதத்தையும், அகோர முகத்தில் இருந்து யசுர் வேதத்தையும் வாமதேவ முகத்தில் இருந்து சாம வேதத்தையும், சத்திஜோயாத முகத்தில் இருந்து அதர்வண வேதத்தையும் ஐந்தாவது முகமாகிய உச்சி நோக்கிய ஈசான முகத்தில் இருந்து சிவாகமங்களையும் அருளிச் செய்தான் எனச் சித்தாந்த சைவ மரபு கூறுகின்றது.

வேதங்கள் தானாகவே தோன்றியவை அவை அபௌர்ஷேயம் – புருடன் ஒருவனால் தோற்றுவிக்கப்படாதவை என்று கூறும் சங்கர வேதாந்த மரபைச் சித்தாந்த சைவம் ஏற்றுக்கொள்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

................உரைதங்கு வேதமொழி

**உளது என்று கூறும் அவர்தாம்**
**அடி இன்று தான் எனும் அது. அறிவு இன்றி ஈனும் அவர்**
**இலை என்ற ஆதரவு அதே.**

ஒரு சிலர் வேதம் தானாகவே தோன்றியது அது அபௌர்ஷேயம், அதாவது ஒரு புருஷனால் ஆக்கப்பட்டவை அல்ல அவற்றிற்கு மூல ஆசிரியன் இல்லை என்று கூறுவது பிறந்த பிள்ளைக்குப் பெற்றோர் இல்லை என்று அறிவில்லாமல் கூறுவதைப் போன்றது.

- மெய்கண்ட சாத்திரம் - சிவஞான சித்தியார் பரபக்கம் - 199

**அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்**
**அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்**
**அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்**
**அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டதே**

- திருமந்திரம் பாடல் 57

ஈசாநஸ் ஸ்ர்வ வித்யானாம்
சகல வித்தைகளுக்கும் கர்த்தா ஈசானர்

- கிருஷ்ண யசுர் வேதம், தைத்திரீய ஆரணியகம்

**எவன் வேதத்தின் எழுத்துக்களாக இருக்கின்றானோ, எவன் வேதத்தைச் சொன்னவனோ, எவன் வேதத்தாலே சொல்லப் படுகின்றவனோ, எவன் உலகங்களெல்லாம் ஒடுங்கும் இடமாக உள்ளவனோ அந்தப் பரமனே மகேஸ்வரன்.**

- கிருஷ்ண யசுர் வேதம், சுக ரகஸ்ய

உபநிடதம் 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிபெறு வடமர நிழலினில் அமர்வொடு மடியிணை யிருவர்கள்
பணிதர அறநெறி மறையொடும் அருளிய பரன்உறை விடமொளி
மணிபொரு வருமர கதநில மலிபுன லணைதரு வயலணி
திணிபொழி றருமண மதுநுகர் அறுபத முரல்திரு மிழலையே.

- 1ம் திருமுறை, திருஞானசம்பந்தர் தேவாரம்

வேதர் வேதமெல் லாம் முறையால் விரித்து
ஓத நின்ற ஒருவனார்
பாதிபெண்ணுரு வாவர்பராய்த்துறை
ஆதியாய வடிகளே.

- 1ம் திருமுறை, திருஞானசம்பந்தர் தேவாரம்

நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர்கேட்க நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நீழன்மேவி யருமறை சொன்னதென்னே
சேலடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே.

- 1ம் திருமுறை, திருஞானசம்பந்தர் தேவாரம்

சுழிந்தகங்கை தோய்ந்ததிங்கட் டொல்லராநல் லிதழி
சழிந்தசென்னிச் சைவவேடந் தான்நினைந் தைம்புலனும்
அழிந்தசிந்தை அந்தணாளர்க்கு அறம்பொருள் இன்பம்வீடு
மொழிந்தவாயான் முக்கணாதி மேயதுமு துகுன்றே.

- 1ம் திருமுறை, திருஞானசம்பந்தர் தேவாரம்

அங்கமொராறும் மருமறைநான்கும் மருள்செய்து
பொங்குவெண்ணூலும் பொடியணிமார்பிற் பொலிவித்துத்
திங்களும்பாம்புந் திகழ்சடைவைத்தோர் தேன்மொழி
பங்கினன்மேய நன்னகர்போலும் பரங்குன்றே.

- 1ம் திருமுறை, திருஞானசம்பந்தர் தேவாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...மறைமுத னான்கும்
மூன்று காலமுந் தோன்ற நின்றனை....

- 1ம் திருமுறை, திருஞானசம்பந்தர்
தேவாரம்,
திருவெழுகூற்றிருக்கை

பாதம்விண்ணோர் பலரும் பரவிப் பணிந்தேத்தவே
வேதநான்கும் பதினெட்டொ டாறும் விரித்தார்க்கிடம்
தாதுவிண்ட மதுவுண்டு மிண்டிவரு வண்டினம்
கீதம்பாட மடமந்தி கேட்டுகளுங் கேதாரமே.

- 2ம் திருமுறை, திருஞானசம்பந்தர்
தேவாரம்

எங்கு மாகிநின் றானு மியல்பறி யப்படா
மங்கை பாகங்கொண் டானு மதிசூடு மைந்தனும்
பங்க மில்பதி னெட்டொடு நான்குக் குணர்வுமாய்
அங்க மாறுஞ்சொன் னான் உமை யாறுடை யையனே.

- 2ம் திருமுறை, திருஞானசம்பந்தர்
தேவாரம்

தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்
வகுத்தவன் வளர்பொழிற் கூக மேவினான்
மிகுத்தவன் மிகுத்தவர் புரங்கள் வெந்தறச்
செகுத்தவன் உறைவிடம் திருவிற் கோலமே

- 3ம் திருமுறை, திருஞானசம்பந்தர்
தேவாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காது பொத்தரைக் கின்னரர் உழுவை
கடிக்கும் பன்னகம் பிடிப்பருஞ் சீயம்
கோதில் மாதவர் குழுவுடன் கேட்பக்
கோல ஆல்நிழற் கீழ் அறம் பகர
வேதஞ் செய்தவர் எய்திய இன்பம்
யானுங் கேட்டுநின் இணையடி யடைந்தேன்
நீதி வேதியர் நிறைபுக ழுலகில்
நிலவு தென்திரு நின்றியூ ரானே.

- 7ம் திருமுறை, சுந்தர்
தேவாரம்

ஓதம் வந்துல வுங்கரை தன்மேல்
ஒற்றி யூருறை செல்வனை நாளும்
ஞாலந் தான்பர வப்படு கின்ற
நான்ம றைஅங்கம் ஓதிய நாவன்
சீலந் தான் பெரி தும்மிக வல்ல
சிறுவன் வன்றொண்டன் ஊரன் உரைத்த
பாடல் பத்திவை வல்லவர் தாம்போய்ப்
பரக திதிண்ணம் நண்ணுவர் தாமே.

- 7ம் திருமுறை, சுந்தர்
தேவாரம்

அருந்தவருக்கு ஆலின்கீழ்அறமுதலா நான்கினையும்
இருந்தவருக் கருளுமதுஎனக்கறிய இயம்பேடீ
அருந்தவருக் கறமுதல்நான்கன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கைதெரியாகாண் சாழலோ.

- 8ம் திருமுறை, திருவாசகம்

...அரவா பரணன் தந்த அருமறை...

....சங்கரன் அருளின் வந்த சதுர்மறை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**.....இதந்தரு உருத்திரமா மறையுஞ் செப்பினர்....**
**-வில்லிபுத்தூராழவார் அருளிய வில்லிபாரதம்**

உலகில் வாழும்பொழுதே முத்திநிலை அடைந்து எம்மிடையே வாழும் சீவன்முத்தர்களின் வார்த்தைகள் அவர்களோடு இரண்டறக கலந்து நிற்கும் இறைவனின் வார்த்தைகளே. அவர்களின் செயல்கள் இறைவனின் செயல்களே.

**"சிவனும் இவன் செய்தி எல்லாம் என் செய்தி என்றும்**
**செய்தது எனக்கு இவனுக்குச் செய்தது என்றும்**
**பவம் அகல உடனாகி நின்று கொள்வன் பரிவால்"**

என்று சிவஞான சித்தியார் இதனைக் கூறுகின்றது.

**"எனதுரை தனதுரையாக"**

என்று சம்பந்தரும் இதனைப் பாடுகின்றார். இதனாலேயே நாம் சம்பந்தர் முதலான அருளாளர்கள் பாடிய பன்னிரு திருமுறைப் பாடல்களையும் தமிழ் வேதம் என்கின்றோம்.

சிவயோகர் சுவாமிகளின் நற்சிந்தனையும் இத்தகையதே என்பது எனது கருத்து.

**<u>வேதங்களில் என்ன தான் சொல்லப்படுகின்றது?</u>**

வேதங்களில் இரண்டு விடயங்கள் சொல்லப்படுகின்றன.

1. தர்மம் என்னும் மனித வாழ்க்கைக்கான வழி நெறிகள்
2. இறையை வழிபடும் தோத்திரங்கள்

**<u>தோத்திரம் என்றால் என்ன?</u>**

தோத்திரம் என்பது துதிப்பாடல்களாகும்.

**குணிநிஷ்ட குணபிதாநம் ஸ்தோத்ரம்**
**நமஸ்காரஸ் ததாசீச்ச ஸித்தாந்தோக்தி பராக்ரம**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விபூதி ப்ரார்தநாசேதி ஷட்விதம் ஸ்தோத்ர லக்ஷணம்.**

வணங்குதல், வாழ்த்துதல், நம்பிக்கையை பிரகடனம் செய்தல், பராக்கிரமத்தைப் புகழுதல், அருளை வியத்தல், வேண்டுதல் ஆகிய ஆறு கூறுகள் (ஒன்றோ பலவோ) கொண்டது தோத்திரம் ஆகும். இந்த வகையில் தான் நாம் நமது தோத்திரங்களான பன்னிரு திருமுறைகளையும் **தமிழ் வேதம்** என்று கொண்டாடுகின்றோம். சீவன்முத்த ஞானிகளின் தோத்திரங்களே இவ்வாறு வேதம் எனக் கொள்ளக்கூடிய தோத்திரங்கள் எனலாம். சிவயோகர் சுவாமிகளின் நற்சிந்தனையும் இவ்வாறானது என்பது எனது தாழ்மையான கருத்து.

## வேதம் சொல்லும் தர்மம்:

- **தர்மம்** என்பதன் அடிச்சொல் **தரு. தரு** என்றால் தாங்குவது. எம்மைத் தாங்குவது எமது தர்மம். இதை **வாழ்நெறி - LIFESTYLE** - என்று இக்காலத்தில் கூறலாம். எம்மை மட்டுமல்ல இந்த உலகத்தையே தாங்குவது தர்மம். எமது வேதங்கள் மனித வாழ்நெறியாகிய தர்மத்தை **அறம், பொருள், இன்பம், வீடு** என்னும் நான்கு இலட்சியங்களாக வகுத்துக் கூறுகின்றன. இவற்றை புருஷார்த்தம் என்றும் கூறுவர். இதனாலேயே இந்த அறம், பொருள், இன்பத்தை விளக்கும் **திருக்குறள்** தட்சண வேதம் என்றும், **தமிழ் வேதம்** என்றும் போற்றப்படுகின்றது. வீடுபேற்றை விளக்கும் 14 மெய்கண்ட சாத்திரங்களும் கூட **தமிழ் வேதம்** எனலாம். வீடுபேற்றைப் பற்றிக் கூறும் வேதங்களின் ஞானகாண்டமான உபநிடத வேதாந்தப் பொருளைச் சிவாகமங்களுக்கு மாறுபடாவண்ணம் விளக்கும் வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்த நூல்களான இந்த மெய்கண்ட சாத்திரங்கள் பதின்னான்கையும் **தமிழ் உபநிடதங்கள்** எனினும் தகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தர்மம் என்பது இந்த உலகத்தை மட்டுமல்ல இறைவனையே தாங்குவது. சிவனைத் தாங்குகின்ற வெள்ளை எருது தர்மத்தைக் குறிப்பதாகும். இந்த எருதைத் தாங்கும் அதன் நான்கு கால்களும் நான்கு வேதங்களாகும் என்று சித்தாந்த சைவம் சொல்லுகின்றது. மொத்தத்தில் எம்மையும், உலகையும், தர்மத்தையும், ஏன் இறைவனையும் கூடத் தாங்குவதும், நிலைநிறுத்துவதும் வேதங்களே

**அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு அறம் பொருள் இன்பம் வீடு**
**மொழிந்த வாயான் முக்கணோதி மேய முதுகுன்றே.**
**- 1ம் திருமுறை, திருஞானசம்பந்தர் தேவாரம்**

**அருந்தவர்க்கு ஆலின் கீழ் அறம் முதலா நான்கினையும்**
**இருந்தருளிச் செய்தவா றெனக் கூறியது இயம்பேடீ**
**- 8ம் திருமுறை, திருவாசகம்**

1. __அறம்:__ அறம் என்பது வாழ்க்கையின் பல்வேறு நிலைகளிலும் தத்தமக்கு உரிய சரியான வாழ்நெறிகளை அணுகுதலும், ஆராய்தலும், தேர்ந்தெடுத்தலும், நடைமுறைப்படுத்தலுமாம்.

**வேதத்தை விட்ட அறம் இல்லை வேதத்தில்**
**ஓதத்தகும் அறம் எல்லாம் உள் தர்க்க**
**வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற**
**வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே.**
**- 10ம் திருமுறை- திருமந்திரம் - 51**

2. __பொருள்:__ பொருள் என்பது பொருள் ஈட்டல் மட்டுமல்ல. பொருள் என்பது எமது வாழ்க்கையில் பொருள் வளத்தை மட்டுமல்லாது மனித வளம், இயற்கை வளம், அறிவு வளம், ஆற்றல் வளம், உள வளம், சமூக வளம், அரசியல் வளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலான பல வளங்களையும் சரியாக இனங்காணுதலும், பேணுதலும், வளர்த்தலும், பகிர்தலும், பயன்படுத்தலுமாம்.

3. **இன்பம்:** இன்பம் என்பது காதலின்பத்தை மட்டுமல்லாது உலக இன்பங்களையும் பொறுப்புணர்வோடு அறநெறியில் அணுகுதலும், அனுபவித்தலாகும்.
4. **வீடு:** வீடு என்பது எமது கட்டுகளில் இருந்து விடுபட்டு இறையுடன் பேரின்பம் அனுபவிக்கும் ஆன்மீக விடுதலையாகும். எமது வேதங்களில் வீட்டைப் பற்றிக் கூறும் பகுதி **ஞானகாண்டம்** என்னும் உபநிடதங்களாகும். 108 **உபநிடதங்கள்** இன்று வழக்கில் உள்ளன. இவற்றுள் 32 சைவர்களுக்குப் பிரதானமானவை.

**ஞானம்:** ஞானம் என்பது அறிவு. **GNOW** என்னும் கிரேக்க மொழிச் சொல்லுக்கு ஞானம் என்ற சொல்லே அடிப்படை. இந்த கிரேக்கச் சொல்லில் இருந்து வந்ததே **KNOW** என்னும் அறிதலைக் குறிக்கும் ஆங்கிலச்சொல். **KNOWLEDGE** என்ற அறிவைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லும் இதிலிருந்து வந்ததே.

<u>ஆறங்கம்</u>: இந்த வேதங்களுடன் அதன் ஆறு அங்க (ஷட் + அங்க = சடங்கு)நூல்களாக ஆறு தொகுதிகள் உள்ளன. இவை பின்வருமாறு:

1. **சிட்சை** என்னும் மொழி உச்சரிப்பும், ஒலி – Phonetics, Pronunciation and Accent,
2. **வியாகரணம்** என்னும்மொழி இலக்கணம் – Grammar
3. **நிருக்தம்** என்னும் சொற்பிறப்பியலையும் – philology, etymology and thesaurus,
4. **சந்தோவிசிதி** என்னும் யாப்பியல் அணி - Metre and prosody



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. **சோதிடம்** என்னும் வானவியல் பிரயோகம்–Astrology, the Astronomical application in timing of events and rituals.
6. **கல்பம் என்னும்** வேதங்களில் விதிக்கப்பட்ட கருமங்களை அநுட்டிக்கும் முறைமை – Methodology of vedic rituals.

**ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி"**
**- அப்பர் தேவாரம்**

இவற்றில் **சிட்சை, வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதி** ஆகிய முதல் நான்கு தொகுதிகளும் மொழியியல் ஆகும்.

**உபாங்க நூல்கள்:** இத்துடன் **புராணம், நியாயம், மீமாம்சை, ஸ்மிருதி** என்னும் நான்கு தொகுதி நூல்களும் வேதத்தின் உபாங்க நூல்களாகக் கொள்ளப்படுகின்றன.

1. **புராணம்**: புராணமாவது பாரம்பரியக் கதைகள், வரலாற்றுக் குறிப்புகள், வரலாற்றுக்கு முந்திய காலத்துக் கூறுகள் என்பவற்றுடன் கூடிய தொன்மக் கதைகளின் தொகுப்பாகும். புராணங்களை வேதங்களின் உட்பொருளை அறிய முடியாத பாமர மக்களுக்கான விடயம் என வேதாந்த மரபு கூற இவற்றைச் " **சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும்**" என்று சிறப்பித்துச் சித்தாந்த சைவம் கூறுகின்றது. பதினெட்டுப் புராணங்களும், பதினெட்டு உப-புராணங்களும் வடமொழியில் உள்ளன. சித்தாந்த சைவ மரபில் வியாசரே மகாபாரதத்தை யாத்தவர். இவரே சிவனிடம் இருந்து வழி வழியாக வந்த புராணங்களையும் பதினெட்டாக வகுத்து எழுத்துரு தந்தவர். இவர் புராணங்களைப் பதினெட்டாக வகுத்து எழுதி சூத முனிவருக்குக் கூறினார். சூத முனிவரால் இப்பதினெட்டுப் புராணங்களும் எல்லோருக்கும் வெளிப்படுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாதனார் அருள் பெறு நந்தி தந்திட
கோதிலாது உணர் சனற்குமரன் கூறிட
வாத ராயண முனி வகுப்ப ஓர்ந்துணர்
சூதன் ஓதியது மூவாறு தொல்கதை.**

மூவாறு - பதினெட்டு.
**-கச்சியப்ப சிவாச்சாரியார் அருளிய கந்தபுராணம் -33**

**நாதன் அருள் பிரியாத நந்தி தரச், சனற்குமரன்
வேத வியாதனுக்கு அளிக்க, மேன்மையெல்லாம் அவன் விளங்கிச்
சூதமுனி தனக்கு உதவச், சோபான வகை தொகுத்த
மூதறிவால் அவன் மொழிந்த புராணம் அவை மூவாறில்.
- உமாபதி சிவாச்சாரியார் அருளிய கோயிற்புராணம் - 24**

**கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம்** என்னும் மூன்றும் தமிழ் மொழியில் உள்ள புராணங்கள் ஆகும். இவை சிவனின் மூன்று கண்கள் என்று சிறப்பித்துக் கூறும் சித்தாந்த சைவம். இவற்றில் சேக்கிழார் 12ம் நூற்றாண்டில் அருளிச் செய்த 12ம் திருமுறையான **திருத்தொண்டர் புராணமே** பெரிய புராணம் ஆகும். **"தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே"** என்னும் ஔவையார் வாக்கிற்கேற்ப 63 அடியவர்களின் வரலாறு கூறும் இந்நூல் **பெரியபுராணம்** எனச் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. **திருவிளையாடல் புராணம்** மதுரை சொக்கநாதர் திருக்கோவிலின் தல புராணமாகும். இது இங்கு நடந்ததாகக் கூறப்படும் சிவனின் 64 திருவிளையாடல்களை விபரிக்கின்றது.

சிவயோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களிலும்

**"மாமதுரைத் தெரு வலையல் கொண்டு வந்தான்
சோமசுந் தரனென் றுந்தீபற
சுன்னாகத் தானென் றுந்தீபற**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும்,

**"விடத்தை மிடற்றில் வைத்த விமல னருள் பெற்றால்**
**சத்தின்மேல் ஆசையுண்டோ – குதம்பாய்**
**சத்தின்மேல் ஆசையுண்டோ"**

என்றும் பல புராணச் செய்திகளையும் உள்வாங்கியிருப்பதைக் காணலாம். புராணச் செய்திகளை அப்படியே உள்வாங்காமல் அவற்றின் உட்பொருளை உணர்த்தும் விதமாகவும் சிவயோகர் சுவாமிகள் பாடியுள்ளதை

**"காமன் றன்னை எரித்திடல் வேண்டுமே"**

போன்ற நற்சிந்தனைப் பாடல் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

2. **நியாயம்:** தர்க்க ரீதியாக ஒரு விடயத்தை அணுகி ஆராய்ந்து அறியும் முறைகளைக் கூறுவது நியாயம். இதைப் பற்றி முன்னர் தரிசனங்கள் பற்றிக் கூறும் போது பார்த்தோம்.
3. **மீமாம்சை:** இது உலகியல் ரீதியாகப் பயன் தரக்கூடிய வழிமுறைகளையும், வழிபாடுகளையும், கிரியைகளையும், பிராயச்சித்தங்களையும் கூறுவது. இதைப் பற்றியும் முன்னர் தரிசனங்கள் பற்றிக் கூறும் போது பார்த்தோம்.

**ஸ்மிருதி:** மக்களின் தனி மனித சமூகப் பொறுப்புகளையும், கடமைகளையும் வரையறை செய்து அதற்குரிய சட்ட திட்டங்கள், விதிகள், வழிமுறைகள் பற்றி விபரிப்பது ஸ்மிருதி நூல்கள். இது அவ்வவ் காலங்களில் எழுந்த அவசரகால விதிகள், அவ்வப்போது குறிப்பிட்ட சமுதாயம் தனது தனிப்பட்ட நலன் கருதிச் செய்த சட்ட திட்டங்கள் யாவற்றையும் கொண்ட கலவையாகும். மொத்தத்தில் இந்திய துணைக்கண்டத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்திய சட்டங்கள், விதிகள், விதி விலக்குகளின் தொகுப்பு நூல் எனலாம்.

பதினெட்டு ஸ்மிருதி நூல்கள் இருந்தாலும் மனு ஸ்மிருதி, பராசர ஸ்மிருதி ஆகியவை பிரபலமெனும் பெயருக்குமானவை. இவற்றைத் தொகுத்துச் சுருக்கி தஞ்சாவூரில் வாழ்ந்த **வைத்தியநாத தீட்சிதர்** என்பார் **"ஸ்மிருதி முக்தா பலம்"** எனும் பெயரால் ஒரு நூலாகச் செய்துள்ளார். இந்த நூலை எழுதிய ஆசிரியரின் பெயரால் **"வைத்திய நாத தீட்சிதம்"** என்றும் அழைப்பர்.

கர்ப்பாதானம் என்னும் கர்ப்பம் தரித்தல், ஜாத கர்மா என்னும் - ஜனன சாதகம் எழுதுதல், நாம கரணம் - என்னும் பெயர் சூட்டுதல், கர்ண வேதனம் என்னும் காது குத்துதல், அன்னப் பிராசனம் என்னும் சோறு தீத்துதல், அட்சாரம்பம் என்னும் ஏடு தொடக்குதல், உபநயனம் என்னும் பூணூல் சடங்கு, கன்னிகாதானம் என்னும் விவாகம், இல்லறத்தாருக்குரிய ஐந்து கடமைகளான **1. பித்ரு காரியம், 2. தெய்வ வழிபாடு, 3. ஞானதானம் செய்யும் ரிஷிகள், குருமார், நூல்களுக்கு ஆதரவு 4. மானுட சேவை, 5. மற்ற உயிர்களுக்கு ஆதரவு,** என்னும் **பஞ்சமஹாஜக்ஞம்** என்னும் **ஐம்பெரும் வேள்விகள்** போன்ற சம்ஸ்காரங்களைக் கூறுவது இந்த ஸ்மிருதிகள்.

இதனையே சற்று வேறுபாட்டுடன் திருவள்ளுவர்

**"தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் என்றாங்கு**
**ஐம்புலத்து ஓம்பல் தலை"**

என்று இல்லறத்தாரின் கடமைகளாக 1. **தென்புலத்தார் என்னும் இறந்தோருக்கான பித்ரு கடமை, 2. தெய்வத்துக்கான இறை கடமை 3. விருந்தோம்பல் 4. சுற்றம் பேணல் 5. தன்னையும் பேணல்** என ஐந்தையும் வகுத்துத் தந்துள்ளது.

சிவயோகர் சுவாமிகளும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"இல்லாளுந் தானு மிசைந்தொன்றாய் வாழ்வதே
நல்லாறென் பார்பெரியார் நாடு"**

என்றும்,

**"இணங்கி வாழ் மாந்தர்க ளின்பவீ டாள்வார்
பணம்பொரு ளெல்லாம் படைத்து"**

என்றும் பல இடங்களில் இல்லற தர்மத்தையும், கடமைகளையும் பற்றி நற்சிந்தனைப் பாடல்களிலே பாடியுள்ளார்.

சட்டம், ஒழுங்கு, நீதி வழங்கல் - **Application of Law, Order and Justice** - ஆகியவையும் மிருதியாகும். இன்றைய சட்டவியலின் அடிப்படை இது. இவை ஒவ்வொரு காலங்களில் சமூகத்தின் அதிகார வர்க்கத்தில் உள்ளவர்களால் திரிபுபடுத்தப்பட்டு தமக்கு சாதகமாக இருப்பதற்காகத் துஷ்பிரயோகம் செய்யப்பட்டாலும் இதன் தூய கூறுகள் பல இலங்கையில் தொடர்ந்தும் வழமையில் இருந்தன. இவை ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் ஆவணப்படுத்தப்பட்டு **யாழ்ப்பாணத் தேச வழமைச்** சட்டமாக இன்றும் வழமையில் உள்ளன. இதில் சகசமாக விளக்கப்பட்டுள்ள பெண்களின் சொத்துரிமை, தாலி அறுத்து மறுமணம், விதவா விவாகம் போன்ற முற்போக்கான விடயங்கள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மூன்று முறை திருத்தி மட்டுப்படுத்தப்பட்டன. அத்தோடு ஸ்மிருதிகளில் உள்ளது போல் இங்கு சாதி ரீதியாக நீதி மட்டுப்படுத்தப்படவில்லை என்பது திருமந்திரம் அக்கால ஆகமங்களின் கலப்படமற்ற தூய வடிவத்தைக் காட்டுவது போல், யாழ்ப்பாண தேசவழமைச் சட்டம் அக்கால ஸ்மிருதிகளின் ஒரு தூய வடிவத்தைக் காட்டுகின்றது எனலாம்.

**"ஆட்சியில் ஆவணத்தில் அன்றி மற்று அயலார் தங்கள்
காட்சியின் மூன்றில் ஒன்று காட்டுவாய்"**
என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மூட்சியில் கிழித்த ஓலை படியோலை, மூல ஓலை மாட்சியில் காட்ட வைத்தேன்"**
என்றும்,

**"இந்த ஆவணத்தினோடும் எழுந்து நீர் ஒப்பு நோக்கி வந்து அது மொழிமின் என்றான்"**
என்றும்,

**" மற்ற மறைவயன் எழுத்தால் ஓலை
அரண் தரு காப்பில் வேறொன்று அழைத்து உடன் ஒப்பு நோக்கி
இரண்டும் ஒத்திருந்தது என்னே"**

என்றும் சுந்தரரைச் சிவன் தடுத்தாட்கொண்ட போது வழக்குரைத்த பகுதியில் எட்டாம் நூற்றாண்டில் வழக்கில் இருந்த 12ம் நூற்றாண்டில் சேக்கிழார் பெருமானால் ஆவணப்படுத்தப்பட்ட கலப்படமற்ற ஸ்மிருதிகளின் ஒப்பற்ற நீதித்துறையின் இடைச்செருகல், திரிபு, புனைவு இல்லாத தொடர்ச்சியை நாம் யாழ்ப்பாணத் தேச வழமை சட்டத்தில் காணலாம். இன்று பிற்காலத்து திரிபுபடுத்தப்பட்ட ஸ்மிருதிகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இந்தியாவின் இந்துக்களின் திருமண மற்றும் சொத்துரிமைச் சட்டங்கள் மீண்டும் திருத்தப்பட்டுக் கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். தேசவழமைச் சட்டத்துக்கு இந்த தேவை இல்லையாயினும் இடைக் காலத்து ஆங்கில ஆட்சியாளர்களால் மட்டுப்படுத்தப்பட்ட சில பெண்ணுரிமைகள் மீள எடுக்கப்பட வேண்டிய தேவை எமக்கு உண்டு.

தமிழில் ஸ்மிருதிகளுக்கு இணையாக உள்ளவை எமது **நீதி நூல்கள்.** இவையாவன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையார் அருளிய

1. ஆத்திசூடி
2. கொன்றைவேந்தன்
3. நல்வழி
4. மூதுரை

குமரகுருபர சுவாமிகள் அருளிய

1. நீதி நெறி விளக்கம்

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய

1. நன்னெறி

உலகநாதர் அருளிய

1. உலக நீதி புராணம்

அதிவீரராம பாண்டியன் அருளிய

1. வெற்றிவேற்கை

பதினென் கீழ்க்கணக்கு நூல்கள் என்று வழங்கும்

1. திருக்குறள்
2. நாலடியார்
3. நான்மணிக்கடிகை
4. இன்னா நாற்பது
5. இனியவை நாற்பது
6. கார் நாற்பது
7. களவழி நாற்பது
8. ஐந்திணை ஐம்பது
9. ஐந்திணை எழுபது
10. திணைமொழி ஐம்பது
11. திணைமாலை நூற்றைம்பது
12. திரிகடுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ஆசாரக் கோவை
14. பழமொழி நானூறு
15. சிறுபஞ்சமூலம்
16. கைந்நிலை
17. முதுமொழிக் காஞ்சி
18. ஏலாதி

என்பனவாம்.

**உபவேதங்கள்:** இதைவிட **ஆயுர்வேதம், தனுர் வேதம், காந்தர்வ வேதம், ஸ்தபத வேதம்** என நான்கு உப வேதங்களைச் சொல்வர்.

1. **ஆயுர்வேதம்:** இது ஆயுளை உறுதி செய்யும் வைத்திய சாத்திர நூல்களின் தொகுப்பு ஆகும்.
2. **தனுர் வேதம்:** இது படை நடத்துதல், படைக்கலப் பயிற்சி, போர் முறைகள், யுத்த வியூகங்கள் பற்றிக் கூறும் நூல்களின் தொகுப்பாகும்.
3. **காந்தர்வ வேதம்:** இது ஆடல், பாடல், இசை, விருந்துகள், விளையாட்டுகள் பற்றிக் கூறும் அழகியல் நூல்களின் தொகுப்பாகும்.
4. **ஸ்தபத வேதம்:** இது கட்டட மற்றும் நகர கட்டுமானங்கள் பற்றிய நூல்களின் தொகுப்பாகும்.

**ஆகமங்கள் என்ன சொல்கின்றன?**

- வேதத்தில் ஞான காண்டம் ஆகிய வேதாந்தம் என்னும் உபநிடதப் பகுதியில் சாதாரண உலக மக்களுக்கு பொதுவாகக் கூறப்பட்ட வீடு என்னும் ஆன்ம விடுதலை பற்றிய பகுதியை தீவிர ஆன்ம நாட்டம் உள்ளோருக்காக விரித்து உரைப்பது ஆகமம்.

**"வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க"
- திருவாசகம், 8ம் திருமுறை

- சிவாகமங்கள் இருபத்தெட்டு ஆகும். அவையாவன **காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விஜயம், நிருச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம்** என்பனவாம். இதைவிட 207 உப- ஆகமங்களும் உள்ளன.
- 10ம் திருமுறையான திருமந்திரம் தோத்திரப் பாடல்களுடன் தத்துவத்தை விளக்கும் சாத்திரப் பாடல்களையும் கொண்டுள்ளது. இதை ஒன்பது ஆகமங்களின் சாரம் என அந்நூல் கூறுகின்றது.

**பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்**
**உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்**
**மற்றவ் வியாமள மாகுங்கா லோத்தரம்**
**துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே**

என்று இந்த ஒன்பது ஆகமங்களின் பெயர்களையும் பட்டியல் இடுகின்றார் திருமூலர். இதிலே வியாமளம் என்பது சாக்த ஆகமம் ஆகும். தேவிகாலோத்தரம் உப ஆகமம் ஆகும். பிற்காலத்தில் சோழப்பேரரசின் எழுச்சியுடன் சமுதாயத்தில் உட்புகுந்த வர்ணாச்சிரம சாதிய ஆதிக்கத்தின் ஊடுருவல், ஆலயங்களில் பஞ்சகோத்திர சிவாச்சாரிய மரபின் மேலாதிக்கம் ஆகியவற்றுக்கு முன்னான காலத்துத் தூய ஆகம மரபின் செய்திகளை நாம் திருமந்திரத்தில் காண்கின்றோம் என்பது எனது கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வேதங்கள் பொது மக்களுக்கு அவர்களின் உலக வாழ்க்கைக்கு அத்தியாவசியமான விடயங்களான அறம், பொருள், இன்பம் என்பவற்றை வெளிப்படையாகவும், மெய்யாகிய இறையையும் அதை அடையும் வீடு என்னும் ஆன்ம விடுதலையையும் குறிப்பாகவும் கூறுகின்றன.
- ஆகமங்கள் மெய்யாகிய இறையையும், இறையை அடையும் வீடு என்னும் ஆன்ம விடுதலையையும், அதற்கான வழிகளையும் சிறப்பாகவும், உலக வாழ்வுக்குரிய அறம், பொருள், இன்பம் ஆகியவற்றைக் குறிப்பாகவும் கூறுகின்றன.
- ஆகமங்கள் வெளிப்படையாகவும், விளக்கமாகவும் கூறுவது கடவுளை மையமாகக் கொண்ட வாழ்நெறியை. இதை சிவதர்மம் என்றும் சிவ **புண்ணியம்** என்றும் அழைப்பர். **எந்தச் சமயமாக இருந்தாலும் அவரவர் கடவுளை அல்லது மெய்யை மையமாக, நோக்கமாகக் கொண்ட வாழ்நெறி சிவ தர்மம் ஆகும் எச்சமயத்தில் நின்றாலும் இத் தர்மத்தில் ஒழுகுபவர் சைவர் ஆவர்.**

- **"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வம் ஆகி ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்......."**
  **- மெய்கண்ட சாத்திரம் - சிவஞானசித்தியார் 115**

  **"....எங்கும் வாழ் தெய்வம் எல்லாம் இறைவன் ஆணையினால் நிற்பது**
  **அங்கு நாம் செய்யும் செய்திக்கு ஆணை வைப்பால் அளிப்பன்."**
  **- மெய்கண்ட சாத்திரம் - சிவஞான சித்தியார் 116**

- இறையை இலக்காகக் கொண்ட சிவதர்மமானது(**Theocentric Lifestyle**) தன்னை மையமாகக் கொண்ட வாழ்க்கையான சாமானிய **உலக தர்மத்திலும்(Egocentric Lifestyle)**, தன்னை விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களுக்கு முதலிடம் கொடுக்கும் வாழ்க்கையான சமூக தர்மம் என்னும் **வைதிக தர்மத்திலும்(Sociocentric Lifestyle)** மேலானது.

- எமது வாழ்க்கையில் இத்தர்மங்கள் ஒன்றுக்கொன்று முரணுறும் சந்தர்ப்பங்களில் உலக தர்மத்தை விட வைதீக தர்மத்துக்கும் வைதீக தர்மத்தை விட சிவ தர்மத்துக்குமே மேலான முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் பேண வேண்டும். தீவிர ஆன்ம நாட்டம் கொண்ட சத்திநிபாதர் எல்லா தர்மங்களையும் பகைத்தாலும், கை விட்டாலும் இடைவிடாது சிவதர்மத்தைப் பேணுவர் என்பது பெரிய புராண அடியார்களின் வரலாறுகளால் நாம் அறிகின்றோம்.

**சர்வ தர்மான் பரித்யஜ்ய**
**மாமேகம் சரணம் வ்ரஜ**
**அஹம் த்வா ஸர்வ-பாபேப் யோ**
**மோக்ஷயிஷ்யாமி மா சுச:**

எல்லா தர்மங்களையும் விட்டு என்னையே சரண் அடைவாயாக.
நான் உன்னை எல்லா பாவங்களிலிருந்தும் விடுவிப்பேன்.
வருந்தாதே.
- **சிவோஹம் பாவனையில் ஸ்ரீகிருஷ்ணர், பகவத் கீதை** 18:66

இந்த தெளிவு இல்லாமல் நாம் பெரியபுராணம் கூறும் நாயன்மார்களின் வரலாறுகளைப் புரிந்துகொள்ள முடியாது.

சிவயோகர் சுவாமிகளும்,

**"பொன்னை மாதரைப் போக்கிடல் வேண்டுமே**
**புவியி னாசையை நீக்கிட வேண்டுமே"**
என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாதராசையை நீக்குதல் இன்பமே"
என்றும்,
**ஐம்பொறியை அடக்குதல் வீரமே**

என்றும்,

கீழான உலக தர்ம நிலையில் இருந்து அதை விட்டு நீங்கி மேலான சிவதர்ம நிலையை அடையவேண்டும் என்று தமது நற்சிந்தனைப் பாடல்களில் அறிவுறுத்துகின்றார்.

- இறையை மையமாகக் கொண்ட வாழ்நெறியான சிவதர்மம் என்னும் இந்தச் சிவபுண்ணியத்தை **சரியை, கிரியை, யோகம், ஞானம்** என நான்கு படிநிலைகளாக விரித்துக் கூறுகின்றன ஆகமங்கள்.
- பல்வேறு பிறவிகளினூடாக செல்லும் உயிரானது பல்வேறு சமயங்களின் உலக, மற்றும் சமூக தர்மங்களினூடாக மேலான மெய்யை நாடும் இறை தர்மமாகிய சைவத்தில் ஈடுபாடு கொள்கின்றது. இவற்றில் சரியை, கிரியை, யோகம் ஆகியவற்றினூடாகச் சென்று ஈற்றில் ஞானத்தின் **கேட்டல், சிந்தித்தல்** என்னும் படிநிலைகளைக் கடந்து பக்குவம் அடைகின்றது. உயிரைப் பீடித்திருக்கும் மல அழுக்குகள் கழன்று விலகுவதற்கு தயாரான இந்நிலை மலபரிபாகம் எனப்படுகின்றது.
- உயிரானது இந்நிலையில் வாழ்க்கையின் நல்லது கெட்டது இரண்டையுமே ஒன்றாகப் பார்க்கும் **தெளிதல்** நிலையை அடைகின்றது. இதை **இருவினை ஒப்பு** நிலை என்று சைவ ஆகமங்கள் கூறுகின்றன.
- இருவினை ஒப்பு அடைந்த ஆன்மாவில் இறையருள் பதிகின்றது. இது **சத்தி நிபாதம்** எனப்படும்.
- இதனால் தன்னையும் அறிந்து, அறிவிக்கும் இறைவனையும் அறிந்து, அவனடி சேர இறைவனும் தன் இயல்பான பேரறிவையும், முடிவிலா ஆனந்தத்தையும் கொடுத்து தன்னுடன் வைக்கின்றான்.
- **"அவன் அருளாலே அவன் தாள் வணங்கி"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 8ம் திருமுறை, திருவாசகம்

- சீவன் முத்தர்கள் வாழும் பொழுதே அனுபவிக்கும் இந்த அநுபவ நிலையே ஞானத்தின் நிறைவான **நிட்டை** நிலை என்று சைவ ஆகமங்கள் கூறுகின்றன.

- **புறச்சமய நெறி நின்றும், அகச்சமயம் புக்கும்,**
**புகல் மிருதி வழி உழன்றும், புகலும் ஆச்சிரம**
**அறத்துறைகள் அவை அடைந்தும், அருந்தவங்கள் புரிந்தும்,**
**அருங்கலைகள் பல தெரிந்தும், ஆரணங்கள் படித்தும்,**
**சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும், வேத**
**சிரப் பொருளை மிகத் தெளிந்தும் சென்றால் சைவத்**
**திறத்தடைவர் இதில் சரியை கிரியா யோகம்**
**செலுத்தியபின் ஞானத்தால் சிவன் அடியைச் சேர்வர்.**
- மெய்கண்ட சாத்திரம், சிவஞானசித்தியார் 263.

- **கேட்டலுடன் சிந்தித்தல், தெளிதல், நிட்டை**
**கிளத்தலென ஈரிரண்டாம் கிளக்கின் ஞானம்**
**வீட்டை அடைந் திடுவர் நிட்டை மேவி னோர்கள் .....**
**- மெய்கண்ட சாத்திரம், சிவஞானசித்தியார் 276**

இந்தப் படிமுறைகளை அறிந்தும் ஏற்றும் பாடிய பல பதிவுகளை நாம் சிவயோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களில் காணலாம்.

**"வேத சாத்திரங் கற்றிடல் இன்பமே"**

என்றும்,

**"நியம நிட்டைகள் ஆற்றுதல் இன்பமே"**

என்றும்,

**"திருநீறும் ஐந்தெழுத்தும் வேண்டும் – வேல் வேல்"**

என்றும் நற்சிந்தனைப் பாடல்களின் பல வரிகள் இந்த ஆசாரப் படிமுறைகளைப் பரிந்துரைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிறமொழி வேதாகமங்கள்:** வடமொழியிலுள்ள நால்வேதங்கள், இருபத்தெட்டு சிவாகமங்கள், அவற்றின் உபாகமங்கள், புராணங்கள் மட்டுமல்ல தமிழில் உள்ள தோத்திரங்களான பன்னிரு திருமுறைகள், பதின்னான்கு மெய்கண்ட சாத்திரங்கள், திருக்குறள் போன்ற நீதி நூல்கள், புராண இதிகாசங்கள் கூட எமது வேதாகம நூல் பரப்புக்குள் அடங்குவன என்று பார்த்தோம்.

இந்த இருமொழிகளில் மட்டுமல்ல, உலகின் பதினெட்டு மொழிகளிலும் இறைவன் இந்த வேதங்களைத் தந்தான் என்று திருமந்திரம் கூறுகின்றது.

இந்த பதினெட்டு மொழிகளுள் இன்றைய உலக மொழிகள் யாவும் நேரடியாகவோ அல்லது அவற்றில் இருந்து தோன்றிப் பிரிந்த கிளை மொழிகளாகவோ அடங்குகின்றன எனலாம்.

- **பண்டிதர் ஆவார் பதினெட்டுப் பாடையும்**
  **அண்ட முதல்வன் அறம் சொன்ன வாறே"**
  **- 10ம் திருமுறை - திருமந்திரம் -59**

இந்தப் பதினெட்டு மொழிகளையும் பட்டியலிடுகின்றது 7ம் நூற்றாண்டில் எழுந்த திவாகர நிகண்டு.

**அங்கம் வங்கம் கலிங்கம கவுசலம்**
**சிந்து சோனகம் திராவிடம் சிங்களம்**
**மகதம் கவுடம் மராட்டம் கொங்கணம்**
**துளுவம் சாவகம் சீனம் காம்போதி**
**அருமணம் பப்பரம் என்னச் சொன்னவை**
**பதினெண் பாடை ஆம் எனப் பகர்வர்**
**- திவாகர நிகண்டு 2449**

இதிலே பாரத தேசத்துப் பாசைகளோடு சோனகம் என்னும் அரபி மொழி, சாவகம் என்னும் கிரேக்க மொழி, சீனம் என்னும் சீன மொழி, பப்பரம் என்னும் எகிப்திய மொழி ஆகிய தூரதேச பிற சமயப் பண்பாட்டு மொழிகளும் உள்வாங்கப்படிருப்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானிக்கலாம். ஆகவே இந்த தேசங்களில் தோன்றி, வழங்கும் பல்வேறு சமயங்களின் வேத நூல்களும் கூட இவ்வகையில் எமது வேதாகமப் பரப்புக்குள் வருவனவாகவும் கொள்ளலாம் என்பது எனது கருத்து.

**பிற அண்டங்களில் வேதாகமங்கள்:** வேதாகமங்கள் இந்தப் பூமியில் உள்ள மனிதர்களுக்கு மட்டுமே என்னும் மானுட மைய, பூமி மையப் போக்குக்கு அப்பால் கோடிக்கணக்கில் விரிந்து பரந்திருக்கும் இந்த அண்டத் தொகுதிகளில் எங்கெங்கெல்லாம் உயிரினங்கள் உள்ளனவோ அவற்றுக் கெல்லாம் பொதுவேயான ஒரே கடவுள் இந்த வேத, ஆகமச் செய்திகளை அந்தந்த உலகங்களில் வாழும் உயிர் வாழிகளுக்கு வழங்குகின்றார் என்பது சைவத்தின் ஒரு சிறப்பான நிலைப்பாடு.

இவ்வாறு வழங்கும்போது

- **வைகரி** என்னும் பேசுமொழிகள்,
- **மத்திமை** என்னும் சிந்தனாமொழிகள் கடந்து
- **பைசந்தி** என்னும் நுண்மொழிகள்,
- **பரை** என்னும் மொழிகள் கடந்த தொடர்பாடல் முறைகளால்

இந்த வேதாகமங்களை அந்தந்த அண்ட உலகங்களில் உள்ளவர்களுக்கு வழங்குகின்றார் என்பது சித்தாந்த சைவத்தின் நிலைப்பாடு. எங்களுக்குத் தொடர்பாடல் எவ்வளவு முக்கியமோ அவ்வளவுக்கு இறைவனுக்கும் தொடர்பாடல் முக்கியம். இந்த தொடர்பாடல் இல்லாவிட்டால் இறையின் சித்தம் தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் சிவத்துவம் தரும் திட்டம் எதுவுமே நடைபெறாது.

இறைவன் எம்முடன் தொடர்பாடலுக்கு வகுத்துள்ள வழியே அத்துவாக்கள். இந்த அத்துவாக்களில்

- **வன்னம்** என்னும் அட்சரம் அல்லது எழுத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **பதம்** என்னும் சொல்,
- **மந்திரம்** என்னும் வசனம்

ஆகிய மூன்றும் சொற்பிரபஞ்சம்ஆகும்.

உலகின்

- இயக்கும் இறை சக்தியின்பஞ்ச **கலைகள்**,
- உலகை ஆக்கும் நுண்கூறுகளான **36 தத்துவங்கள்**,
- இவற்றினால் ஆன பரு உலகமான **அண்டத்தொகுதிகள்**

ஆகிய மூன்றும் **பொருட் பிரபஞ்சம்** ஆகும்.

இந்த ஆறு அத்துவாக்களுமே இறை எம்முடன் கொண்டுள்ள தொடர்பாடல் வழி. இந்த ஆறு அத்துவாக்கள் இல்லாமல் இறை எம்முடன் தொடர்பாட முடியாது. இதுவே இறை எம்மை அடையும் வழி.

- **ஆரணம் ஆகமங்கள் அருளினால் உருவு கொண்டு காரணன் அருளான் ஆகில் கதிப்பவர் இல்லை யாகும் நாரணன் முதலாய் உள்ள சுரர், நரர், நாகர்க்கு எல்லாம் சீர் அணி குருசந் தானச் செய்தியும் சென்றி டாவே.**
  **- மெய்கண்ட சாத்திரம் - சிவஞானசித்தியார் சுபக்கம் 66.**

**வேதங்கள்: அறிவியல் சார்ந்த பார்வை:**

வேதம் என்றால் புனிதநூல் என்ற புரிதல் பொதுவெளியில் இருந்தாலும் **வித்** என்ற மூலச்சொல்லில் இருந்து வந்தது **வேதம்** என்ற சொல். **வித்** என்றால் அறிவு. அதிலும் குறிப்பாக கல்வி சார் அறிவைக் குறிப்பது வேதம் என்ற சொல். வித்தை, வித்தியாசாலை, வித்துவான் ஆகிய சொற்களுக்கும் இதுவே மூலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தத்தில் காலதி காலமாக எமது அறிவியல், ஆன்மிகத் தேடல்களின் ஒட்டுமொத்தமான ஆவணத் தொகுப்பாக நான் வேதத்தைப் பார்க்கின்றேன். இவற்றுள் இன்றைய எமது அழகியல் மற்றும் அறிவியல் துறைகள் யாவும் அடங்குகின்ற இயங்கியல் தளமாக நான் வேதத்தைப் பார்க்கின்றேன்.

வேதம் என்பது என்றோ கண்டறியப்பட்டு, விவாதிக்கப்பட்டு, உரையாடப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டு முடிந்த இறந்தகால கருத்துகள், நூல்களின் தொகுப்பு அல்ல. இது இன்னமும் இயங்கிக்கொண்டிருக்கும் வளர்ச்சித் தளமாகும். இதன் ஆக்கமும், பகிர்வும், பயன்பாடும் இன்னமும் தொடர்கின்ற ஒன்று.

- மனித வாழ்க்கையின் இலக்குகளான அறம், பொருள், இன்பம், வீடு
- வேதாங்கங்களின் மொழியியல், வானியல், கிரியைகள், இவற்றின் பிரயோகங்கள்
- உபவேதங்களின் மருத்துவம், அழகியல், இசை, நுண்கலைகள், வழிபாட்டு முறைகள், நிர்மாணம், கட்டுமானம், படைக்கல உற்பத்தியும் பிரயோகமும், பாதுகாப்பு மற்றும் இராணுவக் கட்டமைப்பு.
- உபாங்க நூல்கள் கூறும் வரலாறு, தொல்லியல், சட்டம், நீதி, அறிவியல், ஆராய்ச்சி

ஆகிய இந்த துறைகளுள் அன்றும், இன்றும், என்றும் உள்ள அனைத்து கல்வி, அறிவு, ஆராய்ச்சிப் பிரிவுகளும் அடங்குகின்றன.

**"அருமறை ஆகமம் முதனூல் அனைத்தும் உரைக்கையினால்"**

**- மெய்கண்ட சாத்திரம் - சிவஞானசித்தியார் சுபக்கம் 266**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இனி வரப்போகின்ற அறிவு ஆராய்ச்சிகளின் வெளிப்பாடுகளும் வேதங்களே. ஆகவே வித் என்ற அடிச்சொல் கூறுவதுபோல் வேதம் என்பது அறிவு நூல்கள் அனைத்தையும் குறிக்கும். ஆன்மிகம் மட்டுமல்ல அனைத்து அறிவுமே வேதம் என்பது எமது சமயத்தின் தனித்துவம்.

**"வேதநூல், சைவநூல் என்று இரண்டே நூல்கள்**
**வேறு உரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள்"**
**- மெய்கண்ட சாத்திரம் - சிவஞானசித்தியார் சுபக்கம் 266**

அனைத்து அறிவுக்கும் முதலிடம் பூரணமான பேரறிவான இறையே. எம்முடைய அறிவெல்லாம் அவன் பேரறிவின் சிறு திவலைகளே. இதுவரை நாம் கண்டறிந்து வெளிப்படுத்தியவையும், இன்று ஆராய்ந்து அறிபவையும், இனிமேல் வருங்காலத்தில் கண்டறியப்போவன யாவுமே அவன் அறிவின் சிறுதுகள்களே உண்மையில் இவற்றையெல்லம் நாம் அறிவதில்லை இறைவனே எமக்கு வெளிப்படுத்துகின்றான். அனைத்து அறிவும் அவனிடம் இருந்தே வந்தது வருகின்றது வரப்போகின்றது. நாம் வெறும் கருவியே. இதனாலேயே வேத மந்திரங்கள் அவற்றை எமக்கு அளித்த ரிஷிகளின் பெயரால் அறியப்பட்டாலும் அவை இறைவனால் வெளிப்படுத்தப்பட்டதாகவே நாம் காண்கின்றோம்.

ஏனைய மதங்களும் கூட தமது மத நூல்களும் அவற்றைச் சொன்ன ஆசான்களினூடாக இறைவனால் வெளிப்படுத்தப்பட்டவை என்றே கூறுகின்றன. சமய நூல்கள் மட்டுமல்ல அனைத்து அறிவுமே இறையால் வெளிப்படுத்தப்படுபவையே என்று சைவம் கூறுகின்றது.

- **அது இது என்னாது அனைத்து அறிவு ஆகும்**
  **அது இது என்றறிந்து உந்தீ பற**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவிழ்ந்த சடையான் என்று உந்தீ பற.

- மெய்கண்ட சாத்திரம் - திருவுந்தியார் 39

- .... ஆதிநூல், அநாதி அமலன் தரு நூல் இரண்டும்....

  - மெய்கண்ட சாத்திரம் - சிவஞானசித்தியார் சுபக்கம் 266

- வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன்நூல்
  ஓதும் பொதுவும் சிறப்பும் என்றுள
  நாதன் உரையவை நாடில் இரண்டு அந்தம்
  பேதமது என்பர் பெரியோர்க்கு அபேதமே.

  - 10ம் திருமுறை - திருமந்திரம் 2397

வேத ஆகமங்களின் தோற்றமானது காலங்காலமாக தொடர்ந்தேர்ச்சியாக நடந்து வருகின்ற ஒன்று. இவை காலம் காலமாக மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தப் பட்டுக்கொண்டே இருக்கின்றன.

ஆகவே அறிவியல் ரீதியில் வேதாகம மரபை தேக்க நிலை அடைந்த ஒரு இறந்தகால மரபாகப் பார்க்காமல் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கும் ஒரு இயங்கியல் மரபுத் தொடர்ச்சியாகப் பார்க்கின்றோம்.

கொடுத்த ஆகமந்தான் நாள் பலகழிய இறத்தலுங், கொங்கலர் கூந்தல்

மடத்தகை உமையாள் இறைவனை நோக்கி "மாய்ந்த ஆகமம் எலாம் எடுத்து
நடத்திடல் வேண்டும்" என்னலும் மைத்த நள்ளிரு நடுவண் நின்றாடும்
விடைக்கொடி உயர்த்தோன் ஆகமம் முழுதும் முன்புபோல் விளங்கிட விரித்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஸ்காந்தபுராணம், வாயுசங்கிதை

- விரியும் ஆகமத்தை அண்ணல் தன்னருளால்
யானும் மெய் தெரி அகத்தியனும்
பொருவிலா ருருவும் தசீசியும் உலகில்
உரை செய்தோம் கலியுகம் பொருந்தி
மருவிடுந் தோறு(ம்) மறுவரு யோகாசிரியன் மாசறு வடிவாய்க்
கரியுரி போர்த்தோன் எய்தி மற்றதனை
உய்ந்திடக் கழறுவன் அன்றே
- ஸ்காந்தபுராணம், வாயுசங்கிதை

மெய்யின் இந்த வெளிப்பாடுகளைக் கண்டறிந்து வெளிப்படுத்துபவர்களை **ரிஷிகள்** என்பர். ரிஷி என்றால் பார்த்தல், இவர்களின் மெய்யின் அல்லது உண்மையின் அந்தப் பரிமாணத்தைப் பார்த்தவர்கள்.

ஆகவே இவர்கள் ரிஷிகள் எனப்படுவர். இறையே இவர்களுக்கு வெளிப்படுத்துவது. இறையே வெளிப்படுத்தினாலும் இவர்கள் தத்தம் நிலைகளுக்கு ஏற்பவே அவற்றைப் புரிந்துகொள்வார்கள் அங்ஙனமே ஆவணப்படுத்துவார்கள் நிறுவுவார்கள். சோதிட நூல்களில் கிரேக்க சோதிட அறிஞர்களை அவன் ரிஷிகள் என்று குறிப்பிடுவதை நாம் ஒப்பு நோக்கலாம். இன்றைய அறிவியலின் விஞ்ஞானிகளையும் ரிஷிகள் எனலாம்.

- அருமறை ஆகமம் முதனூல், அவை அனைத்தும் உரைக்கையினால்;
அளப்பரிதாம் அப்பொருளை அரன் அருளால் அணுக்கள்
தருவார்கள் பின் தனித்தனியே, தாம் அறிந்த அளவில்
தர்க்கமொடு உத் தரங்களினால் சமயம் சாதித்து;
மிருதி, புராணம், கலைகள் மற்றும் எல்லாம்
மெய்ந்நூலின் வழி, புடையாம் அங்கம், வே தாங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருதி, சிவாகமம் ஒழியச் சொல்லுவது ஒன்று இல்லை
சொல்லுவார் தமக்கறையோ சொல்லொ ணாதே.
- மெய்கண்ட சாத்திரம் - சிவஞானசித்தியார் சுபக்கம் 266

**அறுவகைச் சமயப் பரப்பின் பார்வையில் சிவயோக சுவாமிகளின் ஆன்மிகத்தளம்.**

நாங்கள் மற்ற மதங்களையும், பிரிவுகளையும், அவற்றின் சித்தாந்தங்களையும், வேதங்களையும் எவ்வாறு பார்க்கின்றோம்? அவற்றோடு எவ்வாறு நாம் உறவாடுகின்றோம்? எவ்வாறு அவற்றுடன் நம்மைத் தொடர்புபடுத்துகின்றோம்? என்பது இன்றைய பல்சமயக் கலாச்சார சமூக வாழ்க்கையின் முக்கியமான அம்சமாகும்.

இது நாம் எமது பாரம்பரியத்தில் நன்கு காலூன்றி, வேரூன்றி உறுதியாக நின்று வளரும் அதே சமயம் மற்ற மதங்களையும் புரிந்துகொண்டு, அவற்றை மறுதலிக்காமல், அதே சமயம் அவற்றின் நீரோட்டத்தில் கலந்து கரைந்துவிடாமல் எம்மை நிலைநிறுத்திக்கொள்ள அத்தியாவசியமான ஒன்றாகும். நமதும், நமது குழந்தைகளினதும் வினாக்களுக்கும், சந்தேகங்களுக்கும் விடை காணவும் இது உதவும்.


சைவம் தன்னுடைய சனாதன தர்மத்தின் மற்ற மதங்களின் ஆன்மிகத்தளத்தை எவ்வாறு பார்க்கின்றது? சனாதன தர்மத்துக்குப் புறம்பான சமயங்களின் ஆன்மிகதளத்தை எப்படிப் பார்க்கின்றது? என்று பார்ப்போம். சைவம் கூறும் அறுவகைச் சமயங்களுள் நான்கு பிரிவுகளாக கடந்தகால, நிகழ்கால, எதிர்காலச் சமயங்கள் யாவும் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவம் ஒருபோதும் மற்ற மதங்களை மறுதலிப்பதில்லை. அதே நேரம் எல்லா மதங்களும் ஒன்றுதான் ஒரே இலக்கையே அடைய உதவுகின்றன என்ற மேலோட்டமான ஆன்மிக வாதங்களையும் அங்கீகரிப்பதில்லை. சைவம் மற்ற மதங்களை ஏற்றுக்கொண்டு அவற்றுக்கு அங்கீகாரம் அளிக்கும் அதே நேரம் அவற்றுக்கும் சைவத்துக்கும் உள்ள வேறுபாடுகளையும் எடுத்துரைக்கின்றது. பிற மதக் கருத்துக்களை அவ்வாறே தமது நூல்களில் எடுத்துச் சொல்லி அவற்றுக்கும் சைவத்துக்கும் இடையே உள்ள பேதங்களை விளக்கும் வழமை சைவத்தில் உள்ளது.மற்றச் சமயங்களை மட்டுமல்ல அவர்களது கலாசாரத்தையும், மக்களையுமே சுவடுகள் இன்றிப் புத்தியாலும், கத்தியாலும் வேரறுத்து உலக சமாதனமும் ஐக்கியமும் காண முயலும் இன்றைய தலைமுறையினர் இதனைச் சிந்திக்க வேண்டும்.

சித்தாந்த சைவ மரபின் ஆன்மிகத்தளமானது உலகின் நிகழ்காலச் சமயங்களை மட்டுமல்ல, கடந்த காலத்தில் இருந்த சமயங்கள், இனித்தோன்றி வரப்போகின்ற சமயங்கள் யாவற்றையும் உள்வாங்கி ஒவ்வொன்றும் ஆறு சமயங்கள் உள்ள நாலு வகைகளாகப் பார்க்கின்ற **அறுவகைச் சமயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் ஒரு பரந்த சமயப்பரப்பைத் தனது ஆன்மீகத்தளமாகக் கொண்டு இவை யாவற்றையும் உள்வாங்கித் தன்னுள் அடக்கினாலும் தான் இவை ஒன்றிலும் அடங்காது இவற்றில் ஒன்றாயும், உடனாயும் அதே சமயம் இவற்றின் வேறான தனித்துவமான மையத்தளத்தையும் கொண்டு விளங்குகின்ற

**" அறு வகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்"**

**- சிவஞானசித்தியார் சுபக்கம் பாடல் 2**

**இதையே தாயுமானார்**
**"இராஜாங்கத்து அமர்ந்தது சைவம்"** என்று பாடினார்.

1. புறப்புறச் சமயங்கள் - Extreme Heterodex Religions:

வேதங்களை ஏற்றுகொள்ளாத மதங்களான உலகாயதம் (Materialism), நால்வகைப் பௌத்தம், சமணம் ஆகிய ஆறு மதங்களை சைவம் மிக மிக எட்டத்தில் உள்ள புறப்புறச் சமயங்களாகக் கொள்கின்றது.

உயிர்ப்பும் உணர்வும் உள்ள ஏதோ ஒன்று (இறை/மெய்) இப்பிரபஞ்சத்தின் பின்புலமாக இருக்கின்றது என்பதைப் பொருட்படுத்தாதவர்கள், ஏற்றுக்கொள்ளாதவர்கள் எல்லோருமே **புறப்புறச் சமயத்தார்** எனலாம் அன்றைய **உலகாயதம்,** இன்றைய **பகுத்தறிவு வாதம், நாத்திகம், நால்வகைப் பௌத்தம், சமணம்** என்பன இவற்றுள் அடங்குகின்றன.

2. புறச்சமயங்கள் - Heterodex Relegions:

புறப்புற சமயங்களுக்கு அடுத்து இந்த மைய நோக்கவட்டத்தில் உள்ளாக உள்ள சமயங்கள். பிரபஞ்சத்தின் தோற்ற ஒடுக்க இயக்கங்களுக்கு காரணமான உயிர்ப்பும் உணர்வும் உள்ள சக்தி ஒன்று உண்டு என்பதை உணர்ந்து ஏற்றுக்கொண்டவர்கள் **புறச்சமயத்தார்**. படிநிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்போது **'தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி'** என்று மாணிக்கவாசகர் போற்றித்திருவகவலில் சொல்லும் நிலை.

**நியாயம், சாங்கியம், யோகம், மீமாம்சை, வைசேடிகம், வேதாந்தம்** என்னும் முன்சொன்ன **ஷட் தரிசனங்கள்** இந்த புறச் சமயங்களுக்குள் அடங்கும்.

வேதாந்தம் என்பதற்குள் **சங்கரரின் அத்வைத வேதாந்தம், இராமானுஜரின் விசிட்டாத்துவித வேதாந்தம், மத்துவரின் துவைத வேதாந்தம்** மூன்றும் அடங்குகின்றன.

இவர்கள் வேதங்களை தமது நூலாக ஏற்றுக்கொண்டாலும் சிவாகமங்களைக் கருத்தில் கொள்ளுவதில்லை. ஆதலால் சிவாகமங்கள் கூறுகின்ற பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மையை ஏற்றுக்கொள்வதில்லை. ஆதலால் இவை புறச்சமயங்கள் எனப்படுகின்றன.

சாங்கியம், யோகம், வைசேடிகம், நியாயம், மீமாம்சை ஆகிய ஐந்தும் தனித்தனிச் சமய நெறிகளாக நில்லாமல் கூறுகளாக மற்றச் சமயங்களுள் உள்வாங்கப்பட்டாலும் தனியான தத்துவ மரபாகத் தமது தளத்தை அடையாளப்படுத்தியுள்ளன. தென்னகத்து கர்நாடகாவைச் சேர்ந்த மத்துவாச்சாரியார் கட்டமைத்து முன்னிலைப்படுத்திய துவைத வேதாந்தமும், இராமானுஜர் கட்டமைத்து முன்னிலைப்படுத்திய விசிட்டாத்துவித வேதாந்தமும் தனித்துவமான இருவேறு வைணவ பாரம்பரியங்களை தம்மை இத்தளத்தில் தகவமைத்துக் கொள்கின்றன. இன்று பிரபுபாதரினால் 1960களில் அறிமுகப்படுத்தப்பட்டு இங்கு உலகளாவிய ரீதியில் இஸ்கோன் என்னும் கட்டமைப்பாகப் பரந்து விரிவடைந்துள்ள ஹரேகிருஷ்ணா பாரம்பரியம் மத்துவரின் துவைத சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டு 15ம் நூற்றாண்டில் வங்காளத்தில் ஸ்ரீசைதன்யரினால் முன்னிலைப்படுத்தப்பட்ட வைணவ கிருஷ்ணபக்தி இயக்கத்தின் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்ட தளமாகும். ஆதிசங்கரரினால் கௌடபாதர் முதலானவர்களிடமிருந்து பெறப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டமைக்கப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்ட ஏகான்மவாத மாயாவாத வேதாந்தமானது சிவ வழிபாட்டுச் சைவ மரபையும், விஷ்ணு வழிபாட்டு வைணவ மரபையும், சக்தி வழிபாட்டுச் சாக்த மரபையும் மட்டுமல்லாது கணபதி வழிபாட்டுக் காணாபத்திய மரபையும், முருக வழிபாட்டுக் கௌமார மரபையும், சூரிய வழிபாட்டு சௌர மரபையும் உள்வாங்கி ஆதிசங்கரருக்கு சண்மதஸ்தாபகர் என்னும் பெயரையும் சுவீகரித்துக்கொண்டு விரிந்து பரந்து விளங்குகின்றது.

ஒருவிதத்தில் கடவுள் என்னும் இருப்பை உலகிற்குக் காரண கர்த்தாவாக ஏற்றுக்கொண்டு தமக்கென்று பிரத்தியேகமான வேத நூல்களைக் கொண்டுள்ள **சீக்கிய மதம்**, ஆபிரகாமிய மதங்களான **கிறிஸ்தவம், இஸ்லாம், யூத மதம்** ஆகியனவற்றையும் கூட புறச்சமயங்களின் இப்பிரிவில் நாம் இணைக்க முடியும்.

3. அகப்புறச்சமயங்கள் - Ortho-heterodex Relegions:

**பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கிய வாத சைவம்** ஆகிய ஆறும் வேதங்கள், ஆகமங்கள் ஆகிய இரண்டையுமே ஏற்றுக்கொள்வதால் மையநோக்க வட்டத்தில் சைவத்துக்கு அணுக்கமாக உள்ள உட்புற வட்ட அகப்புறச் சமயங்களாகக் கொள்ளப்படுகின்றன.

கடவுளோடு, உயிர்கள் பல, கடவுளையும் உயிரையும் பிரிக்கும் பாசம் என்னும் மூன்றுவகை இருப்புகளையும் (பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மை) ஏற்றுக்கொண்டவர்கள் யாவரும் அகப்புறச் சமயத்தார் எனலாம். இவர்கள் சிவாகமங்களையும், அவை கூறுகின்ற பதி, பசு, பாசம் என்கின்ற முப்பொருள் உண்மையையும் ஏற்றுக்கொண்டாலும் தமக்கென்று வேறான

சிறப்பு நூல்களைக் கொண்டுள்ளன. இவை ஆணவம் என்பதே முக்கியமான பாசத்தடை என்பதை ஏற்றுக்கொள்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய **அகோரிகள், தாந்திரிக சாக்தர்கள்**,அன்றைய **பாசுபதர், காபாலிகர், வாம மதத்தவர், மாவிரதர், காபாலிகர், ஐக்கியவாத சைவர்** என்போர் இதில் அடங்குவர்.

- பெரியபுராணத்தில் மானக்கஞ்சாறரிடம் சிவன் மாவிரத சிவனடியாராக வந்து தனது பூணூலுக்காக மணப்பந்தலில் நின்ற அவர் மகளின் கூந்தலைக் கேட்டார்.
- பரஞ்சோதி என்னும் சிறுத்தொண்டரிடம் காபாலிகராக வந்து பிள்ளைக்கறி கேட்டார்.
- திருவாரூர் தேர்த்திருவிழாவில் இவர்கள் எல்லோரும் வந்து கலந்துகொள்வதை அப்பர் சுவாமிகள் பாடியுள்ளார்.
- அன்றைய காபாலிகர் ஆதிக்கத்தில் இருந்த தலம் மயிலாப்பூர் கபாலீச்சரம் என்பர் வரலாற்றாசிரியர்கள்.
- இதேபோல் பாசுபதர் ஆதிக்கத்தில் இருந்தது நேபாளத்தின் பசுபதீச்சரமும் ஈழத்தின் நகுலேஸ்வரமும் ஆகும். பாசுபதர்களின் குரு லகுலீசர். லகுலீஸ்வரம் மருவி நகுலேஸ்வரம் ஆனது. இதற்கு பின்னர் நகுலம் என்னும் கீரி முகம் நீங்கிய புராண வரலாறும் உருவானது.
- இடைக்காலத்தில் பௌத்தத்தின் ஆதிக்கத்தில் வரும் வரை சக்தி வழிபாட்டு வாம சமயத்தவர் வசம் இருந்தது காஞ்சிபுரம். இங்கு சக்திக்கே முதல் இடம். சுந்தரர் இங்கு வந்தபோதும் முதலில் காமாட்சியின் காமகோட்டம் வழிபட்டே ஏகாம்பரரை வணங்கியதாகப் பெரியபுராணத்தில் உள்ளது. முழு நகரமுமே ஸ்ரீ சக்கர வடிவில் அமைந்தது காஞ்சிபுரம் என்று சங்க இலக்கியத்துள் ஒன்றான பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது.

**"பல்லிதழ்த் தாமரைப் பொகுட்டின் காண்வரத் தோன்றிச்**
**சுடுமண் ஓங்கிய நெடுநகர்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. அகச்சமயங்கள் - Orthodox Relegions:

முப்பொருள் உண்மையை ஏற்றுக்கொண்டாலும் உயிரை இறையிடம் இருந்து பிரிக்கும் முக்கிய தடை மாயை அல்ல கர்மா அல்ல ஆணவமே என்று கண்டவர்கள் **அகச்சமயத்தார். பாடாணவாத சைவம், பேதவாதசைவம், சிவசமவாதசைவம், சிவசங்கிராந்தவாதசைவம், ஈசுவரவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம்** என்கின்ற ஆறு சமயங்களும் வேதங்களைப் பொது நூலாகவும், ஆகமங்களை சிறப்பு நூல்களாகவும் ஏற்றுக்கொண்டு, அவை கூறும் **பதி, பசு, ஆணவம், கன்மம், சுத்த மாயை, அசுத்த மாயை** என்கின்ற ஆறு இருப்புக்களையும் ஏற்றுக்கொள்வதால் சைவத்துக்கு மிக அணித்தாக மைய நோக்க வட்டத்திலே மையத்துக்கு அணுக்கமாக உள்ள அகச்சமயங்கள் ஆறாகக் கொள்ளப்படுகின்றன. இவை முத்திப்பேற்றில் உயிரின் நிலை பற்றிய கருத்திலே தமக்குள்ளும், சித்தாந்த சைவத்திலிருந்தும் வேறுபடுகின்றன.

**சித்தாந்த சைவம்:** இந்த நால்வகைப்பட்ட அறுவகைச் சமயங்களையும் தாண்டி உணரப்படுவது சித்தாந்த சைவம். இது முத்தி நிலையில் உயிர் இறையுடன் இரண்டுமற்ற, ஒன்றுமற்ற சுத்த அத்துவித நிலையில் நின்று அவன் திருவடிக்கீழ் மீளா இன்பம் அனுபவிக்கும் என்று கூறும். ஆறு ஆறாக வகுக்கப்பட்டுள்ள இந்த சமய வட்டத்தில் மையமாக சைவம் காட்டப்பட்டுள்ளது. அந்தந்த மதங்களில் உள்ளவர்கள், அந்தந்த ஆசாரங்களைக் கடைப்பிடித்து ஒழுகி, அந்தந்த மதங்கள் கூறும் சுவர்க்கம் போன்ற போகங்களையும், பத முத்தி நிலைகளையும் அனுபவித்து, அவற்றின் நற்பயனால் இறுதியில் சைவ நெறியின் படி ஒழுகி, பர முத்தி நிலையாகிய மீளாத இறையின்பம் பெற்றுய்வர் எனச் சைவ நூல்கள் கூறும். இவ்வாறு வகுக்கப்பட்டுள்ள, கடந்த கால, நிகழ் கால, எதிர் காலத்துச் சமயங்கள் எல்லாம் இறைவனை அடைய உதவும் படிமுறைகளே இப்படி இறைவனை அடைய உதவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏணிப்படிகளே என சைவம் கூறுகின்றது. இந்த ஏணிப்படிமுறை நெறியை சோபான மார்க்கம் எனக்கூறுவர்.

**முத்தியை முற்ற வைத்தார் முறைமுறை நெறிகள் வைத்தார்**
**- திருநாவுக்கரசர் தேவாரம், திருவையாற்றுப் பதிகம்.**

**பேணித் தொழுமவர் பொன்னுலகு ஆளப் பிறங்கருளால்**
**ஏணிப் படிநெறி யிட்டுக் கொடுத்து**
**- திருநாவுக்கரசர் தேவாரம், திருவையாற்றுப் பதிகம்.**

**புறச்சமய நெறிநின்றும் அகச்சமய ம்புக்கும்**
**புகல்மிருதி வழிஉழன்றும் புகலும் அச் சிரம**
**அறத்துறைகள் அவை அடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்**
**அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்**
**சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத**
**சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றால் சைவத்**
**திறத்தடைவர் இதில் சரியை கிரியா யோகம்**
**செலுத்தியபின் ஞானத்தால் சிவன் அடியைச் சேர்வர்**
**-சிவஞான சித்தியார்- சுபக்கம்- பாடல் 263**

இன்று உலகின் பல்வேறு மதங்களினதும், ஞானிகளினதும், ஆன்மிகவாதிகளினதும் ஆன்மிகத் தேடல்களையும், அனுபவங்களையும் பார்க்கும் பொழுது, அவர்களின் அனுபவங்களிலும் சைவம் கூறும் ஆத்மிகப் படிநிலை அனுபவங்களான **மலபரிபாகம், இருவினையொப்பு, குருவருள், தீட்சை, சத்திநிபாதம், அத்துவாசுத்தி** போன்ற பல அனுபவங்களை நாம் உய்த்துணரக் கூடியதாக உள்ளது.

**கிறிஸ்துவம், இஸ்லாம், பௌத்தம்** ஆகிய சமயங்களிலும் இவற்றைத் தாபித்த **இயேசுக்கிறிஸ்து, முகம்மது நபிகள், கௌதம புத்தர்** ஆகிய மகாபுருஷர்களின் வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறுகளிலும் அவர்களின் வேதநூல்களிலும் இந்தப் படி நிலைகளும், அனுபவங்களும் நிறைந்திருப்பதைக் காணலாம். பிற்கால ஆன்மிக புருஷர்களாகிய இராமகிருஷ்ணர், சாயிபாபா, சிவயோகர் சுவாமிகள், இரமண மகரிஷி ஆகியோரினது வாழ்க்கைச் சரிதங்களிலும் இவ்வாறே பல பொதுமைகளைக் காணக்கூடியதாக உள்ளது. எந்தச் சமயத்தவராய் இருந்தாலும் அறிந்தோ அறியாமலோ இந்த ஆன்மிகப் படிநிலைகளுக்கூடாக, இவற்றை அனுபவித்து, இதற்கூடாகவே இறைநிலையை அடைகின்றனர்.

இதற்கு அவர்கள் கூறும் பெயர்கள் வேறுவிதமாக இருக்கலாம் அல்லது இந்நிலைகள் அங்கு வெளிப்படையாக இனங் காணப்படாமல் இருக்கலாம். ஆனால் சைவம் கூறும் இந்த ஆத்மிகப்படிநிலை அனுபவம் உலகப் பொது நெறி. இவ்வாறு உலகச் சமயங்களுக்கெல்லாம் புறம்பாய் இல்லாமல் மையமாய் விளங்குவதால் தான்

**"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"**

என்று துணிந்து சொல்லுகின்றோம். இதன் கருத்து மற்றைய சமயங்கள் எல்லாம் தாழ்ந்தவைகள் என்பது அல்ல.

**ஓது சமயங்கள் பொருள் உணரு நூல்கள்**
**ஒன்றோடு ஒன்று ஒவ்வாமல் உள பலவும், இவற்றுள்**
**யாது சமயம்? பொருள் நூல் யாதி இங்கு? என்னின்,**
**இதுவாகும், அது அல்லது, எனும் பிணக்கது இன்றி,**
**நீதியினால் இவை எல்லாம் ஓரிடத்தே காண**
**நின்றது யாது ஒரு சமயம்? அதுசமயம், பொருள் நூல்,**
**ஆதலினான் இவை எல்லாம் அருமறை ஆகமத்தே**
**அடங்கியிடும், இவை இரண்டும் அரனடிக் கீழ் அடங்கும்**

**-சிவஞான சித்தியார்- சுபக்கம்- பாடல் 265**

சிவயோகர் சுவாமிகளின் வாழ்க்கையிலும், வாக்கிலும், நற்சிந்தனைப் பாடல்களிலும் அவர் தமது மரபில் ஊன்றி நின்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே சமயம் ஏனைய சமயங்களுடன் சமரசமான உறவையும் கொண்டிருந்தார் என்பது தெளிவு.

**"நாங்களெல்லாம் ஒரே சமயத்தையும் ஒரே சாதியையும் சார்ந்தவர்கள் எங்களுக்குள் ஒரு மாறுதலும் இல்லை. நாங்கள் பரிசுத்தரும், தெய்வத்துக்குள், வைக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்றோம். வித்தியாசம் வித்தியாசமான மாறுதல்கள் யாவும் உண்மைச் சுபாவத்தின் சிறப்புகளாக இருக்கின்றன"**

என்னும் சிவயோகர் சுவாமிகளின் நற்சிந்தனை வசனங்கள் அவரின் சமய சமரச ஆன்மிக நிலையைப் பறை சாற்றுகின்றன. அவரின் அடியவர்களில் இந்துக்கள் மட்டுமல்ல, பௌத்தர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் பலரும் அடங்குவர். அவரது இறுதி ஊர்வலத்தில் அனைத்துச் சமயப் பெருமக்களும், மதகுருமாரும் கலந்து கொண்டனர்.

**சமய அனுட்டானங்கள், சைவ நாற்பாதங்களின் பார்வையில் சிவயோகர் சுவாமிகளின் ஆன்மிகத் தளம்.**

சிவாகமங்கள் ஆன்மிகத் தளத்தை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு படிநிலைகளில் விளக்குகின்றன. இந்த நான்கு படிநிலைகளையும் நாம் பாரம்பரிய அணுகுமுறை, ஈடுபாட்டு அணுகுமுறை, வாழ்வியல் அணுகுமுறை என மூன்று விதங்களில் அணுகலாம்.

**பாரம்பரிய அணுகுமுறை**:பாரம்பரிய அணுகுமுறையில் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய சைவ நாற்பாதங்களைப் பின்வருமாறு விளக்குவர்.

1. சரியையாவது சிவாலயத்துக்கும் சிவனடியார்களுக்கும் தொண்டு செய்தல். இதனைத் தாச மார்க்கம் என்றும் கூறுவர். இவர்கள் இறைவனோடு அவன் உலகில் இருக்கும் சாலோக முத்திப்பேற்றை அடைவர் என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத மார்க்கம் சாற்றில் சங்கரன்தன் கோயில்
தலம் அலகு இட்டு, இலகு திரு மெழுக்கும் சாத்திப்,
போதுகளும் கொய்து, பூந் தார் மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்துப், புகழ்ந்து பாடித்,
தீதில் திரு விளக்கிட்டுத், திருநந்த வனமும்
செய்து, திரு வேடங்கண் டால் "அடியேன் செய்வ(து)
யாது? பணியீர்' என்று பணிந்து, அவர்தம் பணியும்
இயற்றுவது இச் சரியை செய்வோர் ஈசன் உலகு இருப்பர்.
- மெய்கண்ட சாத்திரம், சிவஞானசித்தியார் 271

அலகிடுதல் - மெழுகுதல்
போது - பூவிதழ்
தார், மாலை, கண்ணி - பலவிதமான மாலைகளின் வகைகள்
திருவேடம் - மெய்யடியார்களின் அடையாளமான திருநீறு, உருத்திராக்கம் அணிந்த அடியவர்களின் கோலம்.

2. கிரியையாவது சிவலிங்கப் பெருமானை அகத்தும் புறத்தும் பூசித்தல். இதனைச் சற்புத்திர மார்க்கம் என்றும் கூறுவர். இவர்கள் இறைவன் அருகிலிருக்கும் சாமீப முத்திப்பேற்றை அடைவர் என்பர்.

புத்திர மார்க்கம் புகலில் புதிய விரைப் போது,
புகை, ஒளி, மஞ்சனம், அமுது முதல் கொண்டு, ஐந்து
சுத்தி செய்து, ஆசனம் மூர்த்தி மூர்த்தி மானாம்
சோதியையும் பாவித்து ஆவாகித்துச், சுத்த
பத்தியினால் அருச்சித்துப், பரவிப் போற்றிப்,
பரிவினொடும் எரியில் வரு காரியமும் பண்ணி,
நித்தலும் இக் கிரியையினை இயற்று வோர்கள்
நின்மலன் தன் அருகிருப்பர் நினையுங் காலே.
- மெய்கண்ட சாத்திரம், சிவஞானசித்தியார் 272

புதிய விரைப் போது - அன்றலர்ந்த பூவிதழ்கள்
ஆவாகித்து - பூசிக்கும் மூர்த்தத்தில் எழுந்தருளப் பண்ணி
எரியில் வரு காரியம் - ஓமம் வளர்த்தல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. யோகமாவது விடயங்களின் வழியே போகாவண்ணம் மனத்தை நிறுத்திச், சிவத்தைத் தியானித்துப், பின்பு தியானிப்போனாகிய தானும் தியானமும் தோன்றாது தியானப் பொருளாகிய சிவம் ஒன்றே விளங்கப் பெறுதல். இதை தோழமை மார்க்கம் அல்லது சக மார்க்கம் என்பர். இவர்கள் சிவன் தன் உருவத்தைத் தமது வடிவமாகப் பெறும் சாரூப முத்திப்பேற்றை அடைவர் என்பர்.

**சகமார்க்கம் புலன் ஒடுக்கித் தடுத்து, வளி இரண்டும்**
**சலிப்பு அற்று முச்சதுர முதல் ஆதாரங்கள்**
**அகமார்க்கம் அறிந்து, அவற்றின் அரும் பொருள்கள் உணர்ந்து, அங்கு**
**அணைந்து போய் மேலேறி, அலர்மதி மண் டலத்தின்**
**முகமார்க்க அமுது உடலம் முட்டத் தேக்கி,**
**முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாக, வினைகள்**
**உகமார்க்க அட்டாங்க யோக முற்றும்**
**உழத்தல், உழந் தவர்சிவன்தன் உருவத்தைப் பெறுவர்.**
**- மெய்கண்ட சாத்திரம், சிவஞானசித்தியார் 273**

**வளி இரண்டும் சலிப்பு அற்று** - உள்மூச்சு, வெளி மூச்சு என்னும் இரண்டையும் கட்டுப்படுத்தும் பிராணாயாமம் என்னும் மூச்சுப்பயிற்சி **முச்சதுர முதல் ஆதாரங்கள்** - முக்கோண வடிவான மூலாதாரம் தொடக்கம் ஆயிரம் இதழ்த்தாமரை வடிவான சகஸ்ராரம் வரையுள்ள ஆதாரச் சக்கரங்கள் **அங்கு அணைந்து போய் மேலேறி** - மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியானது சுழுமுனா நாடியினூடாக அணைந்து சென்று ஒவ்வொரு ஆதாரச் சக்கரங்களினூடாக அவற்றை அனைந்து மேலேறி சகஸ்ராரம் சென்று **மதி மண்டலத்தின் முக மார்க்க அமுது உடலம் முட்டத் தேக்கி** - உடலில் பாதத்திலிருந்து இடுப்பு வரை அக்கினி மண்டலம், இடுப்பில் இருந்து கழுத்து வரை சூரிய மண்டலம், கழுத்துக்கு மேல் முசந்திர மண்டலம், இங்கு சந்திர மண்டலத்துக்கு குண்டலினி சக்தியை யோகத்தால் எழுப்பி வந்து சகஸ்ராரத்தில் சிவனுடன் சேர்க்கச் சந்திர மண்டலமாகிய கபாலத்தில் இருந்து அமுதம் தொண்டையில் உள்ள உண்ணாவினூடாகக் கீழ் நோக்கிச் சொட்டி உடலில் சேரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டாங்க யோகத்தின் இறுதி நிலை சமாதி . ஆயினும் ஞானத்தின் இறுதி நிலையாகிய நிஷ்டையே இறுதியான, அறுதியான, முத்திநிலை ஆகும்.

சிவயோகர் சுவாமிகளும் இந்தச் சிவயோக சாதனையைப் பலவிடங்களில் கூறியுள்ளார்.

**"வாசியோகம் தேரென்றான் எங்கள்குரு நாதன்"**
**"காசி தேசம் போவென்றான் எங்கள் குரு நாதன்"**
**"நாசி நுனி நோக்கென்றான் எங்கள் குரு நாதன்"**
**"இருவழியை அடையென்றான் எங்கள் குருநாதன்"**
**"முச்சந்திக் குப்பையிலே எங்கள் குருநாதன்**
**முடங்கிக் கிடந்திடென்றான் எங்கள் குருநாதன்"**
**பச்சைப் புரவியிலே எங்கள் குருநாதன்**
**பாங்காக ஏறென்றான் எங்கள் குருநாதன்"**
**தச்சன் கட்டா வீட்டிலே எங்கள் குருநாதன்**
**தாவுபரி கட்டென்றான் எங்கள் குருநாதன்"**

போன்ற **நற்சிந்தனை** வரிகள் சிவயோகர் சுவாமிகளின் சிவயோக நிலையைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்ற வரிகளாகும்.

4. ஞானமாவது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் இலக்கணங்களை அறிவிக்கும் ஞான நூல்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடல் ஆகும். இதைச் சன்மார்க்கம் என்றும் கூறுவர். இவர்கள் இறைவனோடு இரண்டறக் கலந்து இறுதியான அறுதியான சாயுச்சிய முத்திப்பேற்றை அடைவர் எனக் கூறுவர்.

**சன்மார்க்கம் சகலகலை புராணம், வேதம்,**
**சாத்திரங்கள், சமயங்கள் தாம்பலவும் உணர்ந்து,**
**பன்மார்க்கப் பொருள் பலவும் கீழாக மேலாம்**
**பதி பசு பா சம் தெரித்துப், பரசிவனைக் காட்டும்**
**நன்மார்க்க ஞானத்தை நாடி, ஞான**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஞேயமொடு ஞாதிருவும் நாடா வண்ணம்**
**பின்மார்க்கச் சிவனுடனாம் பெற்றி ஞானப்**
**பெருமையுடை யோர் சிவனைப் பெறுவர் தானே.**
**- மெய்கண்ட சாத்திரம், சிவஞானசித்தியார்- 274**

**ஞானம்** - அறிவு, **ஞேயம்** - அறியப்படுபொருள், **ஞாதிரு** - அறிபவன் **நாடாது** - அறிவு, அறிபவன், அறியப்படு பொருள் என்னும் முப்பரிமாண திரிபுடி ஞானம் கடந்து **சிவனைப் பெறுவர்** - சீவன் சிவனேயாகும் சாயுச்சிய முத்தி பெறுவர்.

**சைவ நாற்பாதங்களின் ஈடுபாட்டு அணுகுமுறை:** ஈடுபாட்டு அணுகுமுறையில் சைவ நாற்பாதங்களைப் பின்வருமாறு விளக்குவர்.

- சரியையாவது உடலினால் செய்யும் சிவ புண்ணியங்களாகும்
- கிரியையாவது உடலினால் மன ஈடுபாட்டுடன் செய்யும் சிவ புண்ணியங்களாகும்
- யோகமாவது முழுமனக்கட்டுப்பாட்டுடன் செய்யும் சிவபுண்ணியங்களாகும்
- ஞானமாவது அபர ஞானம், பர ஞானம் என இரு படி நிலைப்படும். அபர ஞானமாவது
    - இவ்விதமான ஆன்மிக விடயங்களையும், நூல்களையும் கற்றறிதல்,
    - மற்றவர்கள் கற்பதற்கு ஒழுங்கு செய்தல்,
    - இவற்றை மற்றவர்களுக்குக் கற்பித்தல்,
    - இவற்றைத் தக்கோரிடம் தாம் கேட்டு அறிதல்,
    - அறிந்தவற்றைச் சிந்தித்தல் என ஐந்து படிநிலைகளாம்.

பரஞானமாவது அபரஞானத்தில் கற்றதை வாழ்க்கையில் கடைப்பிடித்துத் தெளிந்து நிட்டை கூடுதலாம். பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவிகளினூடாகக் கைகூடி வருகின்ற இந்தப் படிநிலைகளில் வழிகாட்ட சமய குரு, தீட்சா குரு, வித்தியாகுரு, யோக குரு, புரோகித குரு போன்ற பல குருமார்கள் சமய சாத்திர நூல்களுக்கு அமைவாக வழிகாட்டுவார்கள்.

இறுதியாக இறைவனே ஞானகுருவாக வந்து எமக்கு ஞானத்தை உணர்த்தும் போது தான் ஆணவ மலம் விலக பரஞானம் அநுபூதியாக, அநுபவமாகக் கைகூடும்.

**சைவ நாற்பாதங்களின் வாழ்வியல் அணுகுமுறை:** மேற்சொன்ன யாவும் சைவத்துக்கு மட்டுமே உரியன போலவுள்ளது. ஏனைய சமய மார்க்கங்களுக்கும் இதைப் பிரயோகித்தாலும் அதன் அனைத்துக் கூறுகளுடன் அவற்றுடன் பொருந்தி வரா. இதுவே மரபு வழிச் சைவர்கள் மற்றைய எந்த மார்க்கத்தில் இருந்தாலும் இறுதியில் சைவத்தினூடாகவே முத்தி என்று சாதிப்பதன் தாற்பரியம்.

ஆனால் நன்கு சிந்திக்கும்போது சைவம் கூறும் ஆன்ம விடுதலைக்குரிய சரியை, கிரியை, யோகம் ஞானம் என்னும் நாற்பாதங்களும் பிரதேச, சாதி, இன, மொழி, மத வேறுபாடுகள் இல்லாமல் நம் அனைவருக்குமே பொருந்தக்கூடிய அனைத்தையும் உள்ளடக்கிய ஆன்மிகத்தளமாகும்.

சரியையாவது பயம், வழமை, மற்றவர்களின் அழுத்தம் முதலான வெளிக்காரணிகளால் உந்தப்பட்டுச் செய்யப்படும் செயல்களாகும். இவை பொதுவாக தனிப்பட்ட ஆர்வமோ ஈடுபாடோ இல்லாமல் கடமைக்காக செய்வதுபோல் இயந்திரமயமான செயல்களாய் இருக்கும். ஆரம்பப் படிநிலையில் இது தேவை. ஒரு குழந்தை வளரும் போது அதனை மலசல கூடத்தில் சென்று மலசலம் கழிக்கப் பழக்குவதற்கும், ஆரோக்கியமான உணவுகளை உண்ணப் பழக்குவதற்கும், பாடசாலை சென்று படிக்கத் தொடங்குவதற்கும் இவ்விதமான வெளி அழுத்தங்களையே நாம் பிரயோகிக்கின்றோம். நாம் அவர்களுக்குக் கடவுள் வழிபாட்டை அறிமுகப்படுத்தலும் இவ்வாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஆராய்ந்து பார்த்தால் நாம் பெரியவர்கள் கூட நமது வேலையை, கடமையை, குடும்ப அலுவல்களைக்கூட ஈடுபாடு இல்லாமல் இயந்திரம் போல இவ்வாறான நிலையில் இருந்து செய்து வருவது புரியும். வைத்தியர்களில் கூட மேலதிகாரிகள் இல்லாவிட்டால் வேலை செய்யாமல் காலங் கடத்துபவர்களை நாம் பார்க்கக்கூடியதாக உள்ளது. வெளி அழுத்தம் அல்லது பயம் காரணமாக அல்லது உலக வழமை காரணமாக செயலாற்றும், தொழில் செய்யும், குடும்பம் நடத்தும் நம்மில் பலரும் சரியை என்னும் இந்த ஆரம்பப் படிநிலையிலேயே உள்ளோம்.

எமது வாழ்க்கையில் எமக்கு இறையாகிய நம்முடைய கடமை, தொழில், கல்வி முதலானவற்றை இவ்விதம் அணுகுபவர்களுக்கு அவர்கள் அவற்றோடு இருந்தாலும் தூரத்திலேயே இருக்கும் சாலோக நிலை தான்.

கூலிக்கு மாரடிக்கும் கூட்டம் என்று இவர்களைக் கூறலாம். அவர்களின் முயற்சிக்கேற்ற அற்ப பேறுகளே அவர்களின் கூலி ஆகும்.

கிரியையாவது சுய ஈடு பாட்டுடன் செய்யப்படும் செயல்கள் என்றாலும் இன்னமும் வெளித் தூண்டல்கள், ஊக்குவிப்புகள், நினைவுறுத்தல்கள், பரிசுகள், பெறுபேறுகள் அவர்கள் செயலாற்றுவதற்குத் தேவைப்படுவதாகும். இந்நிலையில் உள்ளவர்களையும் நமது அன்றாட வாழ்க்கையில் குடும்பத்திலும், கல்வி நிலையங்களிலும், தொழிலிலும், சமூக வாழ்க்கையிலும் நாம் காண்கின்றோம்.

எமது வாழ்க்கையில் எமக்கு இறையாகிய எம்முடைய கடமை, தொழில், கல்வி முதலானவற்றை இவ்விதம் அணுகுபவர்கள் முன்னர் சொன்ன சரியையாளர்களைவிட தமது இறைக்கு அணுக்கமாக சாமீப நிலையில் உள்ளவர்கள் எனலாம். இந்த கடமை, தொழில், கல்வி, குடும்ப முயற்சிகளுக்கு அவர்கள் பெறும் பெறுபேறுகளும் அதற்கேற்ப உயர்வாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகமானது எந்தவிதமான வெளி அழுத்தங்கள், தூண்டல்களின் தேவை இன்றி முழுமையாகச் சுய ஈடுபாட்டுடன் செயலாற்றுவதாகும். இவர்கள் குறிப்பிட்ட வேலையை குறிப்பிட்ட விதத்தில் பிசகாது அர்ப்பணிப்புடன் செய்வார்கள். நாளாந்த வாழ்க்கையில் இவர்களையும் நாம் எமது குடும்பம், தொழில், கல்வி, சமூகம் முதலானவற்றில் சந்திக்கின்றோம். இவர்கள் செயலாற்றும் போது அதுவாகவே ஆகும் சாரூப நிலையில் செயலாற்றுவார்கள் இவர்களின் பெறுபேறும் இதற்கேற்ப உயர்வானதாக இருக்கும்.

ஞானமாவது சுய ஈடுபாட்டுடன் எந்தவிதமான வெளித் தூண்டல்களும் இன்றிச் செயலாற்றும் போது அதில் புதிய புதிய பரிணாமங்களைத் தேடி உணர்ந்து அவற்றில் மூழ்கித் திளைத்து முத்துக் குளித்து அவற்றின் அரிய பல புதிய கண்டடைவுகளை அனுபவித்துக் களித்து ஏனையோருக்கும் வெளிப்படுத்திப் பகிர்தலாகும்.

இவர்களே தம் துறைகளில் சாதிக்கும் சாதனையாளர்கள். இவர்களின் சொல்லும், செயலும் மிக உயர்ந்த சாயுச்சிய நிலைக்கு இவர்களை இட்டுச்செல்லுகின்றது.

இவ்வாறு வாழ்வியல் அணுகுமுறையில் சைவநாற்பாதங்களாகிய சரியை, கிரியை, யோகம், ஞானங்கள் நம் அனைவருடைய வாழ்விலும் இரண்டறக் கலந்துள்ளது. எல்லாச் சமயங்களும் தமது சமயம் கோயில், வழிபாடு, பூசை, தியானம், துறவு முதலியனவற்றாலும், வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்கும் நல்லறங்களாலும் இறையை அடையலாம் என்று கூற இவற்றால் மட்டுமல்லாது தத்தம் குடும்பக் கடமைகள், தொழில், தமக்குப் பிடித்தமான இசை, நடனம், கலை முதலியவற்றால் கூட இறையை அடையமுடியும் என்று எமது சமயம் சொல்வதன் தாற்பரியம் இதுவே.

**“ வாடாமல் வழிபடென்றான் எங்கள் குருநாதன்**
**வையத்தில் வாழென்றான் எங்கள் குருநாதன்”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற நற்சிந்தனை வரிகள் சிவயோகர் சுவாமிகளின் இந்த வெளிப்பாட்டைத் தெளிவாகக் காட்டி நிற்கின்றன.

**"நியம நிட்டைகள் ஆற்றுதல் இன்பமே"**

என்று சிவயோகர் சுவாமிகள் நமது சமய அனுட்டானங்களை வழி மொழிந்துள்ளார். அதே சமயம்

**"ஏழு வயதில் செம்பு தூக்கினாய், இப்ப எழுபதிலும் செம்பைத் தூக்கிகொண்டு திரிகிறாய்"**

என்று இந்த சமய ஆசார அனுட்டானங்களுக்குள்ளேயே சிக்குண்டு போகும் அபாயத்தையும் உணர்த்தினார்.

**"எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால் இடர்கள் எல்லாம் போமே"**

என்றும்,

**"நல்லூரைக் கும்பிட்டுப் பாடு – அதனாலே**
**நாட்டிலுள்ள பிணிகள் ஓடுமே"**
என்றும்,

**"வேதாந்தம் சித்தாந்தம் கற்றதனா லென்ன**
**வேடிக்கைக் கதைகள் பேசினா லென்ன**
**வீதியில் வந்தொருகால் விழுந்து கும்பிட்டால்**
**வில்லங்கம் எல்லாம் இல்லாமல் போகுமே"**

என்றும் ஆலய வழிபாட்டை வலியுறுத்தியவர் சிவயோகர் சுவாமிகள். நல்லூர் கந்தசாமி கோவிலுக்கும், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலுக்கும் ஆள் அனுப்பி அர்ச்சனை செய்வித்த யோகர் சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலே கதியாகக் கிடந்த அன்பர் ஒருவரைக்

**"கோயிலும் கொம்மாவின் சீலையும்; ஓடடா"**

என்று கண்டித்து வழிப்படுத்தியும் இருக்கின்றார்.

**ஈழத்துச் சைவ மரபின் பார்வையில் சிவயோகர் சுவாமிகளின் ஆன்மிகத்தளம்.**

- நிறுவனமயப்படுத்தப்படாத மரபு ஈழத்துச் சைவ மரபு. இங்கு தமிழகத்தில் உள்ளதுபோல பலமான பொருளாதார பலமும், சமூக பலமும், ஆட்பலமும் உள்ள பாரம்பரியமான சைவ ஆதீனங்கள் இல்லை. ஆறுமுகநாவலர், சிவயோகர் சுவாமிகள் போன்றோர் கூட தம்மைத் தமது காலத்துக்குப் பின்னரும் தொடரக்கூடிய பலம் வாய்ந்த நிறுவனமாகக் கட்டமைத்திருக்கக்கூடிய ஆள் பலம், சமூக பலம் என்பவை இருந்து அவர்கள் அதைச் செய்யவில்லை. இங்கு உள்ள நல்லை திருஞானசம்பந்த ஆதீனம், வேதாந்த மடம், வரணி மடம் போன்றவைகூட தமிழகத்து ஆதீங்களைப்போல இறுக்கமான கட்டமைப்பாக இல்லாமல் நெகிழ்வுத் தன்மையுடன் இயங்குபவையாக உள்ளன. பாபரசர் இலங்கைக்கு வருகை தந்தபோது அவரை வரவேற்றுப் பொன்னாடை போர்த்தி கௌரவித்த நல்லை ஆதீன குருமகா சன்னிதானத்தின் செயல் இதன் உன்னதமான வெளிப்பாடு ஆகும். சிவதொண்டன் நிலையம் தொடங்குவதற்கும் சிவயோகர் சுவாமிகள் மிகவும் சிந்தித்தே அனுமதி கொடுத்தார். அது அமைக்கப்பட்ட காலங்களிலும் அதன் பின்னர் தன்னுடைய இறுதி நாட்கள் வரையிலும் அவர் சிவதொண்டன் நிலையத்திற்குள் காலடி எடுத்து வைத்ததில்லை என்பது நாம் அறிந்ததே. சிவதொண்டன் நிலையத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே அவர் குந்தில் வந்தமர்வார், அவ்வளவுதான். ஒரு முறை அவ்வாறு அமர்ந்திருந்தபொழுது ஆழ்ந்த சிந்தனையில் இருந்து மீண்டு சிவதொண்டன் நிலையத்தைப் பார்த்துக்கொண்டு **"செல்லப்பனும் சரிதான் இதுவும் சரிதான்"** என்று சொன்னதாக அப்போது எனது சித்தப்பா கூறியிருந்தார். சிவயோகரின் குரு செல்லப்ப சுவாமிகள் எந்தவிதமான நிறுவனக் கட்டமைப்புகளையும் கொண்டவரில்லை என்பது நமக்குத் தெரியும். இதேபோல் இன்னொரு முறை "இது ஒழுங்காக நடக்காவிட்டால் இதை இடித்துத் தள்ளிவிடுங்கள்" என்பது அவர் வார்த்தைகளே. இவை யாவும் நிறுவனக் கட்டுக்குள் அடங்காத சிவயோகரின் ஆன்மிகத் தளத்தின் பரிமாணத்தை எமக்குப் புலப்படுத்தி நிற்கின்றன. இது அவரின் சமகாலத்தவரான திருவண்ணாமலை இரமண மகரிஷியின் தளத்தில் இருந்து சிவயோகர் சுவாமிகளைத் தனித்துவமாக அடையாளம் காட்டுகின்றது எனலாம். இரமணர் இரமணாசிரமத்துக்காக நீதிமன்றம் வரை வாக்குமூலம்கொடுத்து வழக்காடியவர் தனக்குப் பின்னால் அதன் இருப்பையும் செயற்பாட்டையும் உறுதி செய்யும் விதமாக சட்டரீதியான ஆவணப்பதிவுகளைச் செய்து வைத்து அதன் அறங்காவலராகத் தன்னுடைய தம்பியாரை நியமித்துச் சென்றவர்.

- சாதிகளுக்குள் அடங்காத சைவம் ஈழத்துச் சைவ மரபு. தமிழகத்தில் சைவர் என்றால் வேளாளர். ஒரு சில சைவச் செட்டியார்களும் உள்ளனர். ஆனால் ஈழத்தில் தமிழர்களிடையே சாதீயம் இருந்தாலும் சைவம் சாதிக் காடுகளுக்குள் அடங்காது அனைத்துச் சாதிப்பிரிவுகளிலும் நடைமுறைச் சமயமாக உள்ளது.

**"சாதி சமயமில்லான் எங்கள் குருநாதன்"**
**"சாத்திரம் பயிறல், கோத்திரம் குலமெனுங் கோட்பா டொழிதல்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற நற்சிந்தனை வரிகள் சாதி சமயம் கடந்த சிவயோகர் சுவாமிகளின் ஆன்மிகத்தளத்தை நமக்கு அடையாளம் காட்டி நிற்கின்றன.

- சமயத்துள் அடங்காத சைவம்: ஈழத்துச் சைவ வழிபாடு மரபு சைவர்களிடம் மட்டுமல்ல சிங்கள பௌத்தர்களிடமும் உள்ளது. கதிர்காமம் கோயில் பூசை உரிமையும், மரபும் அவர்களுடையது. அங்கு முஸ்லிம்களின் பள்ளிவாசலில் இருந்தே தெய்வானை அம்மன் கோவிலுக்கு கொடிச்சீலை எடுத்துச் செல்லப்படுகின்றது. பௌத்த விகாரைகளிலும் சிவன், பார்வதி, முருகன், திருமால், பிள்ளையார் போன்ற மூர்த்தங்களை வைத்து வழிபடுகின்றார்கள். முன்னேசுவரம் போன்ற கோவில்களில் அவர்களின் பூசைகள், விழாக்களும் உள்ளன.

**“யவனர் சோனகர் தமிழர்சிங் களவர்**
**எவரும் வணங்குவார் எந்தைதன் தாளே”**
என்னும் நற்சிந்தனை வரிகள் இதைத் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

- குலதெய்வ வழிபாட்டுக் கூறுகள் இல்லாத சைவ மரபு: அய்யனார், அண்ணமார் போன்ற பல நாட்டார் வழிபாட்டு மரபுகள் இருந்தாலும் தமிழகத்தில் உள்ளதுபோல் இங்கு கட்டுக்கோப்பான குல்தெய்வ மரபு இல்லை.
- கண்ணகியைப் பார்வதியின் ஓர் அம்சமாக உள்வாங்கிய சைவ மரபு ஈழத்துச் சைவ மரபு. சிலப்பதிகாரம் உ. வே. சாமிநாதையர் மூலமாக முழுமையாகப் பதிப்பிக்கப்பட்டு வெளிப்படுத்தப்படுவதற்கு முன்னரே மறைந்துபோன ஆறுமுகநாவலரால் கண்டிக்கப்பட்டாலும் கண்ணகி வழிபாடு மேனிலையாக்கம் பெற்று இன்றும் தொடர்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுக நாவலர் கண்ணகியைச் சமண சமயத்தவள் என்று அடையாளப்படுத்தினாலும்,

**" சாலி ஒரு மீன் தகையாளைக் கோவலன்**
**மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்**
**தீவலம் செய்து காண்பார் கண் நோன்பு என்னை"**

என்னும் சிலப்பதிகாரத்தில் கண்ணகி – கோவலன் திருமணத்தைப் பற்றிக்கூறும் வரிகளாலும்,

**"அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"**

என்று கோவலன் பிரிவின் பின் கண்ணகி தன் நிலையைக் கூறும் வரிகளாலும்,

**"பார்ப்போர், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர்**
**மூத்தோர், குழவி எனும் இவரைக் கைவிட்டு**
**தீத்திறத்தார் பக்கமே சேர்க"**

என்னும் கண்ணகி மதுரையை தீயிட்டு எரித்தமையைக் கூறும் வரிகளாலும் கண்ணகி சமண சமயத்தவள் அல்ல சைவ சமயத்தவளே என்று இன்று எமக்குத் தெளிவாகத் தெரிகின்றது.

பிறப்பு இறப்பு அற்றவரே முழுமுதற்கடவுள் என்பது சைவத்தின் அடிப்படை.

**"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்"**

என்று சிலப்பதிகாரம் சிவனை முதன்மைப்படுத்துகின்றது. அப்படியிருக்க உலகில் பிறந்து இன்னொருவருக்கு வாழ்க்கைப்பட்டு வாழ்ந்த ஒரு மானுடப் பெண் எவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியாகலாம்? விதிவிலக்கான இதற்கு விடை நாம் இரண்டு இடங்களில் சான்றுகளைப் பார்க்கின்றோம்.

**" விரும்பின கொடுக்கை பரம்பரற்கென்று**
**புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த**
**பெரிய அன்பின் வரகுண தேவர்"**

என்று 11ம் திருமுறையில் உள்ள திருவிடைமருதூர் மும்மணிக்கோவை வரகுண பாண்டியன் தான் திருமணம் செய்த பெண்ணைச் சிவனுக்கு கொடுக்க அவளைச் சிவன் ஏற்றுத் தன்னுள் அடக்கிக்கொண்ட விடயத்தை ஆவணப்படுத்துகின்றது.

இதேபோல் திருவிளையாடற் புராணத்தின் 64 திருவிளையாடல்களில் ஒன்றான விருத்தாய்ப் பாலரான படலத்தில்,

**"மழவுரு நீத்து அடலேற்றின் வருவார் தம் இடத்து அணங்கின் மனுவை ஓதிப்**
**பழகிய பார்ப்பன மக்ளைப் பார்ப்பதியின் வடிவாக்கிப் பலரும் கண்டு**
**தொழ விடைமேல் ஏற்றி விசும்பு ஆறாக மலர்மாரி சுரர்கள் ஊற்ற**
**அழகர் எழுந்தருளினார் களிம்தூங்கி அதிசயித்தார் அவனி மாக்கள்"**

என்று தான் வாழ்க்கைப்பட்ட வைணவக் குடும்பத்தில் வழிபாட்டுரிமை மறுக்கப்பட்ட பார்ப்பனப் பெண்ணைப் பலருங்காணப் பார்வதியின் வடிவாக்கித் தன்னருகில் இடப்பாகத்தில் விடை மேல் ஏற்றிப் பலருங் காணச் சென்றதை ஆவணப்படுத்தியுள்ளனர்.

ஆகவே இறை பிறப்பு, இறப்பு அற்றவர் என்பது சைவத்தின் அடிப்படைப் பொதுவிதியாயினும் மானுடப்பெண்களும் விதிவிலக்காக சக்தி அம்சமாச் சிவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்பொழுது கண்ணகியை சக்தியின் அம்சம் என்று கூறும் ஈழத்துச் சைவ மரபு புரிந்துகொள்ளக்கூடிய ஒன்று.

மேலும் கண்ணகி மதுரையை அழிக்க ஏவிய தீ சடமான நெருப்பு அன்று அது அறிவும் உணர்வும் உள்ள சித்சக்தியின் வெளிப்பாடு என்பது அது தேர்ந்தெடுத்து பசுக்கள், அந்தணர், அறவோர், பத்தினிப் பெண்டிர், மூத்தோர், குழந்தைகளை நீக்கித் தீயவர்களை மட்டும் அழித்ததிலிருந்து தெளிவாகின்றது. ஆகவே இதைச் செலுத்திய கண்ணகியும் சித்சக்தியின் கூறாவாள் என்று உய்த்துணரலாம்.

சிவயோகர் சுவாமிகளின் வழிபடு கோவில்களில் ஒன்றான மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோயிலும் அன்னியர் இடித்தழிப்புக்கு முன்னர் கண்ணகி கோயிலே என்றும் கூறுவர்.

- சிவசமவாதச் சாயல் உடைய சித்தாந்த சைவம் ஈழத்துச் சைவ சித்தாந்தம். இந்த நோக்கில் ஈழத்து ஞானப்பிரகாசர் சிவஞானசித்தியாருக்கு எழுதிய **"நான் இவ்வாறு சொல்வதனால் நான் அனேகீசுர வாதியுமல்லேன், சிவசமவாதியுமல்லேன்"** என மிகத் தெளிவாகப் பிரகடனப்படுத்தியிருந்தும், பிற்காலத்தில் சிவஞான சுவாமிகளால் மிகக்கடுமையாக விமர்சிக்கப்பட்டு கண்டிக்கப்பட்டது. சைவக்கோயில் கிரியை நெறிகளை வகுத்துச் செலுத்தும் சிவசமவாதச் சார்பான அகோரசிவ பத்ததி மரபு ஈழத்தில் நன்கு நிலைகொண்டுள்ளது. ஈழத்துச் சைவ அனுட்டான விதி, சிவபூஜாவிதி, கொடித்தம்ப பூசை, கொடியேற்றம், கொடியிறக்கம், யாகசாலைப்பூசை முதலானவற்றில் தமிழகத்துச் சிவாச்சாரிய மரபில் காணக் கிடைக்காத இம்மரபுக் கிரியைகள் பலவற்றை இன்றும் காணலாம்.
- சமயக்கல்வியை வாழ்க்கையின் பாடசாலைக் கல்வியுடன் இணைத்த பாரம்பரியத்தைக் கொண்டது ஈழத்துச் சைவ மரபு. ஆறுமுக நாவலர் தொடக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்த இந்த மரபு 167 சைவப்பாடசாலைகள், சைவ ஆங்கில வித்தியாசாலை, சைவ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை என சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால் இவற்றுக்குரிய பாடவிதானம், பாட நூல்கள் எனப் பெரு விருட்சமாக வளர்த்தெடுக்கப்பட்டது எமது பாடசாலைக் கல்வி மரபு. இது அரசாங்கத்தினால் 1967இல் சுவீகரிக்கப்பட்டாலும் இன்றுவரை அரச கல்வி முறையினூடாக இன்றுவரை தொடர்கின்றது.

- பாடசாலைக் கல்வியில் மட்டுமல்ல பல்கலைக்கழகக் கல்வியிலும் உள்வாங்கப்பட்டு வளர்வது ஈழத்துச் சைவ மரபு. இந்தியாவிலே காசி இந்துப் பல்கலைக்கழகங்கள் போன்ற நிறுவனங்களும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் சைவ சித்தாந்தத் துறை போன்ற கற்கைப்பீடங்களும் இருந்தாலும் அவை வெறுமனே தத்துவத்தளத்தில் மட்டுமே இயங்கிக்கொண்டிருக்க, அதையும் உள்வாங்கி அதற்கும் அப்பால் மேலாக வரலாறு, தொல்லியல், மானுடவியல், வாழ்வியல், கலைகள் யாவற்றையும் உள்ளடக்கிய இந்து கற்கைகள் பீடம் முதன்முதல் உருவானது ஈழத்துச் சைவமரபின் உச்சம் எனலாம்.

**"கசடு தீர்த்தறங் கற்றிட வேண்டுமே**
**கல்வி யாற்பயன் பெற்றிட வேண்டுமே"**
என்னும் நற்சிந்தனை வரிகள் ஈழத்துச் சமய கல்வி முறையை ஆதரிக்கின்ற சிவயோகர் சுவாமிகளின் கருத்து எனலாம்.

- ஆலய சொத்துக்களிலும், நிதிகளிலும் தலையிடாத அரசும் அதன் இந்து கலாசார திணைக்களமும் அவர்கள் நாடெங்கும் முன்னெடுக்கின்ற வாராந்த அறநெறிப்பாடசாலைகளும் ஈழத்துச் சைவ மரபின் தனித்துவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புராணபடன மரபு ஈழத்துச் சைவத்தின் தனித்துவமான மரபு. கந்த புராணத்தைப் பாடல்களாகப் படித்து அதனை இராகத்துடன் கூடிய வசன நடையில் விளக்கி உரை சொல்லுவதைப் பயன் சொல்லுதல் என்பர். இந்த மரபில் திளைத்து வளர்ந்த யாழ்ப்பாணக் கலாசாரத்தைக் கந்தபுராண கலாசாரம் என்று சொல்வர்.

**"சிங்களவன் அடிக்கப்போறான் கந்தபுராணத்தைப் படி"**

என்பது சிவயோகர் அன்று சொன்னது.

- அந்தணர் அல்லாதோரும் வேத, ஆகம மந்திரங்களை ஓதிக் கிரியைகள் செய்தலும், ஆலய பூசைகள் செய்தலும், திருவிழாக்கள் நடத்தலுமாகிய சைவக்குருக்கள் மரபு காலங்காலமாகத் தொடருகின்ற ஈழத்துச் சைவநெறியின் இன்னொரு தனித்துவம். நாயன்மார்கட்டு, கரணவாய் போன்ற இடங்களைத் தளமாகக்கொண்டு இந்த மரபு இலங்கை எங்கும் வியாபித்துள்ளது.
- தனித் தமிழிலேயே அர்ச்சனை, பூசைகள், வழிபாடுகள், கிரியைகள் செய்யவேண்டும் என்று போராடி முனைந்து வருகின்ற இன்றைய தமிழ்ப் பற்றாளர்கள் மத்தியில் 1950 களில் இருந்தே தமிழ் மந்திரங்கள் கொண்டு பூசைகள் மட்டுமல்ல, திருவிழாக்கள், கும்பாபிடேகங்கள் போன்றவற்றை நடாத்தி வந்த உரும்பிராய் நவரத்தினக்குருக்கள், காங்கேசந்துறை ரேணுகாச்சிரமம் பஞ்சாட்சரக் குருக்கள் போன்றோரை உருவாக்கியதும் ஈழத்துச் சைவ மரபு.
- மடங்களுக்குள் மறைந்தும், மறந்தும் போய்க்கொண்டிருந்த சித்தாந்த சைவத்தின் சிவாகம நடைமுறைகளை மீட்டெடுத்து நமது அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் விதமாக எளிய தமிழ் வசன நடையில் சைவ வினாவிடை, சிவாலய தரிசனவிதி, நித்திய கரும விதி, சிவ பூசா விதி, புட்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி போன்ற சிறு நூல்களாகப் பதிப்பித்துப் பரப்பி இன்றைய வாழ்க்கைக்குரிய நவீன பத்ததி மரபைத்தந்த ஆறுமுகநாவலர் வளர்த்த மரபு ஈழத்துச் சைவ மரபு. இவை தமிழக ஆதீனங்கள் பிற்காலத்தில் வெளியிட்ட இவ் வகையான நூல்களைவிட மிகவும் சுருக்கமாகவும், எளிமையாகவும், அன்றாட வாழ்க்கையில் எல்லோராலும் இலகுவில் பின்பற்றக்கூடியனவுமாக செய்முறைகளை விளக்குவனவாய் உள்ளன.

- சிவாகம நூல்கல் பல மறைந்து வழக்கொழிந்து விட்டாலும் தமிழகத்தின் பகுதிகளில் காணக் கிடைக்காத பல ஆகமங்களின் பகுதிகள் ஈழத்துச் சைவ மரபில் இருந்திருக்கின்றன. பாண்டிச்சேரி பிரெஞ்சு இந்திய நிறுவனம் ஆகமச் சுவடிகளைத்தேடி ஆவணப்படுத்திய போது இவ்வாறான சில பிரதிகளை அச்சுவேலியில் இருந்து பெற்றுக்கொண்டதை அவர்களின் நூலகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. இந்த ஈழத்துச் சைவ மரபின் கிரியை நெறிக்கான வெளிப்பாடே அச்சுவேலி குமாரசாமிக்குருக்கள் எழுதிப் பதிப்பித்து வெளியிட்ட பிரதிட்டா விதி, சிவபூசா விதி போன்ற நூல்கள் ஆகும். இவை இன்றளவும் தமிழக சிவாசாரியார்களினால் பெரிதும் கொண்டாடப்படுகின்றன. இதேபோல் ஈழத்துச் சைவ மரபின் ஞான நெறிக்கான வெளிப்பாடாக குப்பிழான் காசிவாசி செந்திநாதையர் அவர்களின் சிவஞானபோத வசன லங்கார தீபம், பிரம்ம சூத்திரத்தின் சிவாத்துவித பாடியம், தேவாரம் வேத சாரம், கந்த புராண நவநீதம், சைவ வேதாந்தம் முதலான நூல்கள் ஆகும்.
- சைவ வைணவப் பூசல் இல்லாத விஷ்ணு வழிபாட்டுப் பாரம்பரியம் ஈழத்துச் சைவ பாரம்பரியம். வல்லிபுரம் ஆழ்வார் கோயில், பொன்னாலை கிருஷ்ணன் கோயில் போன்ற பாரம்பரியக் கோயில்களுக்கும், வண்ணை வேங்கடாசலபதி கோயில், தெகிவளை விஷ்ணு கோயில் போன்ற பிற்காலத்து எழுந்த கோயில்களிலும் பூசை, கிரியைகள், விழாக்கள் செய்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாச்சாரியார்களே. இது 12ம் நூற்றாண்டின் வைணவ எழுச்சிக்கு முன்னர் வழமையில் இருந்த சிவாகம வழித் திருமால் வழிபாட்டை நினைவூட்டுகின்றன. தமிழகத்தில் வழக்கொழிந்துபோன இந்த நடைமுறை ஈழத்துச் சைவ மரபில் இன்றளவும் இதற்கென்றே இங்கு வழக்கில் உள்ள பத்ததிகளினூடாக இன்றளவும் தொடர்கின்றது.

**"ரங்கநின் திருவருள் தரலாகாதா"**
**பாதகன் கஞ்ச னனுப்பிய பூதகி**
**பாரில் மாளவே செய்தாய்**
**அதுபோல் அடியேன் ஆணவமொழிய**
**அருள்நீ தருவாய் ஐய"**

என்னும் நற்சிந்தனைப் பாடல் வரிகளும்,

**"நம்மைச் சூழவர இருக்கும் மலைகள் திருமாலைப்போல் பச்சைப்பசேலெனக் காணப்படுகின்றன. இரைந்து விரைந்து செல்லும் அருவிகளின் இனிய சத்தம் திருமாலின் கரத்திலிருந்து இடைவிடாது ஒலித்துக்கொண்டிருக்கும் பாஞ்சசன்னியத்தை ஒத்தன. சந்திரனுஞ் சூரியனும் இரு பாரிகள் இருபக்கத்தும் விளங்குவதுபோல் விளங்குகின்றன. மரக்கொம்பரிலிருந்து தீங்குரலாற் பாடும் பட்சிகள் அக் கண்ணன் புல்லாங்குழல் பாடுவதை ஒத்திருக்கின்றன. தேயிலை கொய்யும் மகளில் திருமாலின் இனிய பத்தரான ந்கோபிகாஸ்திரீகளை நேர்வர்."**

என்னும் நற்சிந்தனை வசன வரிகளும் சிவயோகர் சுவாமிகளின் சைவ - வைணவ இணைக்கப் பண்புக்கு ஒரு சில எடுத்துக்காட்டுகள் ஆகும்..

- வேதாந்த சித்தாந்த சமரசம் கண்டது ஈழத்துச் சைவ மரபு. சிக்காகோ பேருரையின் பின்னர் நாடு திரும்பிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விவேகானந்தருக்கு யாழ்ப்பாணத்தில் பெரும் வரவேற்பு அளித்து மகிழ்ந்தது ஈழத்துச் சைவ மரபு. அப்போது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அவர் வருகை தந்து உரையாற்றிய பொழுது நமது யோகர் சுவாமிகளும் ஒரு சிறுவனாக அங்கு அமர்ந்திருந்து அந்த உரையைக் கேட்டதாக அறிகின்றோம். இதேபோல் மயில்வாகனம் என்னும் சுவாமி விபுலானந்தர் உருவானதும் ஈழத்துச் சைவ மரபு. அவர் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் அவரை அப்பணியில் அமர்த்திய திருவிளங்கம், சிவயோகர் சுவாமிகள் முதலானோருடன் மிக நெருங்கிய அணுக்கத் தொடர்பில் இருந்து வளர்ந்தவர். கடையிற் சுவாமிகளிடம் இருந்து வருகின்ற சிவயோகர் சுவாமி மரபின் இன்னொரு கிளைமரபே திருநெல்வேலி வேதாந்த மடம், கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமம் ஆகியன.

- சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவுக்குச் செல்வதற்கு முன்னரேயே வட்டுக்கோட்டை செமினரியில் (இன்றைய யாழ்ப்பாணக் கல்லூரி) இரண்டாவது அதிபராக இருந்த எச். ஆர், ஹோஸிங்ரன் மூலமாக முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு பதிப்பிக்கப்பட்ட சிவஞானபோதம், சிவப்பிரகாசம், தத்துவக்கட்டளை நூல்களின் ஊடாகவும், சேர். பொன். இராமநாதன் அவர்களின் அமெரிக்கச் சொற்பொழிவுகள் மூலமாகவும் மேற்குலகிற்கு எமது சமயத்தை அறிமுகப்படுத்தியது ஈழத்துச் சைவ மரபு.

- முதன்முதலாக சிவயோகர் சுவாமிகளின் சீடர் ஹவாய் சுப்பிரமனிய சுவாமிகள் ஊடாக மேற்குலகில் முதன்முதலாக ஒரு சைவ ஆதீனம் உருவாவதற்கு வழிசமைத்தது ஈழத்துச் சைவ மரபு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இன்று 1980 களில் இருந்து உள்நாட்டு யுத்தம் காரணமாக பன்னாடுகளுக்கும் புலம் பெயர்ந்த ஈழ்த்தமிழர்களினால் ஈழத்துச் சைவ மரபு அனைத்துலகச் சைவ மரபாகப் பரிணாமம் பெற்று வருகின்றது எனலாம்.

**சமய ஆளுமைகள் நோக்கில் சிவயோகர் சுவாமிகளின் ஆன்மிகத்தளம்:**

மானுடர்களின் ஆன்மிகத் தளத்தை பல்வேறுபட்ட ஆளுமைத்தளங்களின் பரப்புகளாக இனங்கண்டு பார்க்கக்கூடியதாக உள்ளது. இந்தத் தளத்தை நாம் **பக்தர்கள், முனிவர், ரிஷிகள், யோகிகள், ஞானிகள், சித்தர், ஆச்சாரியார், ஆச்சாரியார்கள், அவதாரம், வைநாயிகர் (முமுக்ஷீக்கள்), பிராகிருதர்** என்று பல வகைப்படுத்தி அடையாளம் காண எத்தனிக்கலாம்.

1. **பக்தர்கள்**:இறைவன் மீது நாம் கொள்ளும் அன்பைப் பக்தி என்பர். நாம் எல்லோரும் இறைவன் எங்கள் மீது கொண்டுள்ள எல்லையற்ற நிபந்தனையற்ற அன்பை அருள் என்போம். பக்தியின் புற அடையாளங்கள் பத்து, அக அடையாளங்கள் பத்து.

சிவபக்தியின் புற அடையாளங்களாவன:

- **திருநீறு, உருத்திராக்கம் அணிதல்**
- **பெரியோரை வணங்கல்**
- **சிவபெருமானைப் புகழ்ந்து பாடுதல்**
- **சிவநாமங்களை உச்சரித்தல்**
- **சிவபூசை புரிதல்**
- **சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் சிவபுண்ணியங்களைச் செய்தல்**
- **சிவபுராணங்களைக் கேட்டல்**
- **திருக்கோயிலில் வழிபாடு செய்தல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிவனடியாரல்லாது மற்றவர்களிடம் உண்ணாமை
- சிவனடியாருக்கு வேண்டுவன நல்கல்

என்னும் பத்துமாம்.

சிவபக்தியின் அக அடையாளங்களாவன:

- சிவபெருமானது புகழைக் கேட்கும் பொழுது மிடறு விம்முதல்
- நாத் தழுதழுத்தல்
- இதழ் துடித்தல்
- உடல் நடுங்குதல்
- உரோமம் சிலிர்த்தல்
- வியர்த்தல்
- சொல் எழாமை
- கண்ணீர் அரும்புதல்
- வாய் விட்டு அழுதல்
- மெய்ம்மறத்தல்

என்னும் பத்துமாம்.

இதனையே திருவாசகத்தில் மாணிக்கவாசகர்

**"பத்துடையீர் ஈசன் பழ அடியீர்,, பாங்குடையீர்"**

என்று பாடுகின்றார். இதனையே மேலும் விரித்து

**"மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரையார்கழற்குஎன்**
**கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பிவெதும்பியுள்ளம்**
**பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசயபோற்றியென்னும்**
**கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக்கண்டுகொள்ளே"**

பக்தியின் வெளிப்பாடுகளை ஆவணப்படுத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவும் இருந்தாலும் பக்தர்கள் என்போர் முழுநேரமும் இந்நிலையிலேயே இருப்பவர்கள் அல்லர். தமது அன்றாட கல்வி, தொழில், குடும்ப, சமூக காரியங்களுக்கு இடையே நேரம் கிடைக்கும்போது இந்த அன்பினை, பக்தியினை வெளிப்படுத்துவர், செயலில் காட்டுவர் அவ்வளவே. நாம் எல்லோருமே பக்தர்கள் என்னும் இந்தப் பிரிவுக்குள் அடங்குவோம் எனலாம். இதையும் மாணிக்கவாசகர்

**"நாடகத்தால் உன்னடியார் போல்நடித்துநான்நடுவே**
**வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும்விரைகின்றேன்**
**ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறாஅன்புனக்கென்**
**ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்எம்உடையானே"**

என்று மிகத்துல்லியமாக நமது நிலையை விபரிக்கின்றார்.

2. **முனிவர்கள்:**முனிவர்கள் என்போர் இருபத்து நான்கு மணி நேரமும், ஏழு நாட்களும், எப்பொழுதும் இதே தேடலில், செயலில், முனைப்பில் இருப்பவர்கள். காசிப முனிவர், வசிட்ட முனிவர், விசுவாமித்திர முனிவர், நாரத முனிவர் எனப் பல முனிவர்களை நாம் எமது சமய இலக்கியங்களில் காண்கின்றோம்.

3. **ரிஷிகள்:**இருடிகள் எனப்படும் ரிஷிகள் முனிவர்கள் போலவே முழுநேரமும் ஆன்மீகத் தேடலிலிலும், முயற்சியிலும், சாதனையிலும் இருந்து மெய்யின் தரிசனத்தை அது தமக்கு வெளிப்படுத்தும் அளவில் கண்டு, அனுபவிப்பவர்கள். இவர்கள் தமது அனுபவத்தை மற்றவர்களிடமும் பகிர்ந்துகொள்வார்கள். உபநிடதங்கள் முழுவதும் இவ்வாறான ரிஷிகளின் உரையாடல்களே. வேத கீதங்களும் அவ்வாறே. அவை இறைவனின் வெளிப்பாடாக இருந்தாலும் அவற்றை கண்டு அனுபவித்து வெளிப்படுத்துபவர்கள் இந்த இருடிகளே.
நாம் எமது சமய நூல்களில் ஒரு சிலரை முனிவர்கள் என்றும், ஒரு சிலரை ரிஷிகள் என்றும் கூறப்பட்டுளதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்கின்றோம். ஆனால் அகத்தியர், விசுவாமித்திரர் போன்றோரைச் சில இடங்களில் முனிவர் என்றும், வேறு சில இடங்களில் ரிஷிகள் என்றும், ஆவணப்படுத்தி யுள்ளார்கள். இது ஏனெனில் அவர்களின் வாழ்க்கையில் மெய்யின் தேடலில் இருந்தபோது அவர்கள் முனிவர்கள் மெய்யின் தரிசனத்தைப் பெற்றபொழுது அவர்கள் ரிஷிகள்.

4. **யோகிகள்:** சைவ நாற்பாதங்களாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கினுள் யோக நெறியில் நின்றோரை யோகிகள் என்பர். ஆனால் **இயமம், நியமம், பிரத்தியாகாரம், தாரணை, ஆசனம், பிராணாயாமம், தியானம், சமாதி** என்னும் எட்டுப் படிநிலைகளையுடைய அட்டாங்க யோகத்தின் இறுதிப்படிநிலை சமாதி. இது முத்தி நிலை அல்ல என்று கூறும் சித்தாந்த சைவமானது **கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல்** என்னும் நான்கு படிநிலைகளுள்ள ஞான நெறியின் இறுதிப்படி நிலையாகிய நிட்டையே முத்தி என்று சாதிக்கும். சரியை, கிரியை, யோகங்கள் ஞானத்துக்குள் இட்டுச் சென்றே முத்தியைக் கொடுப்பன என்பது சித்தாந்த சைவம்.

**"ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் சாற்றிடவும்**
**அல்லவென்னும்**
**ஊனத்தார் என கடவர்"**
**என்கின்றது சிவஞானசித்தியார்.**

முப்பத்தாறு தத்துவங்கள், கருவி, கரணங்களுடன் கூடியிருக்கும் நிலையிலேயே இவை செயலற்று நிற்க ஆன்மாவானது இறையை இவை ஒன்றினதும் சம்பந்தமோ, துணையோ இல்லாமல் நேரடியாக அனுபவிக்கும் நிலையே **நிட்டை** ஆகும். இது மின்சாரத் தொடர்புகள் இருந்தும் அதில் இயங்கும் விளக்குகள் கருவிகள் இருந்தும் பிரதான ஆழியைச் செயலிழக்கப்பண்ணினால் இவை யாவும் செயலற்றுப் போவதை ஒக்கும். இதனையே சிவயோகம் என்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவயோக மாவது சித்தசித் தென்று**
**தவயோகத் துள்புக்குத் தன்னொளி தானாய்**
**அவயோகஞ் சாரா தவன்பதி போக**
**நவயோக நந்தி நமக்களித் தானே"**
**-திருமந்திரம் 122**

சிவயோகர் சுவாமிகள் நிலை யோகநெறியின் யோகம் அல்ல. **ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம்** என்னும் சாயுச்சிய நிலைகளில் ஒன்றான ஞானத்தில் யோகம் ஆகும். ஆதலால் சதாசிவம் என்னும் இயற்பெயருடைய அவருக்கு சிவயோகர் என்னும் பெயர் பொருத்தமாக அமைந்தது.

இந்த நிலையில் சிவயோகரின் அனுபவ நிலை அவர் கண்ட **யோகக் காட்சிகள், ஞானக் காட்சிகள்** என்பன மிகத்தெளிவாக நற்சிந்தனைப் பாடல்களில் உள்ளன. நாம் காணும் காட்சி வகைகள் யாவும் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒன்றாக இருக்கலாம். இவற்றில் தெளிவை இருந்தாலே சிவயோகரின் காட்சி அனுபவப் பகிர்வுகளை நாம் அறியவும், அனுபவிக்கவும் முடியும்.

1. **வாயில் காட்சி/ பொறிக்காட்சி/ Mechanical Perception:** புலன்கள் வாயிலாக அறிவதால் இதை வாயில் காட்சி என்பர். ஆனால் இது மனதில் பதிவதுமில்லை எம்மில் எந்தவொரு நுகர்வையோ, உணர்வையோ தருவதில்லை.
2. **புலக் காட்சி/ மானதக் காட்சி/ Objective Perception:** இது புலன்கள் வழியாக கண்ட காட்சி நம் மனதில் பதிந்துள்ளது. நாம் இதை மீட்டுச் சொல்லக்கூடியதாக இருக்கும். ஆனால் இது எமது மனதில் பதிந்திருந்தாலும் எம்மில் எந்தவொரு நுகர்வையோ உணர்வையோ ஏற்படுத்துவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **தன்வேதனைக் காட்சி/ Subjective Perception:** இது புலன்கள் வழியாக கண்ட காட்சி நம் மனதில் பதிந்து நம்மில் சோகம், மகிழ்ச்சி, வருத்தம், வாட்டம், தாபம், கோபம், எரிச்சல், பொறாமை, ஆற்றாமை முதலான உணர்வுகளைத் தூண்டி நமக்கு இன்ப துன்ப உணர்வுகளைத் தருகின்றது.

4. **ஐயக் காட்சி/ Doubtful Perception:** இது புலன்கள் வழியாக கண்ட காட்சியாயினும் நாம் கண்டது இதுவா அல்லது அதுவா என்னும் ஐயத்துடன் மீட்கப்படுவது.

5. **திரிபுக் காட்சி/ Erroneous Perception:** இது புலன்கள் வழியாக கண்ட காட்சியாயினும் அது நாம் உள்ளதை உள்ளபடி அறியாமல் இன்னொன்றாகத் தவறாகக் காண்பது. இருட்டில் கயிறு பாம்பாகத் தெரிவது போல்.

6. **மாயக் காட்சி/ Illusional Perception:** இல்லாத ஒன்று இருப்பதுபோல் தோன்றுவது. ஆயினும் உண்மையை விளங்கும்போது இலகுவில் தெளிவு ஏற்படும்.

7. **பிரமைக் காட்சி/ Delusional Pderception/ Hallucinations:** இல்லாத ஒன்று இருப்பதுபோல் தோன்றுவது. ஆயினும் உண்மையை எப்படி நிதர்சனமாக விளக்கினாலும் ஏற்றுக்கொள்ளவோ மாற்றிக்கொள்ளவோ மாட்டோம். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்பது போல். இது சித்தப்பிரமை உள்ளோரிலும், போதை நிலையிலும் காணப்படுவது. இவர்களைத் தெளிவிப்பது மிகக் கடினம்.

8. **இந்திரஜாலக் காட்சி/ Magical Perception:** இல்லாத ஒன்றை இருப்பது போல் காட்டுவிப்பது. வித்தைக்காரர் செய்வது. தொப்பிக்குள் இருந்து புறா எடுப்பது இக்காட்சியாகும். சத்தியசாயி பாபா தனது கரத்தில் இருந்து விபூதி வரவழைத்துக் கொடுத்ததை ஒரு சாரார் அது இவ்வாறு இந்திரஜாலக் காட்சி என்று வாதிடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. மகேந்திரஜாலக் காட்சி/ **Mass Magical Perception:** ஒரு பெருங்கூட்டத்துக்கே இல்லாத ஒன்றை இருப்பதுபோல் காட்டுவது. அபிராமிபட்டர் 18ம் நூற்றாண்டில் திருக்கடவூரில் அபிராமி அந்தாதி பாடி அமாவாசை அன்று முழுநிலவை வரச்செய்த காட்சி அக்காலத்து மிஷனரிமார் உட்பட இந்திய ஆய்வாளர் எவராலும் பதிவு செய்யப்படவில்லை. இது இவ்வாறு மகேந்திரஜாலக் காட்சியா எனும் வினாவை எழுப்பிப் பார்க்கலாம்.

10. நிர்விகல்பக் காட்சி/ **Indeterminate Perception/ General Perception:** இது புலன்கள் வழியாக அறிவதாயினும் அதை தெளிவாக விரிவாக அறியாமல் மேலோட்டமாக அறிதலாகும்.

11. சவிகல்பக் காட்சி? **Determinate Perception/ Specific Perception:** இது புலன்கள் வழியாக அறிவதாயினும் அதனை தெளிவாக அக்கு வேறு ஆணி வேறாகப் பகுத்து ஆராய்ந்து அறிதல் ஆகும்.

12. யோகக் காட்சி: **Yogic Perception:** புலன்களுக்கு அப்பாற்பட்ட காட்சியாகும்.

**“.......................சமாதியால் மலங்கள் வாட்டி**
**பொருந்திய தேச கால இயல்பு அகல் பொருள்கள் எல்லாம்**
**இருந்து உணர்கின்ர ஞானம் யோக நல் காண்டலாமே”**
**- சிவஞானசித்தியார் சுபக்கம் 13ம் பாடல்**

**”தூர தரிசனம் சொல்லுவன் காணலாம்**
**காராரும் கண்ணி கடைஞானம் உட்பெய்தி**
**எராருந் தீபத் தெழிற்சிந்தை வைத்திடிற்**
**பாரா ருலகம் பகன்முன்ன தாமே”**

என்று திருமந்திரம் யோகக் காட்சி பற்றிக் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவயோகர் சுவாமிகளும் வருங்காலத்தில் நடைபெறப்போகும் பல விடயங்களைப் பலவிடங்களில்

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், உண்மையே எழுத, உண்மையாக எழுது"**

**"சிங்களவன் அடிக்கப்போகிறான், கந்தபுராணத்தைப் படி"**

**" யாழ்ப்பாணம் பற்றி எரியுது"**

**"தையல் நாயகித் தாயே, யாழ்ப்பாணத்தானுக்கு அரைவயிற்றுக்கஞ்சிக்காயினும் வழி காட்டம்மா"**

தற்செயலாக உதிர்த்த வார்த்தைகள் யாவும் அவர் கண்ட எதிர்கால யோகக் காட்சிகள் எனலாம்.

**"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்<br>அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி<br>ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்<br>நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன<br>இன்னுழை கதிரில் துன்அணுப் புரையச்<br>சிறிய வாகப் பெரியோன் தெரியின்...."**

என்று மாணிக்கவாசகர் 13.7 பில்லியன் வருடங்களுக்கு முன்னால் நடந்த உலகின் தோற்றத்தையும்,

**"மானுடப் பிறப்பினுள் மாதா வுதரத்து<br>ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்"**

என்று மில்லியன் கணக்கிலான விந்தணுக்கள் கரு முட்டையை ஊடுருவப் போரிட்டு அவற்றில் ஒன்று மட்டும் தப்பி உள்நுழைந்து கருக்கட்டுவதையும் கண்டு சொன்னது இந்த யோகக்காட்சியினால் என்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ஞானக் காட்சி/ **Gnostic Perception:** எங்கும் எல்லாவற்றிலும் இறையையும், இறையில் எல்லாவற்றையும் காணும் காட்சி. ஞானியர் கண்ட காட்சி. தேவார திருவாசகங்களில் திருமுறைப்பாடல்களில் மீண்டும் மீண்டும் ஆவணப்படுத்தபடும் காட்சி.

தேவாரப் பதிகங்களில் இவ்விதமான காட்சி வெளிப்பாடுகள் கொட்டிக்கிடக்கின்றன. திருநாவுக்கரசர் தமது தேவாரப் பாடலில் கூறும் ஞானக் காட்சியில் ஒன்று வருமாறு:

**"வடியேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்**
**வளர்சடைமேல் இளமதியந் தோன்றுந் தோன்றும்**
**கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றுங்**
**காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்**
**இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்**
**எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்**
**பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்**
**பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே."**

இந்தப் பதிகத்தில் உள்ள பத்துப்பாடல்களும் அப்பர் சுவாமிகளின் ஞானக்காட்சியின் பதிவுகள் ஆகும். இதே போல் சகல உயிரினங்களிலும் சிவ சக்தி வடிவமாக இறையைக் காணும் ஞானக் காட்சியையும் அப்பர் சுவாமிகள் பாடியுள்ளார்.

**"மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்**
**போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்**
**யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது**
**காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்**
**கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த பதிகத்திலுள்ள பத்து பாடல்களிலும் இந்த காட்சி வெளிப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சிவயோகர் சுவாமிகளும் தனது ஞானக்காட்சி அனுபவங்களை நற்சிந்தனைப் பாடல்களில் ஆங்காங்கே வடித்துத் தந்துள்ளார்.

**"நீறணிந்த திருமேனி பொலிந்து தோன்றும்**
**நெற்றிமேற் கண்தோன்றும் மதியந் தோன்றும்**
**ஆறணிந்த சடைதோன்றும் அம்மை தோன்றும்**
**அரைக்கசைத்த புலியாடை அசைந்து தோன்றும்**
**ஏறமர்ந்த எழில்தோன்றும் இசையுந் தோன்றும்**
**எடுத்ததிருப் பதந்தோன்றும் மழுமான் தோன்றும்**
**பேறளிக்குந் திருக்கரத்தின் பெருமை தோன்றும்**
**பிரியாமல் என்னையாள் பெருமா னார்க்கே"**

**"கறுத்திருண்ட கண்டத்தின் பெருமை தோன்றும்**
**கதிகாட்டுங் கண்ணிணைகள் கலந்து தோன்றும்**
**செறுத்தவர்தம் புரமட்ட சிரிப்புத் தோன்றும்**
**தேவர்கணம் சூழ்ந்திருக்கும் சிறப்புத் தோன்றும்**
**ஒறுத்தவர்த மென்பெல்லா முடம்பிற் றோன்றும்**
**ஒளிதோன்றும் ஓங்கார வாசி தோன்றும்**
**சிறுத்தவிடை யுமையாளோர் பாகந் தோன்றும்**
**சிவசிவா சீவன்சிவ னெனக்கண் டேனே"**

போன்ற பாடல்கள் சிவயோகர் சுவாமிகளின் ஞானக்காட்சி வெளிப்பாடுகளாகும்.

இந் நிலையை 11ம் திருமுறையில் உள்ள பட்டினத்துப் பிள்ளையார் பாடிய பாடல் ஒன்று பின்வருமாறு வர்ணிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயப்படலங் கீறித் தூய
ஞான நாட்டம் பெற்றேன்
பெற்றபின் மெய்மைய,
நின்பெருந்தன்மையும் கண்டேன்
காண்டலும், என்னையும் கண்டேன்
பிறரையும் கண்டேன்
அன்னிலைய வனைத்தும் கண்டேன்
என்னே நின்னைக் காணாமாந்தர்
தம்மையுங் காணாத் தன்மையோரே.

5. **ஞானிகள்:** ரிஷிகள் மெய்யின் தரிசனத்தைக் கண்டு, அறிந்து, அனுபவித்தாலும் அவர்கள் மெய்யை முழுமையாகக் காண்பதில்லை. தமக்கு வெளிப்படுத்தப்படும் அளவே கண்டு அனுபவித்து அவற்றை வார்த்தைகளில் வடித்திருக்கின்றார்கள். ஆனால் ஞானிகள் தமது கர்த்திருத்துவம், போத்திருத்துவம் கெட்டு, சீவ போதமும் கெட்டுச் சிவபோத நிலையில் இறையை இறையாகவே ஆகி நிற்கும் நிலையில் முழுமையாக மூழ்கித் திளைத்து அனுபவிக்கின்றார்கள். இந் நிலையில் அவர்கள் சொல் எல்லாம் இறைவன் சொல்லே அவர்கள் செயல் எல்லாம் இறைவன் செயலே. இதனைச் **சம்பந்தர்,**

**"எனதுரை தனதுரை யாக"**

என்று தனது தேவாரப்பாடலில் தெளிவாக ஆவனப்படுத்தியுள்ளார்.

**இவனுலகில் இதமகிதம் செய்த வெல்லாம்**
**இதமகிதம் இவனுக்குச் செய்தார்பால் இசையும்**
**அவனிவனாய் நின்றமுறை ஏக னாகி**
**அரன்பணியின் நின்றிடவும் அகலுங் குற்றம்**
**சிவனும்இவன் செய்தியெலாம் என்செய்தி யென்றும்**
**செய்ததெனக் கிவனுக்குச் செய்த தென்றும்**
**பவமகல உடனாகி நின்றுகொள்வன் பரிவாற்**
**பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான்செய்தேன் பிறர்செய்தார் என்னதியான் என்னும்
இக்கோணை ஞானஎரி யால்வெதுப்பி நிமிர்த்துத்
தான்செவ்வே நின்றிடஅத் தத்துவன்தான் நேரே
தனையளித்து முன்நிற்கும் வினையொளித்திட் டோடும்
நான்செய்தேன் எனுமவர்க்குத் தானங் கின்றி
நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்குங் கன்மம்
ஊன்செய்யா ஞானந்தான் உதிப்பி னல்லால்
ஒருவருக்கும் யானெனதிங் கொழியா தன்றே

என்னும் **சிவஞான சித்தியார்** பாடல்கள் இந்நிலையை எமக்கு தெளிவாக விளக்குகின்றன.

சிவயோகர் சுவாமிகளின் சில விடயங்களை நாம் பொது வெளியில் பகிர்வதில்லை. அவர் தூடண வார்த்தைகளால் சிலரைத் திட்டிக் கலைத்தது, தடி எடுத்தும் கல் எறிந்தும் ஏசிக் கலைத்தது போன்ற சிவயோகர் சுவாமிகளின் செயல்களை அவர் எந்நிலையில் நின்று செய்தார் என்பதும், அவை சரியா பிழையா என்ற வாதப்பிரதிவாதங்களும் இன்றளவும் திரைமறைவில் தொடர்கின்றன. ஞானிகளின் இந்த ஆன்மிகத்தளத்தின் பரப்பைப் பின்வரும் சிவஞானசித்தியார் பாடல்களால் நாம் புரிந்துகொள்ள முடிகின்றது.

6. **சித்தர்கள்**:சித்தர்மரபு தமிழர் பண்பாட்டுடனும், சைவசமயமரபுடனும், மரபுகடந்தும் காலங்காலமாக மருவிவந்துள்ளது. ஆனாலும் பொதுவாக சித்தர்கள் என்றால் சித்துக்கள் செய்பவர்கள் என்ற கருத்தே மக்கள் மத்தியில் நிலவிவருகின்றது. சித் என்ற வடமொழிச்சொல் அறிவு, உணர்வு, மனது, ஆன்மா என்றெல்லாம் பொருள் தரும். சித்தர்கள் என்றால் அறிவாளர், உணர்வுடையோர், மனதை அடக்கியோர், ஆன்மசித்தி பெற்றோர், ஆன்ம விடுதலை பெற்றோர் எனப்பலவாறு பொருள்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர்**
**சத்தமும் சத்த முடிவும்தம் முள்கொண்டோர்**
**நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர**
**முத்தர்தம் முத்தி முதல்முப்பத்தாறே**

என்று திருமந்திரம் சித்தர்களை இவ்வுலகில் உயிரோடு நடமாடும்பொழுதே ஆன்மவிடுதலை பெற்ற சீவன்முத்தர்களாக வரையறுக்கின்றது.

**"வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர்கணமே"**

என்று சமயதத்துவங்கள் கடந்த சமரச ஞானம் வாய்க்கப் பெற்றவர்கள் சித்தர்கள் எனத் தாயுமானார் சித்தர்களை வியந்து போற்றுகின்றார்.

சைவத்திருமுறைகளில் பத்தாவது திருமுறையாக உள்ள திருமந்திரத்தை அருளிய **திருமூலர்** இவ்வாறான ஒரு சித்தரே. திருமந்திரத்திலே சமயக்கருத்துக்களுடன், சமூக வழிகாட்டல்களும், உடல் பேணும் முறைமையும், மருத்துவ விஞ்ஞானக் கருத்துகளும் விரவியுள்ளன. தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டுவித்த இராஜராஜ சோழனை வழிப்படுத்தியது **கருவூர்ச்சித்தர்**. இவரின் சமாதி தஞ்சைப் பெரியகோயிலில் உள்ளது.

**"பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல் ஆரும்துறத்தல் அரிதரிது"**

என்று தாயுமானார் புகழ்ந்த பட்டினத்துப் பிள்ளையாரும் ஒரு சித்தரே.

**"தத்துவ மெல்லாஞ் சடமென்று தாங்கண்ட**
**வித்தகரே சித்தர் விரும்பு"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற **நற்சிந்தனை** வரிகள் சிவயோகர் சுவாமிகளின் சித்தர் மரபு ஆன்மிகத்தளத்தை எடுத்துக்காட்டுகின்றது.

எமது மரபில் பலவகையான சித்தர்களை நாம் இனங் காணக்கூடியதாகவுள்ளது.

1. **ஞானச்சித்தர்கள்**:எல்லாச்சித்தர்களும் ஞானிகள் அல்லர். இதனாலேயே சைவமரபில் எல்லாச்சித்தர்களுக்கும் குருபூசை இல்லை. பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் பாடிய திருமூலர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராக வைக்கப்பட்டு அவருக்கு குருபூசையும் கொண்டாடப்படுகின்றது. ஒன்பதாம் திருமுறையில் உள்ள சில பாடல்களை அருளிச் செய்த **திருமளிகைத்தேவர், கருவூர்த்தேவர்** ஆகியோரும் பதினோராம் திருமுறைப் பாடல்கள் பலவற்றை அருளிச் செய்த **பட்டினத்துப் பிள்ளையாரும்** ஞானச்சித்தர்கள்களாகக் கொள்ளப்படலாம். இவர்களுக்கும் ஆங்காங்கே அவர்கள் மூர்த்தங்கள் உள்ள கோவில்களில் குருபூசைகளும் உள்ளன. ஞானச்சித்தர்கள் இறையினுடைய பெருமைக்கு அல்லது மகிமைக்கு எடுத்துக்காட்டாக மட்டுமே சித்துக்கள் செய்வார்களேயன்றி தம்மை முதனிலைப்படுத்தியோ அல்லது இன்னொருவரின் இன்பதுன்பங்களுக்காவோ சித்துக்கள் செய்யமாட்டார்கள்.

2. **அட்டமாசித்தர்கள்:** இவர்கள் சித்திகள் எனப்படும் அதிமானுடச்செயல்கள் ஆற்றும் வல்லமை பெற்றவர்கள். இந்த சித்திகளில் தலையானவை அட்டமாசித்திகள். அட்டமாசித்திகளாவன,
    - **அணிமா** – சிறியதிற் சிறியதாதல்,
    - **மகிமா** – பெரியதிற் பெரியதாதல்,
    - **கரிமா** – கனத்ததிலும் கனத்ததாதல்,
    - **லகிமா** – இலேசிலும் இலேசாதல்,
    - **பிராத்தி** – விரும்பியதைப் பெறுதல்,
    - **பிரகாமியம்** – வேண்டிய இன்பம் அநுபவித்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **ஈசத்துவம்** – தலைமைத்துவம் பெறுதல்,
- **வசித்துவம்** – சகலரையும் வசியப்படுத்தல் என்னும் எட்டுமாம்.

இவர்கள் தமது முற்பிறப்பு அல்லது இப்பிறப்புகளில் செய்த ஆத்மிக சாதனைகளினாலேயே இப்பிறப்பில் இந்த சித்திகள் கைவரப்பெறுகின்றார்கள் என்று சமயநூல்கள் கூறுகின்றன.

**பரிசறிவானவர் பண்பன்அடி எனத்**
**துரிசறநாடியே தூவெளி கண்டேன்**
**அரியது எனக்கில்லை அட்டமாசித்தி**
**பெரிதருள் செய்து பிறப்பறுத்தானே**

என்று திருமூலரும் தனக்கு அட்டமாசித்திகளும் கைகூடியதைக் கூறுகின்றார்.

**"கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்**
**கரடிவெம் புலிவாயையும் கட்டலாம்**
**ஒரு சிங்கம் முதுகின்மேற் கொள்ளலாம்**
**கட்செவி எடுத்தாட்டலாம் வெந்தழலில் இரசம்வைத்து**
**ஐந்துலோகத்தையும் வேதித்து விற்றுண்ணலாம்**
**வேறொருவர் காணாமல் உலகத்துலாவலாம்**
**விண்ணவரை ஏவல்கொளலாம்**
**சந்ததமும் இளமையோடிருக்கலாம் மற்றொரு**
**சரீரத்தினும் புகுதலாம் சலமேல்நடக்கலாம்**
**கனல்மேல் இருக்கலாம் தன்னிகரில் சித்திபெறலாம்**
**சிந்தையை அடக்கியே சும்மா இருக்கிறதிறம்பெறல் அரிது."**

என்று தாயுமானார் இவர்களை விவரிக்கின்றார்.

ஆயினும் சித்தர்கள் எல்லோரும் ஞானிகளாகக் கருதப்படுவதில்லை. இவர்களுடைய சித்துக்கள் தம்மை நாடியவரின் துன்பம் துடைப்பதற்காகவோ, அல்லது தம்மை வேண்டாதவர்களை துன்புறுத்தி, பயப்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிப்படுத்துவதற்கோ அல்லது தமது பெருமைகளை வெளிப்படுத்தவோ, தமது தேவைகளை நிறைவேற்றவோ கூட செய்யப்படலாம்.

இவர்கள் தமது சித்துக்களைத் தவறாகப் பாவிக்கும்பொழுது தமது நிலையிலிருந்து கீழே விழலாம். நமது காலத்திலும் இவ்வாறு சித்தர்கள் சிலர் பொருளீட்டலிலும் பின்னர் ஊடகங்களிலும், வழக்குகளிலும் அல்லாடுவதும் இதனாலேயே.

**"யோகசாடை காட்டுவார் உயரவும் எழும்புவார்**
**வேகமாக அட்டசித்து வித்தைகற்று நெட்டுவார்**
**மோகம் கொண்டு மாதரின் மூத்திரப்பை சிக்கிப்பின்**
**பேயது பிடித்தவர்போல் பேருலகில் சாவரே"**

என்று இவர்களைப் பற்றி **சிவவாக்கியர்** என்னும் சித்தர் எச்சரிக்கின்றார்.

சிவனே முருகக்கடவுளுக்குப் பால் கொடுத்து வளர்த்த இயக்கிகள் அறுவரான கார்த்திகைப் பெண்களுக்கு அட்டமாசித்திகளை உபதேசித்த படலம் திருவிளையாடல் புராணத்தில் உள்ளது. அதிலே

**"எம்மையுணர்ந்த யோகியர்கள் இந்த சித்திகளை விரும்பாரெனினும்இச்சித்திகள் அவர்களை நிழல்போலத் தொடர்ந்து உலகத்தார்க்கு அவர்கள் பெருமைதனை உணர்த்தும்"**
என்று கூறப்படுகின்றது.

இவ்வகையான சிவயோகர் சுவாமிகளின் சித்து வெளிப்பாடுகளை **அ.ச. ஞானசம்பந்தன்** உள்ளிட்ட பல பெருமக்கள் பல இடங்களிலும் ஆவணப்படுத்தியுள்ளார்கள். யாழ்ப்பணத்தில் இருந்த யோகர் சுவாமிகள் கதிர்காமத் திருவிழாவில் எடுத்த புகைப்படம் ஒன்றிலும் காணப்பட்டமை, பலருக்கு வருங்கால விடயங்களை உரைத்தது, பலரின் நோய்கள் தீர்த்தமை, இந்தியாவில் சுற்றுப்பயணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபோது இங்கு கொழும்புத்துறை சிவயோகர் ஆச்சிரமத்துக்கு வந்த தவில் வித்துவான் அவர் இல்லாத நிலையிலும் இங்கு தவில் வாசித்ததை இந்தியாவில் இருந்துகொண்டே **"நட்டுவப் பிள்ளை வெளுத்து வாங்கிறார்"** என்று சொன்னமை போன்ற எண்ணற்ற சித்துக்களை அவரின் வாழ்க்கை வரலாற்றில் நாம் காண்கின்றோம். ஆனால் சிவயோகர் சுவாமிகள் இவற்றையெல்லாம் ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளவில்லை என்பது அவர் தம்மிடம் வந்த சிலரை **"என்ன சாத்திரம் பார்க்கவா இங்கே வந்தனீ?** என்று ஏசிக் கலைத்த சம்பவங்களும் சிவயோகர் சுவாமிகளும் அட்டமாசித்துகளும் கைவந்த சித்தரே என்பதையும் ஆனால் அவர் இவற்றை ஒரு பொருட்டாக மதித்ததே இல்லை என்பதையும் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

3. **காயச்சித்தர்கள்:**காயம் என்றால் உடல். இவர்கள் தான் தமிழர்களின் தனித்துவமான சித்த மருத்துவ நூல்களையும், உடல் ஓம்பும் வழிகளையும் தந்தவர்கள். மூலிகைகளை மருந்துகளாகப் பாவிக்கும் ஆயுர்வேத மருத்துவத்திலிருந்து மாறுபட்டு கந்தகம், பாதரசம், தங்கம், இரும்பு போன்றவற்றின் இரசாயனப் பதார்த்தங்களை சித்த மருத்துவத்தினூடாக முதன்முதலில் மருந்துகளாக அறிமுகப்படுத்தியவர்கள் சித்தர்களே. இன்றைய அலோபதி என்னும் மேலைத்தேய ஆங்கில மருத்துவத்தில் பாவிக்கும் பல மருந்துகள் இவ்வாறான இரசாயனப் பதார்த்தங்களே. நுண்ணுயிர் கொல்லிகளான அன்ரி பயோட்டிக் மருந்துகள்

4. கண்டறியப்படுவதற்கு முன்னர் வெட்டை எனப்படும் சிபிலிஸ் போன்ற பால்வினை நோய்களுக்கு மருந்தாக பாதரசம் பாவிக்கப்பட்டு வந்தது. இன்றும் சில மூட்டுவாத நோய்களுக்கு தங்கவேதிகளை மருந்தாகப் பாவிக்கின்றார்கள். அயச்செந்தூரம் என்பது அன்றைய சித்தமருத்துவத்தின் இரும்புச்சத்து மாத்திரைகள். ஆகவே காயச்சித்தர்களை நாம் இன்றைய இரசாயன மருந்துகளின் முன்னோடிகள் எனலாம். சித்தர் பாடல்களையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தமருத்துவ நூல்களையும் பார்க்கும்பொழுது இவற்றை ஆக்கிய போகர், தேரையர், அகத்தியர்(தமிழ் இலக்கணம் செய்த தொல்காப்பியருக்கு முந்தைய அகத்தியர் வேறு) போன்றவர்கள் இவ்வாறான காயச்சித்தர்களே என்று தெரிகின்றது. இவர்களில் சிலர் சாகாமருந்து, மூவாமருந்து பற்றியும் கூறிச்சென்றுள்ளார்கள்.

சிவயோகர் சுவாமிகளும் உடல் காக்கும் மருத்துவ உத்திகள் பலவற்றையும் ஆங்காங்கு அடியவர்களுக்குக் கூறிச் சென்றுள்ளார். தினமும் வெந்தயக் குழம்பு வைத்துச் சாப்பிடு என்று அவர் கூறியதாக ஒரு அம்மையார் சொன்னார்.

**உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்**
**உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புள்ளே உத்தமன் கோயில் கொண்டானென்று**
**உடம்பினையானிருந்து ஓம்புகின்றேனே**

என்ற பாடலால் உடலை ஓம்பும் நோக்கத்தை விளக்கும் திருமூலர்

**அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்**
**மடக்கொடியாரொடு மந்தணம் கொண்டார்**
**இடப்பக்கமே இறை நொந்தது என்றார்**
**கிடக்கப்படுத்தார்கிடந் தொழிந்தாரே**

என்ற பாடலால் இருதய நோயான மாரடைப்பால் மாண்டு போவதை வர்ணிக்கின்றார்.

**மாதாஉதரம்மலம்மிகில்மந்தனாம்**
**மாதாஉதரம்சலம்மிகில்மூங்கையாம்**
**மாதாஉதரம்இரண்டொக்கில்கண்ணில்லை**
**மாதாஉதரத்தில்வந்தகுழவிக்கே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாடலால் கர்ப்பகாலத்தில் கருப்பையில் நீர் கோர்த்தநிலை (polyhydamniosis) வளரும் சிசுவின் மூளை விருத்தியைப் பாதிக்கும் மருத்துவ உண்மையையும், நீட்டித்த பிரசவகாலத்தினால் (prolonged labour) ஏற்படும் சிசுத்தவிப்பின் (foetal distress) அறிகுறியாக கருப்பையிலே சிசுவின் மலம்கழியும் நிலையினால் (meconeum aspiration) பிற்கால நரம்புத்தொகுதி விருத்தி பாதிக்கப்பட்டு பேச்சு விருத்தி முடக்கப்படும் அபாயத்தையும், இவ்விரண்டும் கூடினால் பார்வை கூடப் பாதிக்கப்படலாம் என்பதையும் எச்சரிக்கின்றார்.

**பாய்கின்ற வாயு குறையிற் குறளாகும்**
**பாய்கின்ற வாயு இளைக்கின் முடமாகும்**
**பாய்கின்ற வாயு நடுப்படிற் கூனாகும்**
**பாய்கின்ற வாயுமா தர்க்கில்லை பார்க்கிலே**

என்ற பாடலால் திருமூலர் நீட்டித்த பிரசவகாலத்தில் உள்ளிருக்கும் சிசுவுக்கு பிராணவாயு குறைவுபடுவதினாலும், இடையறுக்கப்படுவதினாலும், துண்டிக்கப்படுவதினாலும் (foetal hypoxia) ஏற்படுகின்ற மூளைப்பாதிப்பையும் (hypoxic encephalopathy) உடற்குறைபாடுகளையும் (cerebral palsy) விளக்குவதோடு இது ஆண் குழந்தைகளையே அதிகம் பாதிக்கின்றது என்றும் கூறுகின்றார்.

**கண்டனும் கண்டியும் காதல் செய்யோகத்து**
**மண்டலம் கொண்டு இருபாலும் வெளிநிற்கும்**
**வண்டியை மேற் கொண்டு வான் நீர்உருட்டிடத்**
**தண்டு ஒரு காலும் தளராது அங்கமே**

என்ற திருமந்திரப் பாடல் ஆண் பெண் புணர்ச்சி நீட்டிப்புக்கான வழிவகைகளைக் கூறுகின்றது. சித்தர்கள் சிலர் இரும்பை அல்லது உலோகங்களைத் தங்கமாக்கும் இரசவாத இரசாயன ஆராய்ச்சியிலும் தமது காலத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழித்திருக்கின்றார்கள். சிவனே இவ்வாறு சித்தராக வந்து இரசவாதம் செய்தபடலமும் திருவிளையாடற் புராணத்திலே உள்ளது.

**4.சாமுசித்தர்கள்:** சமய சாதனைகளாகிய சரியை, கிரியை, யோகங்கள் ஞானத்தைக் காட்டியல்லாமல் நேரடியாக முத்தியைத் தரமாட்டா என்பது எமது சைவமரபு. இதையே சிவஞானமாபாடியம் செய்த சிவஞானசுவாமிகள்

**"மேசரியை கிரியை யோகங்கள் மேலாம் நன்னெறியாகிய ஞானத்தைக்காட்டியல்லது வீடுபேற்றைக் கொடாவாகலான்"**

என்று சிவஞானமாபாடியத்தில் கூறிப்போந்தார்.

இவ்வாறு தமது முந்தைய பிறப்புகளிலே சரியை, கிரியை, யோகமாம் சாதனைகளைச் செய்து முற்றியவர்கள் இப்பிறப்பில் ஞானிகளாகப் பிறப்பார்கள். இது இறைவன் உலக மற்றும் மக்களின் நன்மைக்காக செய்விப்பது. இவர்களையே அவதாரங்கள் என்பர். சம்பந்தர், அப்பர், சுந்தரர் முதலானோர் இவ்வாறானவர்கள் என்பது அவர்களுடைய தேவார மற்றும் பெரியபுராண வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து தெரிகின்றது. இவர்கள் **சாமுசித்தர்கள்** எனப்படுவர்.

**5.புரட்சிச்சித்தர்கள்** இந்த புரட்சிச் சித்தர்களின் ஆன்மிகப் பாடல்களில் வைதிக சமயமரபு முறைகளைப் பழித்தும், இழித்தும், சாடியும் கூறுகின்ற சமூகப் புரட்சிக் கருத்துக்கள் விரவியிருக்கும். பட்டினத்தார் (திருமுறைபாடிய பட்டினத்தார் வேறு), சிவவாக்கியர் போன்றோரின் பாடல்களில் இவற்றைக் காணலாம்.

**"நட்ட கல்லைத் தெய்வமென்று நாலுபுட்பம் சாத்தியே**
**சுற்றி வந்து முணமுணென்று சொல்லுமந்திரம்ஏதடா**
**நட்ட கல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்**
**சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ"**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சிவவாக்கியர் பாடல் சிவாஜிகணேசன் முதன்முதல் நடித்து வெளிவந்த பராசக்தி திரைப் படத்திலும் கையாளப்பட்டிருந்தது.

**"ஐயிரண்டு திங்களாய் அடங்கி நின்ற தூமைதான்**
**கையிரண்டு காலிரண்டு கண்ணிரண்டும் ஆகியே**
**மெய்திரண்டு சத்தமாய் விளங்கி ரச கந்தமும்**
**துய்ய காயம் ஆனதும் சொல்லுகின்ற தூமையே"**

என்ற சிவாக்கியர் பாடலும் கமலஹாசனின் "ஆளவந்தான்" திரைப்படத்தில் எடுத்தாளப்பட்டுள்ளது. தூமை என்றால் தீட்டு. காயம் என்றால் உடம்பு.

**"தாய்மொழிபேணார் நாட்டினைநினையார்**
**தம்கிளை நண்பருக்கிரங்கார்**
**தூயநல் அன்பால் உயிர்க்கெலாம் நெகிழார்**
**துடிப்புறும் ஏழையர்க்ககருளார்**
**போய்மலைஏறி வெறுங்கருங்கற்கே**
**பொன்முடி முத்தணி புனைவார்**
**ஏய்ந்தபுன் மடமை இதுகொலோசமயம்**
**ஏழையர்க்கிரங்கு மென்நெஞ்சே"**

என்ற தடங்கண்சித்தர் பாடலும் இன்றைய காலகட்டத்துக்குத் தேவையான, சிந்தனையைத் தூண்டுகின்ற சித்தர்பாடல்களில் ஒன்று. ஞானச்சித்தராகிய திருமூலரின் திருமந்திரத்திலும் கூட இவ்வாறான புரட்சிக்கருத்துக்கள் விரவியுள்ளன.

என்ற திருமந்திரப்பாடல் வெற்றுப் பிராமணர்களைச் சாடுகின்றது.

**குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்**
**குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்**
**குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்**
**குருடும் குருடும் குழிவிழுமாறே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்ற திருமந்திரப்பாடல் போலிக்குருமார்களைச் சாடுகின்றது.**

புரட்சிக்கவி பாரதியாரையும் ஒரு புரட்சிச்சித்தராகக் கொள்ளலாம்.

**6.அநாதிசித்தர்:** இது எல்லாம் வல்ல சித்தனான இறைவனைக் குறிக்கும். இறைவனும் ஒரு சித்தனே. எல்லாம் வல்லசித்தன். இயல்பாகவே கட்டுகள் இல்லாதசித்தன். ஆதிச்சித்தருக்கும் ஆதியான அநாதிசித்தன். சிவனே மதுரையில் எல்லாம் வல்ல சித்தராக வந்த படலமும், கல்லானைக்குக் கரும்பு கொடுத்த படலமும் திருவிளையாடற் புராணத்தில் உள்ளது. இவ்வாறு கரும்பை வாங்கித்தின்ற கல்லானையின் சிலை சொக்கநாதர் சந்நிதி வாசலில் இன்றும் உள்ளது.

ஆகவே சித்தர்கள் அனைவரையுமோ அல்லது அவர்களது பாடல்கள் அனைத்தையுமோ அதிலுள்ள கருத்துக்களையோ, போதனைகளையோ அப்படியே நாம் பிரமாணமாக எடுக்க இயலாது. கொள்ள வேண்டியதைக் கொண்டு தள்ளவேண்டியதைத்தள்ள வேண்டியது நமது கடன். இதற்கு இவ்வகையான வகைப்படுத்தும் அணுகுமுறை பயனுள்ளதாக அமையும் . இதற்கு மேலாக மனிதர்களாகிய நமக்குள்ள ஆறாவது அறிவாகிய பகுத்தறிவும், நமது இட்டப்படிதேர்ந்து நடக்கும் சுதந்திரமும் எம்மை வழிநடத்த நாம் வழிவிட வேண்டும்.

**7.ஆச்சாரியார்கள்:** ஆச்சாரியார் என்பது குருமாரை. ஞான வழியில் நிட்டை கூடினால் ஒழிய இன்னொருவருக்கு ஞான உபதேசம் செய்யலாகது என்பது உயர் சைவ மரபு. அதே போல் கிரியா நெறியில் உள்ள குருமாரும் அதற்குத்தக்க ஒழுக்கம், அறிவு, நியமங்களுடன் இருக்க வேண்டும். ஞானம், கிரியை ஆகிய இரு நெறிகளிலும் போலிக்குருமாரை இனங்கண்டு விலக்குதல் பற்றியும் திருமூலர் தெளிவாக ஆவணப்படுத்தியுள்ளார். சித்தாந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களில் **ஆச்சாரிய இலட்சணம்** என்னும் பகுதிகளில் இவை மேலும் விரிவாக உள்ளன.

இவற்றைத் திருமூலர்

- **அந்தண ராவோர் அறுதொழில் பூண்டுளோர்
செந்தழல் ஓம்பிமுப் போதும் நியமஞ்செய்
தந்தவ நற்கரு மத்துநின் றாங்கிட்டுச்
சந்தியும் ஓதிச் சடங்கறுப் போர்களே**

- **பத்தியும்இன்றித்தனிஞானம்தான்இன்றி
ஒத்தவிடையம்விட்டுஓரும்உணர்வின்றி
பத்தியும்இன்றிப்பரன்உண்மைஇன்றிஊண்
பித்தேறும்மூடர்பிராமணர்தாம்அன்றே**

- **சத்தியம் இன்றித் தனிஞானந் தானின்றி
ஒத்த விடயம்விட் டோரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரன்உண்மை யுமின்றிப்
பித்தேறும் மூடர் பிராமணர் தாம்அன்றே**

- **நூலுஞ் சிகையும் நுவலிற் பிரமமோ
நூலது கார்ப்பாச நுண்சிகை கேசமாம்
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்
நூலுடை அந்தணர் காணும் நுவலிலே .**

- **வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டுந்தம் வேட்கை ஒழிந்திலர்
வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம்
வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட் டாரே**

- **ஞானமி லாதார் சடைசிகை நூல்நண்ணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானிகள் போல நடிக்கின் றவர்தம்மை
ஞானிக ளாலே நரபதி சோதித்து
ஞானமுண் டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே

- மூடங் கெடாதோர் சிகைநூல் முதற்கொள்ளில்
வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனும்
பீடொன் றிலனாகும் ஆதலாற் பேர்த்துணர்ந்
தாடம் பரநூற் சிகையறுத் தால்நன்றே

- பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னைஅர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லாவியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாம்என்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே .

**8.அவதாரங்கள்:**அவதாரம் என்பது மேலிருந்து கீழே இறங்கி வருதல். மேலான நிலையில் உள்ள இறைவன் கீழே இறங்கி வந்து நம்மிடையே பிறந்து நமக்கு அருள் செய்கின்றான் என்பது வைணவர்களின் கொள்கையாகும். ஆனால் அது உலக்கை தேய்ந்து உளிப்பிடியானது போல் பலர் நானே சிவனின் அவதாரம், சக்தியின் அவதாரம், கிருஷ்ணரின், அனுமானின் அவதாரம் என்று சொல்லிப் பிரகடனப்படுத்தி உலா வரும் அளவுக்குத் தாழ்ந்துவிட்டது. சைவத்தில் முழுமுதற் கடவுள் பிறப்பதே இல்லை. சிவ குடும்பத்தின் சக்தி,விநாயகர், முருகன், வீரபத்திரர், பத்திர காளி, வைரவர் முதலான தெய்வங்களும் ஒருபோதுமே பிறப்பதில்லை என்பது சைவத்தின் முடிந்த முடிபு. ஆனால் மேலான நிலையில் உள்ள ஆன்மாக்கள் இறைவன் சித்தப்படி நமக்கு வழி காட்டுவதற்காக இவ்வுலகில் வந்து பிறப்பதை அவதாரம் என்று சைவம் கூறும். மூன்று நாயன்மார்களின் பிறப்பையும் பெரியபுராணம் அவதாரம் என்றே கூறுகின்றது. அதிலும் சுந்தரரின் முந்தைய நிலையை அவர் கைலாசத்தில் சிவனுக்கு அணுக்கத் தொண்டராக இருந்த நிலையைத் தெளிவாகக் கூறுகின்றது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபுராணம். இதே சுந்தரர் சிவனின் ஆடி விம்பத்தில் இருந்து தோன்றியதாகவும், திருப்பாற்கடலைக் கடைந்தபொழுது தோன்றிய ஆலகால விடத்தை இறைவன் ஆணைப்படி தனது கரங்களில் எடுத்து வந்து சிவனிடம் தந்ததாகவும் ஆதலால் ஆலால சுந்தரர் என்னும் பெயர் பெற்றதாகவும் திருவிளையாடற் புராணம் கூறுகின்றது. சுந்தரர் அவதார நோக்கத்தை பெரியபுராணம் பின்வருமாறு கூறுகின்றது.

**"மாத வம்செய்த தென்றிசை வாழ்ந்திடத்**
**தீதி லாத்திருத் தொண்டத் தொகைதரப்**
**போது வாரவர் மேல்மனம் போக்கிடக்**
**காதல் மாதருங் காட்சியிற் கண்ணினார்"**

**9.வைநாயிகர் (முமுக்ஷீக்கள்)**:வையாயிகர் என்பது ஆன்ம நாட்டம் உடையவர்கள், ஆன்ம விசாரம் உடையவர்களைக் குறிக்கும். வேதாந்த மரபில் இவர்களை முத்தியில் நாட்டமுடையவர்கள் என்னும் பொருளில் முமுக்சுக்கள் என்பர். தமிழில் முத்தி காமிகள் எனலாம். இவர்களைச் சத்திநிபாதர் என்று கூறும் சித்தாந்தசைவ மரபானது இறையினது அருட்சக்தி எமது ஆன்மாவில் படிகின்ற சத்திநிபாத தரத்தைப் பொறுத்து இவர்களின் ஈடுபாடும் வேறுபடும் என்று வகைப்படுத்துகின்றது.

**10.பிராகிருதர்**:பிராகிருதர் என்றால் ஆன்மிக நாட்டமோ, ஆர்வமோ சிறிதும் இல்லாது உலகியல் வாழ்வில் மூழ்கி இருப்பவர்கள்.

மொத்தத்தில் ஆன்மிகத்தளம் என்பது ஆன்மிகம் அல்ல மெய் பற்றிய வெளிப்படையான அல்லது சுமுகமான எந்தவிதமான தேடல்கள், கருதுகோள்கள் அற்ற பிராகிருதரில் இருந்து ஆன்மா, கடவுள் உலகம் பற்றிய பல்வேறுபட்ட கருதுகோள்களையும், அனுபவங்களையும், நூல்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாகக்கொண்ட ஆன்மிகவாதிகள் வரை உள்ளடக்கிய பரந்த வெளியாகும்.

இதிலே

- கடவுள், ஆன்மா, கர்மா என்பவற்றின் இருப்பையே மொத்தமாக நிராகரித்து மறுதலிக்கும் **உலகாயதரும்**, இன்றைய **பகுத்தறிவுவாதிகளும்**,
- கடவுளின் இருப்பை மறுதலித்து கர்மா மற்றும் மறுபிறவி எனபவற்றை ஏற்றுக்கொண்ட **சமணர், பௌத்தர்களும்**,
- ஆன்மா, கர்மா, மறுபிறவி என்பவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டாலும் இவையெல்லாம் ஆன்மா என்னும் ஒன்றின் ஒற்றைத்தன்மையின் மாயா வெளிபாடே என்று வலியுறுத்தும் மாயாவாதிகள் என்னும் **வேதாந்திகளும்**,
- கடவுள், ஆன்மா, கர்மா ஆகியவற்றை ஏற்றுகொண்டாலும் மறுபிறவியை மறுதலிக்கும் ஆபிரஹாமிய மதங்களைச் சார்ந்த **யூதர்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்களும்**,
- தம்மையும் மீறிய சக்திகள் அல்லது ஆவிகள் ஒன்றோ பலவோ நம்மைக் கட்டுப்படுத்துகின்றன, தண்டிக்கின்றன, நமக்கு நன்மை செய்கின்றன என்று சொல்லும் **நாட்டார் வழிபாட்டு மரபினரும்**
- ஆன்ம விசாரத்தில் திளைக்கின்ற **வைநாயிகரும்**,
- மோட்சம் என்னும் ஆன்மவிட்டுதலையில் தீவிர நாட்டமுள்ள **முமுக்ஷீக்கள்**,
- இவற்றில் எவற்றிலுமே விசாரம் இல்லாத **பிராகிருதரும்**,
- கடந்தகாலத்தில் வந்து இருந்து மறைந்துபோன பல்வேறு சமயங்கள் தத்துவங்களைச் சார்ந்தோரும்,
- வருங்காலத்தில் வரவிருக்கின்ற வரப்போகின்ற பல்வேறு சமயங்கள் தத்துவங்களைச் சார்ந்தோரும்,
- நமது அறிவுப் பரப்புக்குள் எட்டாமையால் இவற்றில் விடுபட்ட பிரிவினர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய அனைவரும் உள்வாங்கப்பட்ட மிகப்பரந்த தளமே ஆன்மிகத்தளம் ஆகும். இதிலே நாம் ஒவ்வொருவரும் ஏதோவொரு பக்கத்திலே, ஏதோவொரு மூலையிலே, ஏதோவொரு கோணத்திலே இருந்து இயங்கிக் கொண்டிருக்கின்றோம் இதில் யாருமே விதிவிலக்கு அல்ல. நம்மில் யாருமே இந்த தளத்துக்கு வெளியே இல்லை என்பதே உண்மை. மேலோட்டமாகப் பார்க்கின்றபொழுது இத்தளம் தெளிவான வரையறைகளையுடைய பல உட்பிரிவுகளையுடைய கட்டுமானமாகத் தோன்றினாலும் இது உண்மையில் நெகிழ்ச்சியும், இசைவாக்கமும் உள்ள சமூக அசைவைக் கொண்ட உயிர்ப்பான இயங்கியல் தளம் ஆகும்.

**சிவயோகர் சுவாமிகளின் ஆன்மிகத்தளம் இவை யாவற்றையும் உள்வாங்கிய தளமாகும். இது பற்றிய எமது அணுகுதல், அறிதல், புரிதல், பகிர்தல் எம்மையும் இத்தளத்தில் இயங்குநிலையில் வைத்திருந்து நகர்த்தும் தன்மையதாகும்.**

**"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு"**

என்று **மெய்யுணர்தல்** அதிகாரத்தில் உள்ள **வள்ளுவர்** வாக்கே இவ்வுரையின் நோக்கமும் பயனும் எனலாம்.

**"ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
யாரறிவார் இந்த அகலமும் நீளமும்
பேரறியாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறியாமை விளம்புகின்றேனே."**

- திருமந்திரம் 95ம் பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Dr. Lambotharan was born and raised in Vaddukoddai, a village in the Jaffna district of Sri Lanka. He completed his primary education at Thirugnanasambantha Vidyasalai and secondary education at Jaffna College, Vaddukoddai. In 1991, he graduated with a medical degree from the University of Jaffna.

After working in Colombo post-graduation, Dr. Lambotharan moved to New Zealand in 1994, where he excelled in his medical career. In 2002, he immigrated to Canada, where he has since been practicing as a Family Physician alongside his wife.

Dr. Lambotharan's spiritual journey began at the age of sixteen when he received his initiatory Siva-deeksha from Putthur Vaitheewara Kurukkal. He further advanced his Siva-deeksha and Siva Puja under the guidance of Chunnakam Somaskantha Kurukkal in Canada. He was personally instructed in Saiva Siddhanta by Professor Shanmugavel Aiya of the Thiruvavaduthurai Adheenam. In 2005, he received higher deekshas and advanced instructions from his Jnana Guru, Chidamparam Krishnamurti Aiya of the Kovaiputhur Sivakkudil tradition. Since then, he has dedicated his life to sharing the wisdom of Saiva Siddhanta through his writings, teachings, speeches, and discussions, both in Canada and internationally, following the direction of his Guru.

Dr. Lambotharan hails from a lineage of Saiva scholars. His grandfather was a renowned Saiva Siddhanta scholar and former President of the Saiva Paripalana Sabhai in Jaffna. He also presided over the Saiva Siddhanta Conference organized by the Saiva Siddhanta Maha Samajam (now Saiva Siddhanta Peravai) in Chennai in 1953.

Dr. Lambotharan is the founder of the Saiva Siddhanta Peedam, Canada and its international wing, Knowing Our Roots (www.knowingourroots.com). Both organizations are committed to bringing the ancient wisdom of Saiva Siddhanta—the pinnacle of Dravidian intellect—to the modern world. He achieves this by training youth teachers, conducting classes for children and youth, organizing Satsang meetings, hosting interactive discussions, and facilitating study circles to explore Upanishads, Saiva Siddhanta, the sacred Thirumurai, and the Natchinthanai of Siva Yogar Swamikal.

Dr. Lambotharan has produced over a thousand YouTube videos, authored numerous articles, and hosted radio and television shows. His published works include:

- Sivapurana of Thiruvasagam – The Essence of Saivism
- Return of Sivagamas – A Saiva Renaissance
- Spiritual Questions with Meaningful Answers
- A Rejoinder to the Criticism on Arumuga Navalar
- Saiva Vina Vidai of Arumuga Navalar – With Extensive Explanatory Notes

His English commentary on Sivajnana Siddhiyar is awaiting publication.

Dr. Lambotharan is also a co-founder and former president of the International Medical Health Organization-Canada (IMHO-Canada) (www.imhocanada.org), a charity performing significant work in Sri Lanka. He is the founder of the Toronto Tamil Sangam (www.torontotamilsangam.ca) and a co-founder and former Board Member of the Tamil Community Centre Project (www.tamilcentre.ca) in Toronto.

He conducts daily Zoom classes and meetings, and his activities can be accessed via social media and his website at www.knowingourroots.com.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Print at Eeswaa, Jaffna.